வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 38 | சுடர்: 28 | கதிர்: 296 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 2, புதன் 18.09.2013



தேர்தல் 2013
வவுனியா மாவட்டம்
இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர்
M.M. ரதன் (ஆசிரியர்)
இலங்கை தமிழரசுக்கட்சி
இளைஞர அணித் தலைவர்

8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


## வடக்கில் ஏகோபித்த ஆதரவை கூட்டமைப்புக்கு வழங்குங்கள்

### தமிழ் சிவில் சமூகம் சார்பில் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.18

"வடக்குத் தேர்தலில் அரசு சார்புக் கட்சியொன்று ஆட்சி அமைக்கும் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை இந்தத் தேர்தலில் வழங்க வேண்டும்" என்று தமிழ் சிவில் சமூகம் சார்பில் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு சார்பில் வெளியிடப் பட்ட அறிக்கையில், "தமக்கெதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களுக்கு எதிராகத் தமது எதிர்ப்பைக் காட் டுவதற்காகத் தமிழ் மக்கள் தேர்தல்களில் பங்கு பற்றவேண்டும்

33

## கூட்டமைப்பினர் மீது நேற்று மறவன்புலோவில் தாக்குதல்

### காயமுற்ற இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, செப்.18

தேர்தல் பிரசாரப் பணியில் ஈடு பட்ட கூட்டமைப்பின் ஆதரவா ளர்கள் இனந் தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காய மடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ் வாய்க்கிழமை தென்மராட்சி தெற்கு மறவன் புலோவில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆதரவாளர்கள் இப் பகுதி யில் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு வந்த இனந்தெரியாத

33

**வல்லிபுர மாயவரின் சிறப்பிதழ் உள்ளே**

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9.15 மணிக்கு நடைபெறும். அதனையொட்டி உதயனில் நான்கு பக்கங்களில் சிறப் பிதழ் வெளியாகியுள்ளது. செய்தி 23 ஆம் பக் கத்தில்

# வடக்கை 2 வருடங்களில் பௌத்தமயமாக்கத் திட்டம்

## பொதுபல சேனா நேற்று சூளுரைப்பு

## வெளியிடப்பட்டது திட்ட வரைவு

கொழும்பு, செப்பெரம்பர் 18

"இன்னும் இரண்டு வருடங்க ளுக்குள் வடக்கு, கிழக்கு பகுதி களை முற்று முழுதாக பௌத்த மயமாக்கு வோம். இலங்கை முழுவதையும் பௌத்த கொள் கையின் கீழ் ஒரே சமூகமாக மாற்றும் திட்டத்தில் அங்கமா கவே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது." - என்று நேற்று சூளுரைத்தது பொது பல சேனா.

இதற்காக பௌத்த அமைப்பு கள் ஒன்றிணைந்து உடனடி யாக நடைமுறைப்படுத்தவுள்ள வேலைத்திட்டத்தையும் பொது பலசேனா நேற்று உத்தியோ கபூர்வமாக வெளியிட்டது.

"பௌத்த தர்மத்தைப் பாது காக்க நாட்டிலுள்ள சிங்கள பௌத்தர்கள் அனைவரும் சர் வமதக் கொள்கையை எதிர்த்த அநாகாரிக தர்மபால போல் செயற்பட வேண்டும். இதற்கு அனைத்து பௌத்தர்களும் அர சியல் கட்சிப் பேதங்களைக் கடந்து எமக்கு ஆதரவளிக்க வேண்டும்" என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலபொடஅத்தே ஞானா சாரதேரர் அழைப்பு விடுத்தார்.

தென்னிலங்கையில் பள்ளி வாசல்கள் மீது தாக்குதல் நடத்தி தன்னு டைய பௌத்த வெறியை வெளிப் படுத்தி வந்த அமைப்பான பொது பலசேனா தமிழர் தாயகப் பகுதி களிலும் பாயத் தயாராகி விட்ட தையே நேற்றைய அறிவிப்பு வெளிப் படுத்தி உள்ளது.

பௌத்த, சிங்கள மறுமலர்ச் சியாளரும், எழுத்தாளருமான அநாகரிக தர்மபாலவின் 149 ஆவது ஜனன தினத்தை யொட்டி கொழும்பு, கிருலப் பனையி லுள்ள போதி பௌத்த நிலை யத்தில் நேற்று நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்

33

**திட்ட வெளியீடு**

- ஒரு இலட்சம் தர்மபாலகர்கள்
- 2 ஆயிரம் பிக்குகள் அணி
- 2 ஆயிரம் பொதுக் கூட்டங்கள்
- 10 இலட்சம் கையேடுகள்
- 10 ஆயிரம் விகாரைகளில் நடவடிக்கை
- 5 மாபெரும் யாத்திரைகள்

## குருநகரில் இன்று கூட்டமைப்பின் மாபெரும் கூட்டம்

யாழ்ப்பாணம்.செப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மாபெரும் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று புதன்கிழமை குருநகரில் கூட்ட மைப்பின் யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோ னிப்பிள்ளை மேரியம்மா தலை மையில் இடம்பெறவுள்ளது.

குருநகர் கலையரங்க மைதா னத்தில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறும் இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர்கள், முதலமைச் சர், வேட்பாளர் க.வி.விக்னேஸ் வரன் மற்றும் வேட்பாளர்கள் பலரும் உரையாற்றுவர்.(ஓ-5)

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் ஆசி பெறுவதற்கும் தடை

### இந்து குருமார் ஒன்றியத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்.செப்ரெம்பர் 18

வடக்குத் தேர்தலில் போட்டியி டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வேட்பாளர்கள் இந்து மத குருமார்களிடம் ஆசிபெறுவதற் கும் நேற்று யாழ்ப்பாணத்தில் தடை விதிக்கப்பட்டது.

யாழ். சர்வதேச இந்துக் குரு மார் ஒன்றியத்துக்குகூட்டமைப்பு வேட்பாளர்கள் ஆசிபெறச்சென்ற வேளை, அவர்களுக்கு ஆசி வழங்க விடாமல் இந்துக் குரு மார்களை தடுத்து நிறுத்தியுள் ளார் யாழ். பிரதேச செயலர் திரு மதி சுகுணரதி தெய்வேந்திரன்.

இந்தச் செயற்பாடானது மத சுதந்திரத்தை மழுங்கடிக்கும் நடவடிக்கை என்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் கண்டனம் தெரிவித்

33

## கோபாலசுவாமி தலைமையில் யாழ்ப்பாணம் வந்தது குழு

### வடக்குத் தேர்தலை கண்காணிக்க

யாழ்ப்பாணம்,செப்.18

வடமாகாண சபைத் தேர் தலைக் கண்காணிப்பதற்காக இந்தியாவின் முன்னாள் தேர் தல் ஆணையாளர் கோபால சுவாமி தலைமையில் 7 பேர் கொண்ட குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு நேற்று செவ் வாய்க்கிழமை வருகை தந் துள்ளனர்.

இவர்கள் பல்வேறு தரப்பின ரையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள நிலை யில், இன்று புதன் கிழமை முதல் கடமை யில் ஈடுபடுவர் என்று

33

## இராமநாதன் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.18

துப்பாக்கியைப் பயன்படுத்தி கொலைக்குற்றம் புரிய முயற் சித்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராமநாதன் யாழ். மேல் நீதி மன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக் கப்பட்டார்.

33


வடமாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்
"ஆணை கொடுங்கள் ஆதரவளித்து.."

அங்கஜன் இராமநாதன்
MBA (International) B.Eng (Hons)
vote
1

ஐக்கிய தேசியக் கட்சி

தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்
5
5
(சி-11268)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிதேவதையின் கண்ணிலேயே மண்ணைத் தூவிய அமைச்சர் டக்ளஸுக்கு நீதித்துறையின் தீர்ப்பு என்ன?

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கேள்வி



மக்கள் மீது சண்டித்தனம் புரிந்து வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்போது நீதி தேவதையின் கண்ணிலேயே மண்ணைத் தூவி சவால் விட்டுள்ளார். இந்தச் செயலுக்கு வழங்கப்படும் தீர்ப்புத் தான் நீதியின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையைத் தீர்மானிக்கப்போகிறது. இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன்.

இணுவில் கந்தசுவாமி கோயில் முன்றலில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் மக்கள் மீதே தனது அராஜகத்தையும் சண்டித்தனத்தையும் விடுத்துவந்தார். இப்போது அதே சண்டித்தனத்தையும் சவாலையும் நீதித்துறைக்கும் காட்ட ஆரம்பித்துவிட்டார். இதற்கு நல்ல உதாரணமாக நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

உதயன் பத்திரிகை மீது போடப்பட்டிருந்த இந்த வழக்கில் டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றில் விளக்கமளிப்பதற்கு முன்னிலையாகவில்லை. அவர் முன்னிலையாகாததால் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறினார். அதற்கு அமைச்சர் டக்ளஸ் உடல் நலக் குறைவாலேயே மன்றுக்கு வரமுடியவில்லை என்று அவரின் சட்டத்தரணி கூறினார். இது தொடர்பான மருத்துவச் சான்றுகளையும் சமர்ப்பிக்க ஒத்துக்கொண்டார். ஆனால் இவ்வாறு சட்டத்தரணி மன்றில் கூறிக்கொண்டிருந்த அதே சமயத்தில் அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவோடு சேர்ந்து யாழ்.பல்கலைக்கழக கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிக் கொண்டிருந்தார். இதனை ஊடகங்கள் புகைப்பட ஆதாரத்தோடு செய்தி வெளியிட்டுள்ளன.

"நான் ஜனாதிபதி ஆள். என்னை எதுவும் செய்ய முடியாது" என்று இதன் மூலம் நீதித் துறைக்கே சவால் விட்டுள்ளார் அமைச்சர் டக்ளஸ். உண்மையில் இந்தச் செயல் ஒரு பாரதூரமான நீதிமன்ற அவமதிப்பாகும். இதற்கு நீதித்துறை என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது? என்ன தீர்ப்பு வழங்கப்போகின்றது என்பதை மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். மக்கள் நீதித்துறை மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கை சரியா, பிழையா என்பதை நீதிமன்றத் தீர்ப்பே தீர்மானிக்கப் போகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களோடு இருந்து சேவை புரிவதாக கூறிவருகிறார். உண்மை தான். அவர் மக்களோடு நின்றுகொண்டு அதே மக்களை இராணுவத்துக்குக் காட்டிக்கொடுத்து வருகிறார். மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளைத் தடுத்து தனது பொக்கெற்றுக்குள் போட்டுக் கொள்கிறார். இதுவும் மக்கள் சேவைதானே.

தமிழ் மக்கள் ஏமாளிகள் அல்லர். மாகாண சபைத் தேர்தலில் அவர்கள் துரோகக்கும்பலுக்கு வழங்கப்போகும் தீர்ப்பு ஜனாதிபதிக்கு ஒரு அதிர்ச்சிச் செய்தியாக இருக்கவேண்டும். கூட்டமைப்பையும் முதலமைச்சர் வேட்பாளரையும் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மக்கள் வெற்றிபெற வைப்பார்கள் - என்றார். (ஙு-2)

# ஆசியாவின் போதைப்பொருள் ஆச்சரியமாகின்றது இலங்கை


## ரணில் விக்கிரமசிங்க கிண்டல்

கொழும்பு,செப் 18

ஆசியாவின் போதைப்பொருள் ஆச்சரியமாக இலங்கை மாற்றமடையும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல் நாடாக இலங்கை மாற்றமடைந்துள்ளது. முன்பெல்லாம் சிறிய அளவில் கடத்தப்பட்ட போதைப்பொருள் இன்று, கொள்கலன்களில் கடத்தப்படுகின்றது. அதிகளவிலான ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. மாற்றத்தை ஏற்படுத்தச் சனிக்கிழமை தேர்தலை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்காக மக்கள் வாக்களிக்க வேண்யது அவசியமானது. கட்சிக்கு வாக்களித்தால் மட்டுமே அரசைக் கவிழ்க்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். (த)



ஐ.நா. முன்றலில் தீக்குளித்து உயிர்நீத்த செந்தில் குமரனுக்கு அஞ்சலி செலுத்தும் கவனவீர்ப்பு நிகழ்வு நேற்று ஐ.நா. தலைமையகம் முன்பாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

# உப தவிசாளருக்கு அச்சுறுத்தல்; சபையில் கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.18

சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் க.யோகராசா, இராணுவத்தினராலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் கு.சர்வானந்தாவாலும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்குச்சாவகச்சேரி சபை கண்டனத் தீர் மானம் நிறைவேற்றியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, சபையின் உப தவிசாளர் க.யோகராசாவின் வீட்டுக்குச் சென்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடும் கு.சர்வானந்தாமற்றும் இராணுவத்தினர் அவரைத் தேடியுள்ளனர்.

அங்கு அவர் இல்லாமையினால் அவரது தந்தையாரிடம், உங்களது மகனை வெட்டிக் கொல்லுவோம் என்று கொலை அச்சுறுத்தல் செய்து மிரட்டியுள்ளனர்.

இதன் பின்னர் வீட்டுக்கு வந்த உப தவிசாளர் விடயத்தை தவிசாளருக்கு, தெரியப்படுத்தியுள்ளார். இருப்பினும் அவர் வீட்டை விட்டு வெளியேறாதவாறு இராணுவத்தினர் நின்றுள்ளனர்.

இதனையடுத்து மறுநாள் காலையில் சென்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டை சபை வன்மையாகக் கண்டிப்பதாகவும், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (த-5)

# கனடாவுக்குள் நுழைவோருக்கு அறிமுகமாகிறது புதிய சட்டம்

மொன்றியல்,செப் 18

இலங்கை உட்பட பல நாடுகளிலில் இருந்து செல்லும் பயணிகள் தொடர்பாகப் புதிய சட்டமொன்றை இந்த ஆண்டின் இறுதியில் கனடா அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கனேடிய ஊடகம் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த முறையின் கீழ், மாணவர் மற்றும் தொழிலாளர் விசாவுக்கு விண்ணப்பிக்கும் போது, கைரேகை மற்றும் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட தொடக்கமாக ஒக்ரோபர் 23ஆம் திகதி அல்பேனியா, அல்ஜீரியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, எரித்திரியா, லிபியா, நைஜீரியா, சவுதி அரேபியா, சோமாலியா, தென் சூடான், சூடான் மற்றும் டுனீஷியா ஆகிய நாடுகளிலும் இறுதியாக டிசெம்பர் 11ஆம் திகதி இலங்கையில் தொடங்கவுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், இந்தப் புள்ளியியல் மூலம் பிற நாடுகளில் இருவர் வருகை தந்து விஸா இல்லாமல் தங்கியிருப்போர், அகதிகள், மற்றும் முறையான ஆவணங்கள் இல்லாமல் பிற நாடுகளில் தங்கியிருக்கும் மக்களின் விகிதங்களைக் கண்டு கொள்ளலாம் எனத் தெரிவித் துள்ளனர்.

கடந்த ஆண்டு, கனடாவின் குடிவரவு முறைமை பாதுகாத்தலின் ஒரு பகுதியாக எல்லை நுழைவில் இறுக்கமான சட்டம் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# போதைப்பொருள் இறக்குமதியின் பின்னணியில் ஆளும் கட்சியினர்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு.செப் 18

அண்மையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் எத்தனோல் திரவம் ஆகியவற்றின் பின்னணியில் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் இருப்பதாக ஜே.வி.பி குற்றஞ்சுமத்தியுள்ளது.

இரண்டு கொள்கலன்களில் எத்தனோல் திரவம் மீட்கப்பட்டமை தொடர்பில் இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாகவே இலங்கை அரசு மாகாணசபைத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தது. தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கிய காலம் முதல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக தேர்தல் வன்முறைகளில் தொடர்புபட்டுள்ளது. நாட்டில் சட்டம், ஒழுங்கு குழியில் விழுந்துள்ளது. ஊழல், மோசடி அதிகரித்துள்ளது. மோசடி செய்பவர்களை அரசு பாதுகாக்கிறது.

மோசடி செய்பவர்களுக்கு உயர் பதவி வழங்கும் நாடு இது. அரசு இன்று இனவாதம், மதவாதத்தை தூண்டிவிடுகிறது. தேசியக் கொடி பிடித்து இல்லாத பிரச்சினைகளை அரசு ஏற்படுத்துகிறது. ஒருபுறம் தேசியக் கொடி பற்றி கதைத்துக் கொண்டு மறுபுறம் பாலியல், கெசினோ தொழிலை கொண்டு வருகிறது- என்றார். (த)

# தயாசிறியை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்றவன் நானே



கொழும்பு,செப் 18

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் தயாசிறி ஜயசேகரவை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்றது நானே என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உடுநுவர பிரதேசத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது கட்சியில் எழுந்து நிற்கும் அனைவரையும் அடிக்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தயாசிறியுடன் மேலும் 4 பேர் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ளும் பொருட்டு வந்ததாகவும் ஆனால் அவர்கள் இடையில் நின்றதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும் எதிர்காலத்தில் அவர்களும் ஆளும் கட்சியுடன் இணைந்துகொள்வர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# வேட்பாளர் சர்வானந்தாவுக்கு பிரதேச சபையில் கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.18

சாவகச்சேரி பிரதேச சபையின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் அவதூறு பரப்பிவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் கு.சர்வானந்தாவின் செயற்பாடுகளைத் கண்டித்துச் சாவகச்சேரிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத் தொடர் சபை மண்டபத்தில் தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

"சபையின் எதிரணி கட்சி உறுப்பினரும், வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட் பாளராகப் போட்டி யிடு பவருமான கு.சர்வானந்தா தனது பரப்புரைக் கூட்டங்க ளில் எந்தவித ஆதாரங்களும் இன்றி சபை மீது அவதூறு பரப்பி வருகின்றார்.

சபையில் ஊழல்கள் நிறைந்த நிர்வாகம் என்று எந்தவித ஆதாரமும் இன்றி பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார். அவ்வாறான ஊழல்கள் இடம்பெறின் சபைக்கு கூறாமல் சபையைப் பற்றி பொய் பிரசாரம் செய்வதை சபை வன்மையாகக் கண்டிக்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-5)

# எதிர்வரும் நவம்பருக்கு முன் சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு,செப் 18

2013 ஆம் ஆண்டு நவம்பருக்கு முன்னர் சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடலாமென அரசு நேற்று செவ்வாய்க்கிழமை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னதாகக் கைச்சாத்திடப்படுமென அரசு எதிர்பார்க்கின்றது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (த)

# கூட்டமைப்பும், நாடு கடந்த அரசும் தமிழீழம் அமைப்பதற்கே முயற்சி

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

கொழும்பு,செப் 18

இலங்கைத் தீவை இரண்டு படுத்தித் தனித்தமிழீழம் அமைப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாடுகடந்த தமிழீழ அரசும் செயற்படுகின்றன என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வட மாகாணசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தன்னாட்சி அதிகாரம் வடக்கு-கிழக்கு இணைப்பு உட்பட தனித் தமிழீழத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து விடயங்களையும் முன்வைத்துள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டில் இயங்கிவரும் நாடு கடந்த தமிழீழ அரசு வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு கோரியிருப்பதும் தனித் தமிழீழத்தை அடைவதற்கான நோக்கமெனவும் அவர் கூறினார்.

இனவாத சக்திக்கு அதிகாரம் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளதெனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனவாதசக்தியெனவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாகாண சபை
# தேர்தல்
உதயன் சிறப்புக் கண்ணோட்டம்




உதயன் செப்ரெம்பர் 18 2013 புதன்கிழமை பக்கங்கள்: இருபது


## இலங்கைத் தாய்மாரும், மகள்களும்

வட மாகாண சபை தேர்தல் கண்காணிப்பு

உங்கள் ஜனநாயக உரிமையை பெண்கள் பாதுகாப்பார்கள்.

தேர்தல் வன்முறைகள், தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்.

இந்த நோக்கத்துக்காக உருவாக்கப் பட்டுள்ள எமது விசேட கருமபீடத்துக்கு பெண் வேட்பாளர்களும், பெண் வாக்காளர்களும் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவு:

தொ.பே: 0777 298 387 (லோகேஸ்வரி)
0773 442 895 (நளினி)
தொலைநகல்: 0094112822375/ 0094112231152.

பத்மினி வீரசூரிய
ஆளுநர்

## Mothers and Daughters of Lanka

**Provincial Council Election Monitoring**

Women , protect your democratic rights.

Rise up against election violence,violation of election laws and harassments.

We invite women candidates and voters to send your complaints to our special unit dedicated for this purpose.

MDL Women's Complaint Unit :
Mobile numbers.

0777298387 Logeswary
0773442895 Nalini
Fax. 094 112 822 375 / 2231 152

**Padmini Weerasooriya - Convenor MDL**


# தமிழ் மக்கள் ஆணை வழங்கினால் படைகளை படிப்படியாக அகற்றுவோம்

## முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், செப்.18


மக்கள் வழங்கும் ஆணையைக் கொண்டு வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தைப் படிப்படியாக வெளியேற்றுவோம். இதற்கான பலம் மக்களிடமே உள்ளது.

ஒரு புலியை அழிக்க 50 இராணுவத்தினர் தேவை என்று கூறிய இலங்கை அரசு இன்று ஐந்து பொது மக்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற வகையில் வடக்கில் இராணுவத்தினரை நிலை கொள்ளச் செய்துள்ளது. இதற்கான தேவை என்ன? என்று கேள்வி எழுப்பினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரும் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன்.

ஏழாலை வடக்கில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப் பட்டது என்று கூறுகிறது அரசு. அப்படியானால் இங்கு எதற்கு இராணுவம். இதுதான் எங்கள் கேள்வி.

மக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவம் இங்குள்ளது என்று ஜனாதிபதி கூறுகின்றார். சிவில் பாதுகாப்புக்கு பொலிஸாரே போதும். இராணுவப் பாதுகாப்பு அவசியமற்ற ஒன்று. இங்கே சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இதனால் ஒவ் வொரு ஐந்து பொது மக்களுக்கும் தலா ஓர் இராணுவ வீரர் என்ற வகையில் குறிக்கப்பட்டுள்ளனர்.



பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு அவர்கள் இன்று எமது மக்களையே துன்பப்படுத்துகின்றனர். இராணுவமே இங்கு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

எமது மக்களின் காணிகளை கபளீகரம் செய்துள்ளனர். சொந்தக் காணிகளுக்கும் வீடுகளுக்கும் செல்லவிடாமல் தடுக்கின்றனர். இங்கே இராணுவ ஆட்சியே நடக்கின்றது.

இந்த நிலையில் எப்படி நீதியும் நியாயமுமான தேர்தல் நடைபெறும். அதனால் தான் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும். அல்லது வெளியேற்றப்பட வேண்டும் என்கின்றோம்.

இராணுவத்தை வெளியேயற்றும் முக்கிய பொறுப்பு இப்போது மக்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்கள் ஆணையிட்டால் அது நிச்சயமாக நடைபெறும். நாம் மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் கட்டம் கட்டமாக இராணுவத்தை வெளியேற்றுவோம் -என்றார். (ஐ-2)


## தேர்தல் கண்காணிப்பு அலுவலகங்கள் பவ்ரல்

**யாழ்ப்பாணம்:**
இல.81, குருசோ றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0724 965396

**கிளிநொச்சி:**
இல.01, அம்பாள்குளம்,
கிளிநொச்சி.
தொ.பே: 077 391 3970

**மன்னார்:**
இல.78/1, எஸ்பிளானட் றோட்,
மன்னார்.
தொ.பே: 077 692 4547

**முல்லைத்தீவு:**
சென் மத்தியூஸ் தேவாலய வீதி,
தண்ணீரூற்று
தொ.பே: 077 3297604

**வவுனியா:**
இல. 73D, 2ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.
தொ.பே: 077 603 4650



## மாகாணசபைத் தேர்தல் - 2013

**யாழ் மாவட்டம்**

**அன்பான யாழ் மாவட்டம் வாழ் தமிழ் பேசும் மக்களே!**

வடக்கு மாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவாகி - உங்கள் பிரதிநிதியாகப் பணியாற்றுவதற்கான ஆணையைக் கோரி இத்தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் **“வீடு”** சின்னத்தின் கீழ் **‘15’** ஆம் இலக்கத்தில், உங்கள் முன்னால் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகிய நான் நிற்கிறேன்.

ஒவ்வொரு வீடாக வருகை தந்து, உங்கள் ஒவ்வொருவரையும் நேரடியாக சந்தித்து உரையாடி உங்கள் கருத்துக்களை அறிந்துகொள்ளவதுடன் எனது கருத்துக்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதுதான் எனது விருப்பம். இருந்தாலும், தேர்தல் பிரச்சார காலத்தில் அவ்வாறு செய்வதற்கு இந்த நாட்டின் சட்டம் இடமளிக்கவில்லை; தேர்தலுக்கு முன்னர் நட்புடன் உங்களை நாட போதிய நேரமும் கைவசம் இல்லை. அதனாலேயே - உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த கோரிக்கை மடலை நான் வரைகின்றேன்.

உங்கள் வாக்குகளை எனக்கு அளித்து, உங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்குங்கள். மாகாண சபை உறுப்பினராகத் தெரிவாகி - மக்கள் சேவைக்கான நியமனத்தை நான் பெற்றதன் பின்னால் - உங்களால் இலகுவில் அணுகக்கூடிய ஒருவனாக நேர்மையுடன் நான் எனது கடமைகளை ஆற்றுவேன் என்ற உறுதியுரையை என்னால் உங்களுக்கு வழங்க முடியும்.

உங்களோடு உறவாடி - உங்களது விவகாரங்களில் அக்கறை செலுத்தி - உங்களது பிரச்சனைகளில் எனது வரையறைகளுக்கு உட்பட்டுத் தோள் கொடுத்து நிற்பதற்கு ஏற்ற சிறந்த ஒரு பொறிமுறையை உருவாக்கி, உங்களோடு இணைந்து நான் செயற்படுவேன் என்ற வாக்குறுதியையும் நான் உங்களுக்குத் தருகிறேன். உங்களுக்கான பணிகளை எதிர்காலத்தில் நான் என்னாலான அனைத்து வளங்களையும் பயன்படுத்தி ஆற்றுவேன் என்ற எனது வாக்கில் நம்பிக்கை வைத்து, **“வீடு”** சின்னத்திற்கும், எனது **“15”** ஆம் இலக்கத்திற்கும் புள்ளடிகளை இட்டு உங்கள் வாக்குகளை எனக்கு வழங்குமாறு உங்களிடம் அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**இவ்வண்ணம், உளமார்ந்த நன்றிகளுடன்,**

த.சித்தார்த்தன், (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.)




**தர்மலிங்கம் சித்தார்த்தன்**
**(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)**

X 15

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவர் யார்?



## இவர்தான்

# சீ.வீ.கே.சிவஞானம்

**(துணைப் பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி
முன்னாள் மாநகர சபை ஆணையாளர்)**

- **இவர் நமது வீட்டில் நிற்பவர்**
- **ஓர் எட்டில் நிற்பவர்**
- **உங்களுக்காகச் செயற்படுபவர்**
- **உங்களுக்குத் தெரிந்தவர்**
- **உங்களைத் தெரிந்தவர்**

**தமிழ் மக்கள் தமது தாயகத்தில் வாழ்வுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை யுத்தத்திற்கு முகம்கொடுத்த கடந்த 30 வருடத்திற்கு மேலான காலத்தில், விமானத் தாக்குதலில் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் போன்றவற்றால் உயிர் இழப்புக்கள், இடம்பெயர்வுகள் மற்றும் உடைமைகளை இழந்தபொழுது யாழ். மண்ணில் பல்வேறு உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அசையாது நின்று மக்களை இன்னல்களில் இருந்து பாதுகாத்து, தமிழ் இனத்தின் அரசியல் அபிலாஷைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமை என்ற அரசியல் தளத்தில் நின்று உலகத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் குரல் கொடுத்தார்.**

30 வருட உள்ளூராட்சி சேவையில் 15 வருடகாலம் யாழ். மாநகர சபை ஆணையாளராக பணியாற்றியபோது யுத்த அழிவிற்கு முகம்கொடுத்த நம் சொந்த மண்ணில் இருந்தே அரும்பணியாற்றியதோடு 01.06.1981 அன்று நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல்களின்போது அரச காவல்துறையினராலும் காடையர்களாலும் எரிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்தைப் புனரமைப்புச் செய்து 04.06.1984 அன்று தமிழரசுக் கட்சியின் தானைத் தளபதி அமரர் அமிர்தலிங்கம் மூலம் மீளத் திறந்துவைத்த ஆளுமைமிக்க C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றிபெறச் செய்வோம்.

**- யாழ்.மாநகர மக்கள்.**

1997 - 2003 காலப்பகுதியில் சேவைக் காலத்திற்கு முன்பு இளைப்பாறிய பின் யாழ்.மாவட்டத்தின் கூட்டுறவுத் துறையில் பணியாற்றி யாழ். ப.நோ.கூ.சங்கத் தலைவராகவும் ப.நோ.கூ.சங்க சமாசத் தலைவராகவும்இருந்த வேளை யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையில் கப்பல் மூலம் அவற்றைத் தருவித்து மக்களுக்கு வழங்கிய திறமைமிக்க C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றி பெறச் செய்வோம்.

**- தீவக மக்கள்.**

நிர்வாகத் திறமை, மும்மொழிகளில் பேச்சாற்றல் போன்ற ஆளுமையின் காரணமாக 1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்க உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தலைமையதிகாரியாக பிரேரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டமை இவரின் ஆளுமைக்கும் சேவைக்கும் கிடைத்த அங்கீகாரம் ஆகும். தேர்தல் காலத்தில் மட்டும் அல்லாமல் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் எல்லா வேளைகளிலும் மக்களுக்காக நின்று பாடுபடும் அனுபவம்மிக்க C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றிபெறச் செய்வோம்.

**- நல்லூர் மக்கள்.**

ஓய்வூதியர்களின் பிரச்சினைகளை உரியவர்களுக்கு தெரியப்படுத்தி அவர்களுக்காக குரல் கொடுப்பவர். யுத்தவேளையில் விவசாயிகளின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கப்பல் மூலம் தென்னிலங்கைக்கு அனுப்பி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்ததோடு உயர் பாதுகாப்பு வலயத்தை முற்றாக நீக்குதல், திட்டமிட்ட காணி சுவீகரிப்புக்கு எதிராக ஜனநாயக வழியில் நின்று அன்றிலிருந்து இன்றுவரை போராடும் நாகரிகமான பேச்சாற்றல்மிக்க C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றிபெறச் செய்வோம்.

**- வலிகாமம் மக்கள்.**

தமிழரசுக் கட்சியால் நடத்தப்படும் அனைத்து ஜனநாயக வழிப்போராட்டங்களில் பங்குபற்றி மக்களுக்காகக் குரல் கொடுத்ததோடு உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்களுக்காக மக்களோடு கடந்த பல தசாப்த காலங்களாக சேவையாற்றும் சிறந்த மக்கள் சேவையாளன் C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றிபெறச் செய்வோம்.


**- வடமராட்சி, தென்மராட்சி மக்கள்.**


மக்கள் சேவையை உள்ளூர் சமூக அமைப்புகளுடனும் சர்வதேச புலம்பெயர் தமிழ் சமூகத்துடனும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகளுடனும் தொடர்புகளை வலுப்படுத்தி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் மற்றும் தடுப்புமுகாம்களில்' இருந்து விடுவிக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கல்வி மேம்பாட்டுக்கும் அரும்பணியாற்றிவரும் சிறந்த சமூக சேவையாளன் C.V.K. அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோக வெற்றிபெறச் செய்வோம்.

**- புலம்பெயர் மக்கள்.**

## வட மாகாணசபைத் தேர்தல் - 2013

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)**






| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிந்தது... 'கட்' அவுட்....



கிளிநொச்சி நகர்ப்பகுதியில் ஏ-9 வீதியில் அரசுதரப்பு தேர்தல் 'கட்அவுட்' சாய்ந்து கிடக்கிறது. (ஐ)

# வழித் தேங்காயை எம்மீது அடிக்கும் அரசை வடக்கில் இருந்து விரட்டுவோம்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

கொழும்புத்துறை, செப்.18
உரிமைகளை அழித்துவிட்டு அபிவிருத்தி அரசியல் பேசி அரசு தமிழ் மக்களிடம் வாக்கு வேட்டையாடத் துடிக்கிறது.

இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளைக் கொண்டு அபிவிருத்திகளைச் செய்துவிட்டு அரசு தாமே அபி விருத்தியாளர்கள் என்று கூச்சலிடுகிறது. இது வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடிப்பது போன்றது. அரசு என்றால் மக்களுக்கு சேவையாற்றவேண்டியது கடமை. இதை வைத்து அரசியல் செய்யக்கூடாது. இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சபை உறுப்பி னர் துரைராசசிங்கம். பாஷையூரில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது;

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வடக்கு, கிழக்கு மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக சொல்ல முடியாத சோகத்துடன் துடித்துக் கொண்டிருந்தபோது தெற்கில் வெடி கொளுத்தி ஆனந்தக் கூத்தாடி வெண்பொங்கல் பரிமாறிக் கொண்டாடினர்.

எங்கள் வீடுகளில் நடந்த துன்பங்களை வெற்றி விழாவாகக் கொண்டாடினர். இவற்றில் ஜனாதிபதியும் கலந்துகொண்டார். இவரே இன்று "நான் உங்கள் நண்பன். என்னை நம்புங்கள்" என தமிழில் பகட்டு மொழி பேசி நடித்துக் கொண்டிருக்கிறார்.

எமது உரிமைகளைத் தர முடியாது. அபி விருத்தியைத் தருவேன் என்கிறார் ஜனாதிபதி. ஏனைய மாகாண சபைகளின் தேர்தல் பரப்புரையில் அபிவிருத்திப் பேச்சு இல்லை. வட மாகாணத் தில் மட்டும் அபிவிருத்திப் பரப்புரை நடக்கிறது. ஏனெனில் அபிவிருத்தியைக் காட்டி வடக்கின் ஆட்சியைக் கைப்பற்றி கிழக்கு மாகாண சபை போன்று பொம்மை மாகாண நிர்வாகத்தை அமைக்க இவர்கள் முயற்சிக்கின்றனர்.

பாரம்பரிய தேசத்தை எமது கலை, பண்பாட்டு விழுமியங்களை நிலைநிறுத்தும் புத்திஜீவிகளே வடக்கு மக்கள். 60 வருடங்களுக்கு மேலாக அழியாத வெற்றிச் சின்னமாக விளங்கும் வீட்டுச் சின்னத்துக்கு நீங்கள் வாக்களித்து தமிழ்த் தேசியத்தின் நிலைத்திருப்புக்காக வாக்களியுங்கள்-என்றார். (ஐ-135)

# உரிமையை வென்றெடுக்க ஒற்றுமையை வெளிப்படுத்துக

## கூட்டமைப்பின் கிளிநொச்சி வேட்பாளர் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 18
தமிழ் மக்களது ஒன்றுபட்ட சக்தியை வெளிப் படுத்தவும், தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கவும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களி யுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் க.திருலோகமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காடு பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழினம், சிங்கள ஆட்சியாளர்களால் சொல்லொணாத் துயரத்தைச் சந்தித்ததுடன் இன்று நிர்க்கதியான நிலையில் உள்ளது. கிளிநொச்சி வாழ் மக்களை எவ்வளவு தூரம் ஒடுக்க முடியுமோ அவ்வளவுதூரம் அரசும், ஆதரவுக் குழுக்களும் ஒடுக்கி வருகின்றன.

தமிழ் மக்களுக்கு தொடர்ந்து துன்பத்தையே கொடுத்து வந்த சிங்கள அரசு என்ன உரிமை யோடு வாக்குக் கேட்கிறது? அரசின் துரோகங்களை மக்கள் மறக்கவில்லை. நடைபெறவுள்ள தேர்தலில் அது தெரியவரும். எனவே நீங்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழரின் உரிமையை நிலை நாட்டவேண்டும்-என்றார். (ஐ)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
அகிம்சையையும்
சகிப்புத் தன்மையையும் மேம்படுத்தும்
'யுனெஸ்கோ' விருதுபெற்ற
இலங்கையின் ஒரேயொரு அரசியல்வாதி
வீ.ஆனந்தசங்கரி
தமிழரசுக் கட்சி X 2



மாகாணசபைத் தேர்தல் - 2013
முல்லைத்தீவு மாவட்டம்
X 3



கந்தையா சிவநேசன் (பவன்),J.P
என்றும் மண்காத்து
மக்களின் நலன்காத்து நிற்கும்
முல்லை மைந்தனை ஆதரிப்போம்...
- முல்லை வாழ் மக்கள்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

வட மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்
தமிழரசுக் கட்சி
வேட்பாளர்
கடமைகளை கண்ணியமாக செய்யும் நண்பா
களத்திலும் கண்ணியமாக செயல்பட்டு
தமிழன் என்ற உரிமையை
உலகுக்கு தெரியப்படுத்து
X 5



இம்மானுவல் ஆனல்ட்
[B.A (Phil) Hons, MSS Limra International (USA), AMTC Limra International (USA)
(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர்,
முன்னாள் யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவரும்,
விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
www.emmanuvelarnold.blogsport.com
பொங்குதமிழ் நாயகன்
வெற்றி பெற எங்கள் வாழ்த்துக்கள் ஊழியர், நண்பர்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மீனவர்களுக்காக எப்போதும் குரல் கொடுப்பது கூட்டமைப்பே

## கூட்டமைப்பின் மாகாண சபை வேட்பாளர் சுப்பிரமணியம்

நேர்காணல்
டிலீப்

விநாயகமூர்த்தி சுப்பிரமணியம். மாதகலைச் சேர்ந்தவர். க.பொ.த சாதரண தரம் வரை தனது கல்வியைப்பூர்த்தி செய்து, 1972 ஆம் ஆண்டு மாதகல் ஐக்கிய கடற்தொழிலாளர் சங்கத்தில் முதன் முதலாகச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், அபிவிருத்திச் சங்கம் சனசமூக நிலையம், சமாசங்கள் என்பவற்றில் தலைவராக இருந்த இவர் தற்போது வட மாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு இடப்பெயர்ந்து , முள்ளிவாய்க்கால் வரையில் சென்று சொந்த மண் திரும்பிய இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.தற்போது கூட்டமைப்பின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கியுள்ள இவருடனான நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

*கே வடமாகாணசபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவதற்கான காரணம் ?*

உண்மையில் எமது பிரதேசசபைத் தலைவர் அ.ஜெபநேசனும் எமது பகுதி இளைஞர்களும், கடற்தொழில் சங்கங்களுமே என்னை இந்தத் தேர்தலில் களமிறக்கினர்.

எமது கரையோர மக்களுக்கு உதவ வேண்டும். அது அரசியலினூடானதாகவும் இருக்கலாம் அல்லது ஏனைய வழிகளினூடாகவோ அமையலாம். அதற்காகவே மாகாண சபையில் போட்டியிடுகிறேன்.

*கே: மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றால் மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கின்றீர்கள் ?*

இதற்குமுன் நான் மூன்று விடயங்களைச்சுட்டிக்காட்டவேண்டும்.

ஒன்று, தமிழீழ விடுதலைப் புலிகள் மண்ணை மீட்பதற்காகவும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காகவும், உயிர் உடைமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தீவிரமாகப் போராடிய போராளிகளே தவிர அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை.

இரண்டாவது, இளைஞர்கள் படித்த படிப்புக்கும், பெற்ற பட்டத்துக்கும் அரசால் வழங்கப்பட வேண்டியதே வேலை வாய்ப்பு. அது அரசின் கடமை. ஆனால் இன்றைக்கும் இளைஞர்கள் பலர் பட்டம் பெற்று வேலையில்லா பட்டதாரியாக அலைந்து கொண்டிருக்கும் போது படிக்காதவர்கள் பின்கதவால் சென்று சிலரின் தயவில் நியமனங்களைப் பெற்று வருகிறார்கள். அந்தளவுக்கு அரசியல் இளைஞர்களின் வாழ்வை கெடுக்கத் தொடங்கிவிட்டது.

மூன்றாவது, எமது உரிமைக்காக ஆயிரம் ஆயிரம் வீரர்கள் களமாடி உயிர்துறந்த மண்ணில் சிலர் சலுகைகளைக் காட்டி வாக்குகளை பெறுவதற்கு முனைகிறார்கள்.

எங்களுக்கு சர்வதேச நாடுகள் முழுமையான கோழியைத் தந்தாலும் இங்கிருப்பவர்கள் அதனை உரித்து தசையை எல்லாம் எடுத்துவிட்டு வெறும் எலும்புத் துண்டைத் தருகின்றனர். அந்த எலும்புத் துண்டுக்காக நாங்கள் ஏன் விலை போகவேண்டும்? இவர்கள் போட்டுத்தந்த வீதிகளில் எங்கள் இளைஞர்களது இரத்தம் சிந்திக் கிடக்கின்றது. அவர்களது வீர உடல்கள் புதையுண்டு இருக்கின்றன. அந்த வீதியில் தமிழ் மக்கள் எப்படி வீறுநடை போட்டுச் சென்று வெற்றிலைக்கு வாக்குப் போடுவார்கள்?

நான் வெற்றி பெற்றால் மக்களுக்கு வீட்டைக்கட்டித் தருவேன் அதைச் செய்வேன் என்று புளுக விரும்பவில்லை. மாகாணசபை அதிகாரத்துக்கு உட்பட்டு அனைத்தையும் செய்து தருவேன்.

*கடற்தொழில் சமூகத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுப்பதில்லையென்று அரச தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச் சாட்டை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீரகள் ?*

இது ஒரு அப்பட்டமான பொய். நாங்கள் இலங்கை அரசுடன் மீனவர்களுக்காக கூட்டமைப்பின் சார்பில் பலமுறை போராடினோம். இந்திய - இலங்கை மீனவர்கள் கலந்துரையாடல் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் இடம்பெற்றது. அப்போத எங்களுடைய கடலை விட்டுஇந்தியாவை போகச் சொல்லி கேளுங்கள் என்று



அழுத்தம் கொடுத்தோம். இலங்கை அரசு அதற்கு தலை சாய்க்க வில்லை. கடற்படையினர் பாதுகாப்புக்கு இருக்கின்றனர், இந்திய றோலர் படகுகள் வராது என்று இலங்கை அரசு தெரிவித்தது. ஆனால் இதெல்லாம் ஒரு கண்துடைப்பு வேலையே. இதே போன்று தான் கூட்டமைப்பு மீனவர்களுக்காக குரல் கொடுப்பதில்லை என்ற கட்டுக்கதையையும் அரசு அவிழ்த்து விட்டுள்ளது.

எங்களுடைய கடல் வளங்களை அழித்து, எங்கள் மக்களை வறுமைக்குள் தள்ள இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து போட்ட திட்டமே இலங்கை அரசின் நடவடிக்கை. இவ்வாறானதொரு நிலையில் கடற்தொழில் சமூகத்துக்காக தான் மட்டுமே பாடுபட்டதாக டக்ளஸ் தேவானந்தா சொல்வது அப்பட்டமான பொய்.

நாங்கள் எமது எல்லைப் பகுதிக்குள் வந்த இந்திய ரோலர்களைப் பிடித்து வைத்த போது, உடனடியாக வந்து அதனை விடுவித்தவர் இதே டக்ளஸ் தான். அத்துமீறி வந்தவர்களை ஏன் விடுவித்தார்? இதில் இருந்தே அவரது இரட்டை வேடத்தை மக்களும் மீனவர்களும் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் தான் மக்களுக்காக செய்யும் பணிகளை தம்பட்டம் அடிப்பதில்லை ஏனெனில் நாங்கள் தமிழர்கள். தமிழர்களுக்காகத் தான் நாங்கள் கொண்டிருக்கின்றோம். அதை மற்றவர்கள் போல வாக்குகளுக்காக விளம்பரப் படுத்த வேண்டிய தேவையில்லை. விரும்பவுமில்லை.


நீதிக்காகப் போராடும் பெண்ணுக்கொரு வாக்கு

நடைபெறுகின்ற மாகாணசபைத் தேர்தலில் பெண்ணொருவருக்கும் உங்கள் வாக்கினை அளித்திடுங்கள்.



பெண்ணுக்களிக்கும் ஒவ்வோர் வாக்கும் புதியதொரு அரசியற் பண்பாட்டுக்கான அத்திவாரம்

VILUTHU
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
யாழ்ப்பாணம்



வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்



சீ.வீ.கே.சிவஞானம்
பட்டயச் செயலாளர்,
ஓய்வுநிலை யாழ் மாநகர ஆணையாளர்,
துணைப் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

X 8

அன்பான வாக்காளப் பெருமக்களே!-

எதிர்வரும் 21.09.2013ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் நானும் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுகிறேன் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

தேர்தல் விதிமுறைகளின் தடை, பரந்த பிரதேசம், மட்டுப்படுத்தப்பட்ட காலம் போன்ற காரணங்களால் நான் பெரிதும் விரும்பினாலும் தங்களில் சிலரை நேரடியாகச் சந்திக்க முடியவில்லை என்பது கவலையான விடயம்.

எவ்வாறாயினும் அன்றாட வாழ்கையில் உங்களை நானும் என்னை நீங்களும் அறிந்து கொண்டவர்கள் என்ற வகையில் நான் சந்திக்காதவர்கள் அதைப் பொருட்படுத்தாது இந்த வடமாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு எனது விருப்பு வாக்கு இலக்கமான எட்டுக்கு (8) மேலேயும் புள்ளடியிட்டு என்னையும் ஒரு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யும் வண்ணம் பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

என்றென்றும் மக்கள் சேவையில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ்ப்பாண மாவட்டம்
ஹாட்லியின் மைந்தன்
துணிச்சல்மிக்க இளம் வேட்பாளர்
வடமராட்சி மக்கள்

வீடு X 14

**சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)**

(தமிழரசுக் கட்சி வேட்பாளர்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## வட மாகாண சபைத் தேர்தல் - 21.09.2013

இனமானம் காப்போம் ஈனத்தவரை விரட்டுவோம்
இழந்தவற்றை மீட்போம் இருப்பவற்றைக் காப்போம்
அடக்கு முறையை உடைப்போம் அராஜகத்தை ஒழிப்போம்
ஒன்றாய் நிற்போம் வென்றே தீருவோம்

வீடு X 12

உணர்வுள்ள தமிழரின் தெரிவு
**கே.என். விந்தன்
கனகரத்தினம் M.M.C**
(யாழ் மாநகரசபை உறுப்பினர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

## வட மாகாண சபைத் தேர்தல் - 2013

கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்
தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்
சுயநிர்ணய உரிமைக்காக உழைத்து
போரினால் பாதிக்கப்பட்ட
மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவேன்

வீடு X 3

உறுதி செய்யப்பட்ட வெற்றியை நோக்கி
உங்கள் தெரிவு இல. 3

**Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

8

முல்லைத்தீவு மாவட்டம்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

முகிழ்ந்தது முல்லை மண்ணில்
மலர்வது தமிழுக்காக

சுயாட்சி வெல்ல
வீட்டுக்கு வாக்களித்து
பெற்றிடுவோம் சுதந்திரம்

வைத்தியகலாநிதி
**சி.சிவமோகன்**
அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்வோம்

வீடு X 8

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

முல்லைத்தீவு மாவட்டம்

1961ஆம் ஆண்டு மாணவப் பருவத்தில் சத்தியாக்கிரகத்தில் தொடங்கி இன்றுவரை ஒரே கொள்கை இலட்சியத்துடன் ஐம்பது வருடங்களுக்கு மேலாக பயணிக்கும் உங்கள் அன்புத் தோழன்

"எழுச்சியை நோக்கிய புதிய பயணம்"

**வல்லிபுரம் கமலேஸ்வரன்**
(தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி, முல்லைத்தீவு மாவட்டம்)

வீடு X 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## இத்தேர்தலில் வாக்களிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் போராளிகளே!

இடம்பெயர்ந்தவர்கள் தமது இல்லங்களை கையேற்பது எப்போது?



எங்கள் மண் பறிபோதலை தொடர்ந்து இனியும் இடமளிக்கலாமா?




வீடு X 10

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

**க.வி.விக்னேஸ்வரன்**
(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)
முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எங்கள் மண்
உங்கள் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதென தீர்மானம் நிறைவேற்றி இருந்தது. இந்தத் தீர்மானத்தின் பிரதியை சங்கத் தலைவர் எஸ். லோகநாதன், கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் க.வி.விக்கினேஸ்வரனிடம் நேரில் கையளித்தார். அருகில் சங்கத்தின் யாழ். கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதிகள் (ஐ-30)

# வடக்குத் தேர்தல் நீதியாக நடக்க கடவுளைப் பிரார்த்திக்கிறாராம்

காரைநகர், செப். 18

வடமாகாண சபைத் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடக்க கடவுளைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வி.கண்ணன்.

காரைநகர் தோப்புக்காடு கிராமத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிராமங்கள் அபிவிருத்தி அடையவும் மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்று சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கும் வடக்குத் தேர்தலை மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புதிய புதிய வேட்பாளர்கள் புதிது புதிதாக தோன்றினாலும் உண்மையில் மக்களோடு மக்களாக நின்று உதவி புரிபவர்களே மக்கள் பிரதிநிதிகளாக வேண்டும்.

இந்தத் தேர்தலானது நேர்மையாகவும் நீதியாகவும் நடக்க வேண்டும் என்பதே எமது விருப்பம் என்றார்.

எந்தவிதமான உயிர்ச் சேதமும் அசம்பாவிதங்களும் இன்றி வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும். இதற்காக நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்-என்றார். (ஐ-250)

# விலைபோகான் தமிழன் என்று வடக்கு தேர்தலில் சொல்லுவோம்

**கிளி. விவசாய சம்மேளனத் தலைவர்**

> எந்தச் சலுகைகளுக்கும் ஆசைகளுக்கும் விலை போனவர்கள் நாங்கள் அல்லர்.

தமிழர்கள் ஒருபோதும் சலுகைகளுக்காக விலைபோக மாட்டார்கள் என்பதை வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைபபுக்கு வாக்களித்து நிரூபிப்போம். எமது உரிமை களுக்காகக் குரல் கொடுக்க ஒன்றிணைவோம் என கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் செல்லையா சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரை கூட்டம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி, முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கு அருகில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எந்த சலுகைகளுக்கும் ஆசைகளுக்கும் விலை போனவர்கள் நாங்கள் அல்லர். வரலாற்று காலத்தில் இருந்து இன்றுவரை தமிழ்த் தேசியத்தை ஆதரித்து அதன் மீது பற்றுறுதியுடன் இருப் பவர்கள் நாங்கள். இதனை வடமாகாண சபைத் தேர்தலின் மூலம் நிரூபித்துக் காட்டுவோம். நாங்கள் அன்று தொடக்கம் உரிமைகளுக்காகப் போராடியிருக்கின்றோம். பல தடவைகள் ஏமாற்றப்பட்டுள்ளோம். இனியும் நாங்கள் ஏமாற முடியாது என்பதை இந்தத் தேர்தல் மூலம் உறுதியாகக் கூறவேண்டும். எனவே எந்த வேறுபாடுகளும் இன்றி வீட்டுச் சின்னத்துக்குவாக்களிப்போம்-என்றார். (ஐ-6)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013
இனங்களை ஒன்றிணைத்திட சமாதானத்தை நிலை நாட்டிட ஆதரியுங்கள்
X 4
அண்ணன் சிராஸ்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)
X 6
உண்மையான நேர்மையான மக்கள் சேவையாளனை தெரிவு செய்து வெற்றிபெற வையுங்கள்
இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள்
தென்மராட்சி வர்த்தக சமூகம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 13
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாணசபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்
எம் மண்ணில் நாம் வாழ எம் மண்ணை நாம் ஆள
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு
அரசியல் சிந்தனையாளர்
கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D
விரிவுரையாளர்
X 4
இலங்கைத் தமிழரசுக்கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சமுதாய சீர்கேட்டை கவனத்துக்கு கொண்டுவந்து மீண்டும் சீரமைப்பதற்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்குவேன்
X 7
தம்பி க.மு. தம்பிராசா
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்
பா.கஜதீபன் (ஆசிரியர்)
(யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)
X 17
இளையவர்களின் தலைமைத்துவத்துக்காய் இளைய தலைமுறையின் தெரிவு
யாழ் இந்துக் கல்லூரி 2001 உயர்தர பழைய மாணவ நண்பர்கள்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013
மாணிக்கசோதி அபிமன்னசிங்கம்
X 14
(மல்லாகம்மர்வி)
சுயேச்சைக் குழு - 6

காரைநகர் பிரதேச சபையில் இருந்து வடமாகாண சபைக்குத் தெரிவுசெய்வோம்
11 X
பாலா
X

வட மாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை பெற்றுவாழ
அபிவிருத்தி நோக்கி நகர
நலிவுற்றோர் நலன்கள்பெற
ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல்
தமிழரசுக் கட்சியின் கோப்பாய் கிளை செயலாளர்
அரியகுட்டி பரஞ்சோதிக்கே வாக்களிப்போம்
அரியகுட்டி பரஞ்சோதி
(மாநகரசபை உறுப்பினர்)
X 3
இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணசபைத் தேர்தல் – 2013
## - யாழ். மாவட்டம் -

"நாம் ஒன்றுபட்டு போராடும் இனம் என்பதை
உலகுக்கு ஓங்கி உரைப்போம்!
வரலாறு எம்மை விடுதலை செய்யும்!
உங்களதும் உங்கள் தலைமுறையினதும் விடிவுக்காய்
உங்கள் வாக்கினைத் தவறாமல் அளியுங்கள்!"

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

X



1

# திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்)

பிரதம முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – கிளிநொச்சி
இணைப்பாளர், காணாமல்போனோர் உறவினர்கள் சங்கம்.

# வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு
# கனடா வாழ் தமிழ் உறவுகளின் வேண்டுகோள்

அன்பார்ந்த வடபகுதித் தமிழ் மக்களே எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலை சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானிக்கின்றது. ஜனநாயக முடிவுகளையே சர்வதேசம் மதிக்கின்றது. உங்கள் முடிவுகள் சர்வதேச மட்டத்தில் பல மாற்றங்களை உருவாக்கும். எனவே நடைபெறவிருக்கும் வட மாகாண சபைத் தேர்தலில் அதிகளவில் வாக்களிப்பில் பங்குகொள்வது உங்கள் தார்மீக கடமையாகும்.

வடபகுதியில் 90சதவீத வாக்களிப்பு நடைபெறுவதை உறுதிப்படுத்துங்கள். 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தல் காலப்பகுதியில் சிங்களக் குண்டர்களினால் யாழ் நகர் தீக்கிரையாக்கப்பட்டதோடு யாழ். நூலகமும் எரிக்கப்பட்டது. அந்த நிலைமையிலும் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளைத் தாண்டி பெருவாரியாக வாக்கெடுப்பில் கலந்துகொண்டு தென்னிலங்கைக் கட்சிகளை தோற்கடிக்க வைத்தனர் என்ற வரலாற்றை மனதில் பதியவையுங்கள்.

அன்பார்ந்த தமிழ் உறவுகளே இராணுவ துணைப்படைகளான ஒட்டுக்குழுக்களின் ஆட்சியில் நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த நிலைமை தொடர நீங்கள் அனுமதி அளிக்காது இனத்தை வைத்து மோசடி செய்பவர்களை இனங்காணுங்கள். தங்களுக்கு வாக்களிக்காவிட்டால் அபிவிருத்தி கிடையாது என்ற மறைமுக அறிவுறுத்தலுக்கு அடிபணியாதீர்கள். மீண்டும் ஓர் ஆயுத கலாசார அடக்குமுறை வாழ்க்கைக்கு அடிபணியாமல் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையிலான தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை வெற்றிபெற செய்வதன்மூலம் வடமாகாண மக்களின் வளமான எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

துணிச்சலாக வாக்களிப்பில் கலந்துகொள்வதன்மூலம் எதிர்காலத்தில் பயப்பீதியற்ற வாழ்க்கையை உங்கள் மண்ணில் வாழ வழியமையுங்கள். காணாமல் போனவர்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், காணி சுவீகரிப்பு விடயங்களில் இலங்கை அரசுக்கு துணைநிற்பவர்களை இனம்காணுங்கள். தமிழ் மக்களை பயமுறுத்தி ஆட்சிபுரிவோர்க்கு இத்தேர்தலின் மூலம் நல்ல பாடம் புகட்டுங்கள்.

தமிழினத்தை பொறுத்தவரையில் முதற்கட்டம் தந்தை செல்வா தலைமையிலான சாத்வீகப்போராட்டம். இரண்டாம் கட்டம் ஆயுதப் போராட்டம், மூன்றாம் கட்டம் சர்வதேச மட்டத்திலான இராஜதந்திரப் போராட்டம். எனவே சர்வதேச அளவில் முடிவுகள் எட்டப்படும் காலம் தமிழ் இனத்தின் இறைமையை காப்பாற்றுவதற்கு துணிச்சலோடு வாக்களியுங்கள்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பை மாபெரும் வெற்றிபெறச்செய்வதன் மூலம் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்துங்கள்.

**எங்கள் மண், எங்கள் மக்கள், எங்கள் உரிமை, உங்கள் தெரிவு**

**தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு**

**என்று நிலையான உறுதிப்பாட்டில் நின்று வாக்களியுங்கள்.**

X

**கனடா தமிழர் இணையம்**
Canada's Tamil Alliance
**ச. சஜீவன்**
**வலிவடக்கு பிரதேச சபை துணைத் தவிசாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 18/09/2013

## சர்வானந்தனை ஆதரித்து அமைச்சர் பரப்புரை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் கு.சர்வானந்தனுக்கு ஆதரவாக அமைச்சர் ரெஜினோல்ட் குரே தென்மராட்சிப் பிரதேசத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றார்.

நேற்றுமுன்தினம் வரணி, தென்மராட்சி கிழக்கு, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் அமைச்சர் பரப்புரையில் ஈடுபட்டார். (ஜ-9)

# விடுதலைப் புலிகள் எங்கள் பிள்ளைகள்

## கூட்டமைப்பின் வேட்பாளர் சங்கரி

அக்கராயன், செப்.18

தமிழீழ விடுதலைப் புலிகள் எங்கள் பிள்ளைகள். அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்று நான் குரல் எழுப்பியதில்லை என வடமாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அக்கராயனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அக்கராயன் பகுதிக்கு முதல் பேருந்துப் பணியைத் தொடக்கி வைத்தவன் நான். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்போர் மக்கள் கேட்காமலே உணர்ந்து சேவை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். தந்தை ஒருவர் தனது பிள்ளை தவறான வழியில் செல்லும்போது கண்டிக்காமல் விடுவது மாபெரும் தவறாகும். அதேபோன்றுதான் விடுதலைப் புலிகளும் எங்கள் பிள்ளைகள்தான். அதனால் சில அறிவுரைகளைக் கூறி வந்தேன். அதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் எடுத்த சில நடவடிக்கைகள் தவறாக இருந்தன. புலிகள் செய்தவைகள் எல்லாம் சரியென்று சொன்னவர்கள் ஒரு சாரார். அதில் வித்தியாசம் காட்டிப் பேசியவன் நான். அன்று புலிகளின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிய பலர் இன்று அரசின் ஏகப் பிரதிநிதிகளாக உள்ளனர். கே.பி. எத்தனை கப்பல்களில் ஆயுதம் இறக்கியவர். எத்தனை உயிர்களின் இழப்புக்களுக்கு காரணமாக இருந்தவர். இன்று அரசுக்கு கப்பல் ஓட்டுகிறார். நான் புலிகளுக்கு அறிவுரை கூறியது தவறு என்றால் இன்று புலிகளைக் காட்டிக்கொடுத்து மகா துரோகம் செய்பவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? பழைய கதைகளை மறப்போம். புதிய எதிர்காலத்தை உருவாக்க வட மாகாண சபைத் தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். தமிழ் மக்கள் நன்றாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்-என்றார். (ஜ-18)




வடமாகாண சபைத் தேர்தல் 2013

முல்லை மாவட்டத்தின்
ஒரே ஒரு பெண் வேட்பாளர்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்



போர் தந்த வலியால்
துவண்டு போயுள்ள
பெண்கள் வாழ்வு
மீண்டு எழ
உடன் உள்ள சகோதரி
வீட்டுச் சின்னத்தில் விருப்பு எண்

X 6

திருமதி மோரிகமலா குணசீலன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடக்குமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்



தன்மானத்துடன்
தலைநிமிர்ந்து வாழ
உறுதியானதும்,
இறுதியானதுமான
தீர்வு

X 16

N.V.சுப்பிரமணியம்
(சுப்பிரமணியம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



வீடு எங்கள் சின்னம்
கல்வி எங்கள் கண்கள்

தம்பிராசா
குருகுலராசா

X 5

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்



தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றிட
ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வைக் கண்டிட

குமாரு சர்வானந்தன்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்)

X 11

பிரதேசசபை உறுப்பினர் மக்கள் தொண்டன்
குமாரு சர்வானந்தனை மாகாண சபைக்கு அனுப்பிவைப்போம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



அன்பான வாக்காளர்களே!

- ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை என்றும் போற்றத்தக்கதாகும்.
- தென்பிரதேசம் அனுபவிக்கும் சுதந்திரத்தை வடக்கும் அனுபவிக்க வேண்டும்.
- இந்த அரசாங்கத்திற்கு எதிராக சகல இன மக்களையும் ஒன்றிணைத்து, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய வல்லமை கொண்ட ஒரே கட்சி ஐக்கிய தேசிய கட்சியாகும்.
- 13 ஆம் அரசியல் சீர்திருத்தத்திற்கு புத்துயிர் அளிப்போம்.
- அரசியல் யாப்பின் பிரகாரம் சட்டத்தின் ஆட்சி
- மீனவர் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைத்கும் இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
- 2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான உடன்படிக்கையும் டோக்யோ மாநாட்டின் பிரதிபலனுமே இன்றைய வடக்கின் அபிவிருத்தி. ஆனால், இன்று அது மக்களைச் சென்றடையவில்லை.
- பொருளாதார அபிவிருத்தி
- யுத்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும் காணாமல் போனவர்களுக்கும் நிவாரணம்.

ஐக்கிய தேசியக் கட்சியை
வெற்றிபெறச் செய்வோம்.

X

ஐக்கிய தேசியக் கட்சி - நாட்டுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி மீறிய பிரசாரம் மக்களுக்கு நெருக்கடி

காரைநகர், செப். 18

காரைநகர் பிரதேசத்தில் சைக்கிள்களில் வீடு வீடாகச் செல்லும் ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமக்கு வாக்களிக்குமாறு மக்களை வற்புறுத்துவதாக பிரதேச பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன. காரைநகர் பிரதேசத்தை சேர்ந்த பத்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு கட்சிகளில் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதால் பரப்புரைப் பணிகள் காரைநகரில் தீவிரம் அடைந்துள்ளன. ஆளும் தரப்பு, எதிர்க்கட்சி ஆகியவற்றின் முதன்மை வேட்பாளர்கள் இருவரும் காரைநகரைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-250)

# சர்வதேச கண்காணிப்பால் திண்டாடுகிறது மோசடி கும்பல்

## மக்கள் துணிந்து வாக்களிக்க வேண்டும் என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம்,செப்.18

வடமாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண் காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் வந்து இறங் கியதால் தாம் திட்டமிட்டிருந்தபடி தில்லுமுல்லுகளையும் மோசடிகளையும் செய்ய முடியாமல் போய்விடுமோ என்று திக்கு முக்காடுகிறது அரசு. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோலி அறிவகம் சனசமூக நிலையத் திடலில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு நாட்டிலும் தேசிய மட்டத்தில் தேர் தல்கள் நடக்கும் போது மட்டுமே சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவர்.

இலங்கையில் மாகாண சபைகளுக்கு தேர்தல் கள் நடக்கும் போது சர்வதேச கண்காணிப் பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை மட்டும் அவதானிக்க வந்துள்ளனர். காரணம் வடமாகாண சபைத் தேர்தல் சர்வதேச மயப் படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலை இலங்கை அரசு தாமாக விரும்பி நடத்தவில்லை. சர்வதே சத்தின் அழுத்தத்தின் காரணமாகவே நடத்துகிறது. இலங்கை அரசு சர்வதேசத்தைப் பலமுறை ஏமாற்றி உள்ளது. ஐ.நா.முதல் இந்தியாவரை கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுள்ளது.

வடக்கில் இராணுவ பிரசன்னம் குறைக் கப்பட வேண்டும். இரா ணுவத் தலையீடுகள் நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அமைப் புகள் பலவும் கூறிய போதும் இலங்கை அரசு அவற்றை ஏற் கத் தவறிவிட்டது.

வடமாகாணம் இரா ணுவ மயப்படுத்தப் பட்ட நிலையிலேயே இந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இது குறித்து இரண்டு சர்வதேச கண்காணிப்புக் குழுக் களையும் சந்தித்து தெளிவாகக் கூறியுள்ளோம்.

சர்வதேசம் தேர்தலை கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் தேர்தலின் மூலம் இராணுவ சர்வாதிகாரத்துக்கு முற் றுப்புள்ளி வைக்க வேண்டும். நமது தலைவிதியை தீர் மானிக்கும் ஒரு தேர்தல் என்பதை மனதில் கொண்டு வாக் களிப்பில் கலந்து கொள்ள வேண்டும்-என்றார். (ஐ-2)































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை

## யாழ் மாவட்ட தமிழரசு





திருமதி அனந்தி சசிகரன் (எழிலன்)




பொ.ஐங்கர நேசன்




அரியகுட்டி பரஞ்சோதி




கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்




இம்மானுவல் ஆனல்ட்




இரத்தினலிங்கம் ஜெயசேகரன்





மு. தம்பிராசா




சி.வி.கே. சிவஞானம்




எம்.கே சிவாஜிலிங்கம்



முதன்மை வே

**க.வி. விக்னே**

(ஓய்வுபெற்ற உயர் நீ

**1**

**வடமாகாண சபைத் தே**

**தமிழரசுக் கட்சி வே**

**வாக்குகளை வழங்**

# தமிழ்த் தேசியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பத் தேர்தல் 2013

## ...க் கட்சி வேட்பாளர்கள்






க. தர்மலிங்கம்




கே.என். விந்தன்




கே.சஜந்தன்




ச.சுகிர்தன்



தர்மலிங்கம் சித்தார்த்தன்




ந.வி. சுப்பிரமணியம்

... வேட்பாளர்

**...னேஸ்வரன்**

(...ர் நீதிமன்ற நீதியரசர்)

**...0**




பா. கஜதீபன்




வே.சிவயோகன்




ச. குகதாஸ்

**...தேர்தலில் சின்னத்தில் போட்டியிடும்**

**...வட்பாளர்களுக்கு தங்கள் பொன்னான**


**...ங்கி அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்**

# ...க் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்துக்குத் துரோகமிழைப்பவர்கள் தமது மனச்சாட்சிக்கு பதில் சொல்லவேண்டும்

## ஜெயபுரத்தில் அரியநேத்திரன் எம்.பி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் விடிவுக்காக. இலட்சியப் பணிக்காக போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் தமிழினத்துக்குத் துரோகமிழைப்பவர்கள் தமது மனச்சாட்சிகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

கிளிநொச்சி ஜெயபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

போராட்டம் என்பது ஆயுதத்தை எடுத்துச் சுடுவது மட்டுமல்ல. அந்தப் பணிக்கு நாங்கள் உங்களை அழைக்கவில்லை. அகிம்சை ரீதியாக இராஜ தந்திர ரீதியாக சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுக்கி எங்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு பணியில் நாங்கள் இறங்கியிருக்கிறோம்.

இந்தப் பணிக்கு நாங்கள் உங்களிடம் ஆணை கேட்கிறோம். வடக்கு மாகாண சபையை ஆட்சி செய்வதற்கான கோரிக்கை மட்டுமல்ல இது.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்திலே தமிழன் தமிழனாக வாழ வேண்டுமென்பதற்காக நாங்கள் 66 வருடங்களாகப் போராடி வருகின்றோம்.

இந்த இராஜதந்திரப் போராட்டத்திலே அடுத்த கட்டப் பணியை மேற்கொள்வதற்கு, சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டுவதற்கு தமிழர்களாகிய நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை தரவேண்டும்.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வேட்பு மனுத் தாக்கல் செய்தபோதே வெற்றி பெற்று விட்டது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வேட்பு மனுத் தாக்கல் செய்தபோதே வெற்றி பெற்று விட்டது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறவில்லை. தென்பகுதியில் இருந்து ஜனாதி பதியே கூறியிருக்கின்றார். அமைச்சர்களும் கூறியிருக்கின்றார்கள்.

உடலாலே தமிழர்களாகவும் உள்ளத்தாலே சிங்களவர்களாகவும் வெற்றிலைக்கு சோரம் போகிறவர்களாக இருக்கக் கூடாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

21ஆம் திகதி நீங்கள் வாக்குப் போட்டு விட்டு இரவு நித்திரைக்குப் போனதும் அதிகாலையில் திடுக்கிட்டு எழுவீர்கள். இந்த மண்ணுக்கு ஆகுதியானவர்கள் உங்கள் நெஞ்சினில் வருவார்கள். அப்போது உங்கள் மனச் சாட்சிக்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும்-என்றார். (ஜ)

# இணக்க, இணைந்த அரசியல்கள் வடக்கில் செல்லுபடியாகாதவை

## கூட்டமைப்பு வேட்பாளர் கஜதீபன்

சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கு அடிபணிந்து சிங்களக் கட்சிகளுடன் கூட்டமைத்து இணக்க அரசியல் என்றும் இணைந்த அரசியல் என்றும் கூறி தமிழ் இனத்தை விற்றுப் பிழைப் போரது நாடகம் இனி வடபகுதியில் செல்லுபடியற்றதாகிவிடும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபைத் தேர்தல் வேட்பாளர் கஜதீபன்.

ஏழாலையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையான தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்த எந்தத் தன்மானத் தமிழனும் தனது இனத்தை விற்று பிழைப்பு நடத்தமாட்டான். இனத்துரோகம் செய்ய மாட்டான். தமிழ்மக்களின் உரிமை. விடிவுக்காகத் தனி ஈழக் கொள்கையை மையப் படுத்தி ஆயுதம் தூக்கிப் போராடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சிங்களப் பேரின வாதத்துக்கு அடிபணிந்து அடிமை அரசியல் நடத்தி இனத்தை விற்றுப் பிழைக்கின்றார்.

அவரைப் பார்த்து நான் இப்படிக்கூறுவதற்கு அவர்தான் காரணம். முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் ஆயிரமாயிரமாகக் கொல்லப் பட்டார்கள்.இது உலகறிந்த உண்மை. இந்த அவலத்தை மூடிமறைத்து. டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். முள்ளிவாய்க்காலில் எந்த உயிர்க்கொலையும் நடைபெறவில்லை என்று.

முள்ளிவாய்க்கால் படுகொலை அரங்கேற்றப் பட்டது இன்று சர்வதேசத்தின் கண்முன்னே வெளிச்சத்துக்கு வந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

டக்ளஸ் தேவானந்தாவிடம், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் எதற்காக தாடி வளர்க்கிறீர்கள் என்று கேட்டால், நான் மக்கள் சேவையில் எனது நேரத்தை முழுமையாகக் கழிப்பதால் தாடி எடுக்க நேரமில்லை என்று கூறுவார். இன்று எதைக்கூறுவாரோ தெரியவில்லை. ஆனால் அவர் தமிழ்மக்களுக்காக இப்போது செயற்படவில்லை என்பதுமட்டும் உண்மை.

எரிபொருள் நிரப்பவந்த மற்றுமொருவர் அங்கஜன்.இவர் மக்கள் சேவை என்று கூறிக் கொண்டு அரச கட்சியில் போட்டியிடுகின்றார். எமது படித்த பட்டதாரிகளை இவர் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக பசப்பு வார்த்தை கூறி தனது போஸ்ரர்களை ஒட்டுவதற்காக பயன்படுத்துகின்றார். இவரையும் உண்மையான தமிழன் என்று எம்மால் கூறிக்கொள்ள முடியாது?

சேவையே எங்கள் எண்ணம் வீணையே எங்கள் சின்னம் என்று முழக்கமிட்ட டக்ளஸின் வீணை இப்போ எங்கே? வீணையையும் தொலைத்துவிட்டு சேவையையும் மறந்து விட்டு வெற்றிலையைச் சப்பி புற்றுநோய்க்கு உள்ளாகப் போகிறார் அமைச்சா டக்ளஸ் என்பதை மனவருத்தத்துடன் தொவித்துக் கொள் கின்றேன்.இப்படியானவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படவேண்டியவர்கள். இதுவே இப்போது படிப்படியாக ஆரம்பித்து எதிர்வரும் 22ஆம் திகதி முற்றுப் பெற்று விடும். தமிழ்மக்கள் தமிழ்த் தேசியத்தின் பின்னே அணிதிரண்டு விட்டனர். வீட்டுச்சின்னம் பெறப் போகும் வெற்றி உறுதியாகிவிட்டது. - என் றார். (ஜ)




TNA Tamil National Alliance

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
மாபெரும் இறுதி
தேர்தல் பரப்புரைக் கூட்டம்

இடம் : குருநகர் கலையரங்க மைதானம்

காலம் : இன்று (18.09.2013) புதன்கிழமை பி.ப 4.30 மணி

தலைமை:
திருமதி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா (மாநகர சபை உறுப்பினர்)

சிறப்புரைகள்:
கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மாவை.சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ க.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம். ஏ. சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)

மற்றும் அனைத்து வேட்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்கள்

அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தல் 2013

## யாழ்மாவட்டம்





**எமது வணிகர் கழக தலைவர் மக்களோடு மக்களாக முன்நின்று மக்களுக்கு ஆற்றிய பணிகள்**

1. போரினால் பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து அவர்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை.
2. போர்க்காலகட்டத்தில் உணவுப்பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியபோது பொருள்களைத் தருவித்து குடாநாட்டு மக்களை பட்டினிச் சாவிலிருந்து மீட்டமை.
3. பாடசாலை விட்டு விலகிய மாணவர்களை திரும்பப் பாடசாலைக்கு இணைத்து அவர்களது கல்வியைத் தொடர எம்மைப் போன்ற வர்த்தகர் மூலமாக பல உதவித் திட்டங்களை வழங்கி மிகவும் உத்வேகமாக செயற்படுத்தி வருகின்றமை.

இப்படிப் பல்வேறுபட்ட மக்கள் நலத்திட்டங்களைச் செய்து வரும் எமது வணிகர் கழகத் தலைவரின் பணி இனிவரும் காலங்களில் மாகாண சபை ஊடாக உத்வேகத்துடன் செயற்படுத்துவதற்கும் எமது தமிழ் மக்களின் தனித்துவத்தை பேணிட, தமிழ் மக்களின் வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க உணர்வுள்ள தமிழனான எமது வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் அவர்களை ஆதரித்து வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு இலக்கம் 6 இற்கு மேலே புள்ளடியிட்டு பெரும்பான்மை விருப்பு வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியடையச் செய்வோமாக.

**—யாழ் மாவட்ட வர்த்தக சமூகமும், யாழ் மாவட்ட மக்களும்-**

6

தமிழன் என்ற "தேசிய இனத்தின் சுயகௌரவம் கிடைக்க வாக்களியுங்கள்"

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்

X

## இ. ஜெயசேகரன்

(சமூக சேவையாளன்)

தலைவர் - யாழ் மாவட்ட வர்த்தக சங்கம்

6

(C/11262)(10,6,3)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

# வட மாகாண சபைத் தேர்தல் 2013



**கடந்த 30வருடங்களாக உரிமைப் போராட்டத்திற்குப் பங்களித்து தொடர்ந்தும் பணியாற்றிவரும் மக்களின் அன்பிற்குரிய வேட்பாளர்கள்**



சூழலியலாளர்
**பொ. ஐங்கரநேசன்**
Msc,PGDJMC

அரசியல் சிந்தனையாளர்
**கலாநிதி க. சர்வேஸ்வரன்**
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்

தலைவர், வ.மா.க.தொ.கூ.ச
**ந.வி. சுப்பிரமணியம்**

X 2 4 16

இலங்கைத் தமிழரசுக் கட்சி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18/09/2013

# என்மூலம்தான் கிடைக்கும் மக்களுக்கான எல்லாமும்

## இப்படிக் கூறுகிறார் அங்கஜன்

13வது திருத்தம் மூலம் காணி பொலிஸ் அதிகாரம் கிடைக்கப்பெறும் என்றால் அது எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் கிடைக்கும். ஆனால் நானும் என் கட்சியும் வெற்றி பெற்றால் 13வது திருத்தத்துடன் அபிவிருத்தி. வாழ்வாதார மேம்பாடு. சுய தொழில் அபி விருத்தி. இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு என எல்லாம் கிடைக்கப்பெறும்.

என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அங்கஜன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

நியாயத்தின் மக்களாக பிறந்தவர்கள் தமிழ் மக்கள். கடந்த காலங்களில் எமது உரிமைகளைப் பெறபல்வேறுபட்ட போராட்டங்களை நடத்தினர். அது எமது மக்களின் உணர்வுகளாக அமைந்தது. அதற்கு மதிப்பளிக்கும் வகையில் நான் இன்றும் தலை வணங்குகின்றேன். ஆனால் எம் சமுதாயத்தை ஏமாற்றி அதன் மூலம் அரசியல் இலாபங்களைப் பெற்றோர் பலர்.

எமது மக்களிற்கு இப்போது முக்கிய அடிப்படைத் தேவை, வாழ்வாதார மேம்பாடு



மற்றும் சுதந்திர மூச்சுக்காற்று.

உரிமை வேண்டும் என்கின்றோம். உரிமை என்பது எனக்கும் உரியதே. ஏனெனில் நானும் தமிழன்தான். என் கொள்கை மீதான பிடிப்பால் என் பின்னால் உள்ள இளைஞர் சமுதாயமும் தமிழ்ச் சமூகம்தான். அதை சாத்தியமான முறையில் பெற வேண்டும்.

எமது வாழ்க்கை போரட்டங்களுக்காக 60 வருடங்கள் தொலைந்து போய் விட்டன. வெற்றியடையும் பொருட்டு தோல்விக்காக காத்திருந்த சமுதாயமாக எம் சமுதாயம் மாறி விட்டது.

இப்போது மீண்டும் அத்தகைய போராட்டங்களை நாம் உருவாக்க வேண்டுமா. இல்லை போராளியாக இருந்தவன் கால்கள் துண்டிக்கப்பட்டு இன்று கச்சான் வியாபாரியாக மாறி இருக்கின்ற சூழ்நிலை இனியும் எம் இளைஞர்களுக்கு வேண்டாம். பேரைத் தூண்டும் அரசியலும் எமக்கு வேண்டாம். எமக்கு வேண்டியது நிம்மதியான வாழ்வு, அமைதியான இரவுநேர உறக்கம். இனியும் ஆயுதம் ஏந்தி போராட எம்மக்களால் இயலாது.

இது உங்கள் தருணம். உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில். உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் வாழ்வு உங்கள் முடிவுகளில் உள்ளது. எனவே பொறுப்புள்ள சமூகமாக, சிந்தித்து எதிர்வரும் 21ஆம் திகதி அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று உங்கள் முதல் அரசியல் உரிமையை பயன்படுத்துங்கள். அதுவே உங்கள் எதிர்காலச் சந்ததிக்கு நீங்கள் செய்யவுள்ள பெறுமதியான கடமையாகும். என்றார். (ஐ)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
அன்பு நெஞ்சங்களே....!
வாழ்ந்தாலும் உங்களோடு
வளர்ந்தாலும் உங்களோடு தான்
நின் தமிழோசை பரவும்
விழ்ந்தாலும் உங்களோடு
எந்தமிழ் மனம் மாறாது
அதற்கு எந்தனுக்கு
உங்கள் வாக்கினை அள்ளி வழங்கி உதவுவீர்களாக !
வீ. கனகசுந்தரசுவாமி
(ஒய்வுபெற்ற கிராம அலுவலர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
X 4



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
(சி/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு





வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்
ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
இத்தேர்தலில் போட்டியிட
எனக்குக் கிடைத்த வாய்ப்பை
மாவட்டத்தின் ஒட்டுமொத்த
பெண்களுக்குக் கிடைத்த
அரசியல் அங்கீகாரமாகவே
கருதுகின்றேன்
X 4
கே. வினுபானந்தகுமாரி (ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!
தமிழ் இனப் படுகொலைகளுக்காக வெளிப்படையான சர்வதேச நீதி விசாரணை தேவை என முக்கிய தமிழர் எம்.கே.சிவாஜி லிங்கம் பகிரங்கமாக வலியுறுத்தும் ஒரே ஆளாக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தனது நாட்டின் வாஷிங்டன் நகருக்கு 15.01.2010 இல் அனுப்பி வைத்த செய்தியில் குறிப்பிடப்பிட்டிருந்ததாக விக்கி லீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
X 9
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான
ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை
வெற்றி பெறச் செய்வோம்
* தேசியம் * தாயகம் * சுயநிர்ணய உரிமை



வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
யாழ் மாவட்டம் (இலங்கை தமிழரசுக் கட்சி)
சீ.வீ.கே. சிவஞானம்
துணைப் பொதுச் செயலாளர்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
ஓய்வு நிலை மாநகர ஆணையாளர்
பட்டயச் செயலாளர்
X 8
உங்களுக்குத் தெரிந்தவர்
உங்களைத் தெரிந்தவர்
உங்களோடு வாழ்பவர்
சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தல் 2013

## அழைக்கிறோம் நாம் தமிழரே வாருங்கள்
## வீட்டுக்கே வாக்களிப்போம்
## எங்கள் நிலம் எமக்கு வேண்டும்

போர் என்று தமிழர் நிலமெல்லாம்
பாதுகாப்பு வலயங்கள்- இன்றும்
அதனால் பல லட்சம் தமிழ் மக்கள்
நிலம் இழந்து சொத்திழந்து, உயிரழிந்து நிற்கின்றார்
போர் முடிந்தும் எங்கள் நிலத்தில் இராணுவம்
குடியிருக்கிறது,
முகாம் அமைத்து குடியேற்றம் நடக்கிறது
அரசே எங்கள் நிலத்தை எங்களிடம் விட்டுவிடு,
வாழ விடு என்று கேட்கும் தமிழ்க்குலம்!
தெருவில் தமிழர் நிற்க அவர் நிலமெல்லாம்
தெற்குச் சிங்களவர் குடிபுகுந்து நெல் விளைக்கின்றார்
நம் தமிழ் மீனவர் கரையிழந்து கடல் இழந்து நிற்க
தென்னிலங்கைச் சிங்களவர் சங்கும்
கடலட்டையும் இறாலும், மீனும் பிடித்து
வளமான வணிகம் செய்கின்றார்
கையிற் குழந்தையுடன் நீதி கேட்டு நிற்கும் தமிழ்த்தாய்,
அரசே என் கணவனை உன்னிடம் ஒப்படைத்தோம்,
உயிருடன் இருக்கிறானா? என்று ஆயிரம்
ஆயிரம் குரல்கள்
விடுதலை செய் என்று கேட்கும் தமிழ்த்தாய்!
இத்தனை ஆண்டுகளாய் பல லட்சம் தமிழர்
தம்மை பலிகொடுத்தும், இனியும் எம் நிலத்தில்
எம்மை ஆள நம் உரிமை வேண்டாமா?
இன்னும் பல ஆயிரம் தமிழ்ப் பெண்கள், இளைஞர்
சிங்களத்துச் சிறைகளில் வாடுகின்றார்
விடுதலையில்லை, விடிவுமில்லை தமிழினத்துக்கு!
நாம் நம் மண்ணில் வீடு கட்டி வாழ்வோம்
எம் காணி திருத்தி எம் மண்ணில் பயிர் வளர்ப்போம்
நம் மண்ணில் தன்னாட்சி செய்வோம்.

நம் உரிமை மனிதர்க்கு என்று நாம் ஆட்சி செய்வோம்
அரசே விலகிப் போ எம்மை வாழவிடு!
புத்தம் சரணம் கச்சாமி என்று நாம் சொல்லவா?
புத்தரில்லா இடமெல்லாம் புத்தர் சிலைகள் ஏன்?
இது பௌத்த ஆதிக்கத்தின் சின்னமல்லவா?

ஜனநாயகப் போராட்டம் அறவழிப் போராட்டம் அதையும்
வன்முறையில் அடக்கியது அரசுகள்
அடக்குமுறைக்கு எதிராய் எழுந்தது
ஆயுதப் போராட்டம் ஒடுக்குமுறை ஒழிக என்றே!
அதுவும் முடிந்தது என்கிறது அரசு.
முடிந்ததோ லட்சக் கணக்கில் தமிழர்தான்
தமிழனுக்கோ விடிவுமில்லை விடுதலையுமில்லை
இன்னமும் ஏன் எம் தமிழர் பூமியில் சிங்களவர்
இராணுவம்
எம்மை வாழ விடு எம் நிலத்தில்
இன்று நடப்பதோ இராஜதந்திரப் போர்
தமிழர் வடித்த கண்ணீர் இன்று உலமெலாம்
அதனால் இலங்கை அரசை அழுத்துகிறது உலகம்!
புலம் பெயர்ந்த எம் உறவுகள் எமக்காய் நிற்கின்றார்
தமிழர் தன்னாட்சி செய்ய இராஜதந்திரப் போர்
இத்தனை நாளும் செய்த தியாகங்கள் வீண்போகாது
நம் இனத்துக்கு விடிவு வேண்டும் எம்மை நாம் ஆள
ஒரு சந்தர்ப்பம் இதனை நாம் இழக்கலாமா?
ஒட்டுமொத்தத் தமிழர்
நாம் ஒன்றாக நின்று
வாக்களிப்போம் அது
நம் கடமை செப்ரெம்பர்
21 இல் தோற்கடிப்போம்
பேரினவாதத்தை
வெற்றிபெறுவோம்
நாம் தமிழர் எம்
மண்ணில்
மாகாண சபையில்
தமிழராட்சி செய்வோம்
வாருங்கள்...



## இலங்கை தமிழரசுக் கட்சி

X

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் வடக்கு - கிழக்கை இணைப்பதே அடுத்த கட்டம்

## மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா உதயனுக்கு செவ்வி

நேர்காணல்
தி.அமுதன்

வடமாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கா யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா 'உதயனுக்கு' வழங்கிய நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

*கே: வடமாகாணசபைத் தேர்தல் களம் எவ்வாறுள்ளது ?*

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் விட்ட பிழைகளை வடமாகாண சபைத் தேர்தலில் விடக் கூடாதென்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு அரசியல் தலைமைகளும் அங்குள்ள மக்களும் உறுதியாக உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டுதான் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பரப்புரை நடவடிக்கைகளுக்காக கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எல்லோரும் வருகை தந்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் விடப்பட்ட சிறு தவறுகள் ஆட்சி அதிகாரத்தை எங்களிடமிருந்து பறித்துள்ளது.

மக் கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டாமையே தேர்தல் தோல்விக்கான காரணம். இந்தத் தவறை வடக்கு மாகாணத்தில் விடக்கூடாது என்று எதிர்பார்க்கின்றோம். வடக்கு மக்கள், கிழக்கு மாகாண மக்கள் விட்ட அதே தவறைச் செய்யக் கூடாது.

*கே: வடமாகாணசபைத் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதத்தை குறைக்கச் செய்வதில் மறைமுக அழுத்தங்கள் ஆளுந்தரப்பால் கொடுக்கப்படும் சூழலில் உங்களால் எப்படி வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்கச் செய்ய முடியும் ?*

அழுத்தங்கள் மக்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது என்பது உண்மைதான். இந்த அரசின் ஆட்சியில் நடத்தப்பட்ட சகல தேர்தல்களிலும் இவ்வாறான அழுத்தங்கள் - அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் நான் பங்குபற்றிய உடுத்துறைக் கூட்டத்தில், பொலிஸார் முன்பாகவே எமது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டும், பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான அடவாடிகள் - அச்சுறுத்தல்கள் மத்தியில் மக்கள் வாக்களிக்கச் செல்வது என்பது கொஞ்சம் கஷ்டமான விடயம்தான். இவ்வாறு நிலைமை இருந்தாலும் மக்கள் இந்த முறை உணர்ச்சிபூர்வமாக இருக்கின்றனர். இதனால் மக்கள் வாக்களிப்பார்கள். மக்கள் எம் பக்கம். மக்கள் கூடுதலானளவில் வாக்களிப்பார்கள்.

*கே: கிழக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை எவ்வாறு நோக்குகின்றனர் ?*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது தனித்து வடக்கிற்குரியதோ அல்லது கிழக்கிற்குரியதோ அல்ல. ஒட்டுமொத்த இலங்கைத் தமிழ் மக்களுக்குமான வெற்றி.

இதனால்தான் இந்தத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தென்னிலங்கை பேரினவாத கட்சிகள் உறுதியாக இருந்தன. அரசு இதன் காரணமாக தேர்தலை நடத்துவதை தள்ளிப்போட்டது. தென்னிலங்கை கடும்போக்காளர்களின் அழுத்தத்தினால் 13 ஆவது திருத்தத்தையே நீக்க முயன்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் எடுத்துக்கொண்ட முயற்சியால் 13 ஆவது திருத்தம் நீக் கப்படுவது நிறுத்தப்பட்டதுடன் வேறு வழியின்றி மாகாணசபைத் தேர்தலை நடத்தவும் அரசு சம்மதித்தது.

சட்டத்தின் பிரகாரம் நாங்கள் ஆட்சி செய்தேயாவோம். எங்களது ஆட்சி ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் விடிவைத் தேடித்தரும்.

*கே: வடக்கு மாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் சந்தர்ப்பத்தில், வடக்கு - கிழக்குக்கான இணைப்புக்கான சாத்தியங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?*

வடக் கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் போது, நாம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து பேசி அல் லது முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து, வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கும் வாய்ப்பு ஏற்படலாம். 13 ஆவது திருத்தத்தில், அடுத்துள்ள இரு மாகாணசபைகள் விரும்பிக் கொண்டால் இணைந்து கொள்ளலாம் என்ற சரத்துக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் மீண்டும் வடக்கு - கிழக்கை இணைக்க முடியும்.

*கே: தெற்கு இடதுசாரிகள்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை விமர்சிக்கின்றார்களே. அது தொடர்பில் நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் ?*

13 ஆவது திருத்தத்தை நீக்க முற்பட்ட போது இடதுசாரிகளை நாங்கள் இரு தடவை சந்தித்துக் கலந்துரையாடினோம். அவர்கள் அந்தத் திருத்தத்தை நீக்குவதற்கு எதிராக இறுதிவரை குரல் கொடுப்போம் என்று எமக்குத் தெரிவித்தனர்.

இப்படிப்பட்டவர்கள் இன்று வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இங்கு வந்து, சிங்கள மக்கள் சுயநிர்ணய உரிமையை வழங்க மாட்டார்கள் என்று கூறியிருக்கின்றார்கள்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் சட்டத்துக்கு முரணாகவோ அல்லது அரசமைப்பை மீறும் வகையிலோ எதுவும் இல்லை. அவர்கள் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒழுங்காகப் படிக்கவில்லை என்றே நினைக்கின்றோம்.

நாங்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்கவில்லை. இங்கு முன்வைத்ததன் பிரதான காரணம், சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் இடம்பெறும் தேர்தல் என்பதாலேயே.

*கே: கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான ஆதரவுத் தளம் எவ்வாறு இருக்கின்றது. முஸ்லிம் மக்களையும் இணைத்துச் செயற்படும் திட்டங்கள் ஏதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளதா ?*

முஸ்லிம் மக்கள் எமது மக்களோடு இணைந்து வாழ்ந்தவர்கள். ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழ் - முஸ்லிம் சமூகத்துக்கிடையில் முறுகல் நிலைமை இருந்ததுதான். ஆனால் அண்மைக் காலத்தில் முஸ்லிம் மக்கள் எமது மக்களோடு இணைந்து வாழ விரும்புகின்றனர்.


முஸ்லிம் மக்கள் சிங்களப் பேரினவாதிகளால் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கு முஸ்லிம் மக்களின் தலைமைத்துவம் குரல் கொடுக்க மறுக்கும் நேரத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துள்ளது. நாடாளுமன்றத்தில் பல தடவை இது தொடர்பில் அரசிடம் கேள்வியெழுப்பியுள்ளோம்.



இதன் காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் பலர் எங்களுடன் இணைந்துள்ளார்கள். அவர்கள் தாங்களின் பிரச்சினைகளை எங்களால் எடுத்துச் சொல்லப்படும் என்பதை நம்புகின்றார்கள். அவர்களது நம்பிக்கைக்கு பாத்திரமாக நாம் செயற்படுகின்றோம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நாம் முஸ்லிம் வேட்பாளர்களை எமது கட்சி சார்பில் நிறுத்தவில்லை. காரணம் என்னவெனில், முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டதுடன் அரசை விமர்சித்துப் பிரசாரம் மேற்கொண்டனர். அத்துடன் வெற்றி பெறும்பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதற்கான வாய்ப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனால் முஸ்லிம் வேட்பாளரை நிறுத்த வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்படவில்லை. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் முடிவுக்கு மாறாக அரசிடம் சேர்ந்து கொண்டது. இதனால் வடக்கு மாகாணத்தில் நாம் முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஒன்றை வழங்கியுள்ளோம். நிச்சயமாக இந்த மாற்றத்தை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் வரவேற்கின்றனர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் பரப்புரைக் கூட் டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் முன்றலில் நடைபெவுள்ளது. நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை. சேநாதிராசா முதல மைச்சர் வேட்பாளர் சீ.வீ.விக்னேஸ் வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

(ஐ)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
ஜனநாயக ஐக்கிய முன்னணி வேட்பாளர்
"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"
அருள்ஜெயந்திரன் (சண்ஜெ)

என்னை நீங்கள் அங்கீகரித்தால் நான் கூறிய யாவும் உங்களுக்காக சிரமப்பட்டு நிறைவேற்றுவேன். இல்லையேல் தட்டிக்கேட்கவும் தண்டிக்கவும் உரிமையுண்டு.
X 2
உங்கள் தேர்வு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.
அச்சமில்லாத பிச்சையில்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்

பா.கஜதீபன்
(ஆசிரியர்)
யாழ்ப்பாணம் மற்றும் இலங்கை துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர் (Division III)
X 17
- யாழ் மாவட்ட கிரிக்கற் ரசிகர்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வெற்றிபெற வைப்போம் வாழ்வுக்கான நன்மைகளைப் பெறுவோம்
அந்தோனிப்பிள்ளை
அன்ரன் அன்பழகன்
(ஆங்கில ஆசிரியர், முன்னாள் ஆங்கில ஆசிரிய ஆலோசகர், மெய்வல்லுநர் பயிற்றுநர், உதைபந்தாட்ட முகாமையாளர்.)

கிளிநொச்சி காற்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை முதன்மை செயற்பாட்டாளராக கடந்த 25 வருடங்களாக தன்னார்வத்துடன் இயங்கி வருபவர். கழகங்களுக்கிடையேயான சுற்றுப் போட்டிகள், மத்தியஸ்தர் பரீட்சை வகுப்புக்கள், சிறுவர்களுக்கான காற்பந்து பயிற்சிகள் மற்றும் மெய்வல்லுநர் பயிற்சிகள் என தன்னார்வம் மிக்க சேவைகள் இவரின் வாழ்க்கைக் கோலத்தின் அடித்தளமாயிற்று.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் கௌரவ உறுப்பினரான இவரின் முயற்சியால் 100 இலட்சம் ரூபா செலவில் பளையில் விளையாட்டரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு மொழி, இலக்கியம், விளையாட்டு என பல்வேறு ஆளுமைகளை கொண்ட இவரின் சேவைகள் மறக்கப்பட முடியாதவை. எளிமையான வாழ்வு, உயர்வான சிந்தனைகள், நலிவுற்றவர்கள் மீதான அக்கறை என சமூக பொறுப்பு மிக்கதோர் மனித நேய செயற்பாட்டாளரான இவரை வெற்றிபெற வைப்போம். வாழ்வுக்கான நன்மைகளைப் பெறுவோம்.
கிளிநொச்சி மாவட்ட காற்பந்தாட்ட கழக நண்பர்கள்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

காடைத்தனத்தை அநீதியை ஒழிக்க. சாந்தி.சமாதானத்தைப் பாதுகாக்க ஆதரிப்போம்
X 2
சிவக்கொழுந்து
அகிலதாஸ்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

வடமாகாண சபைத் தேர்தல் 2013

எதிர்க்கத் துணிந்தால் தமிழ் மீளும்
எதற்கும் துணிந்தால் தமிழ் ஆளும்
X 17
பா.கஜதீபன் (ஆசிரியர்)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல்
யாழ்மாவட்டம்

சாத்தியமானவற்றை சாதிக்கவும் முடியாதவற்றை முயற்சிக்கவும்
கனகரஞ்சிதன்
பிரணவன்
X 12X
எதிர்கால அரசியலுக்காக இளைஞர்களுக்கு வாக்களிப்போம்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
நடைமுறைச் சாத்திய வழிமுறையில் ... அரசியலுரிமை பெறுக ...

X 3
தோழர் ரங்கன்
(ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்)
-வடமராட்சி மக்கள்

வடமாகாண சபைத்தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்
தாயக அபிவிருத்திக்காக!
தமிழரின் அபிலாசைகளுக்காக!
இளைஞரின் எதிர்காலத்துக்காக!
தீவகத்தின் உரிமைக் குரலுக்காக!
சுவாமிநாதன் பிரகலாதன்
(மண் ரமேஸ்)
சுயேட்சைக்குழு 7
இளைஞர் அணி

X 19
யாழ் மாட்ட இளைஞர் சக்தியை மாகாணமும் பறைசாற்றுவோம்

வடமாகாண சபைத்தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்
உங்களின் உரிமைக்கான குரல்

"இனம் சமூக சேவையாளரும், கட்டப்பட்ட வரைஞருமான இவரை மாகாண சபைக்குத் தேர்வு செய்து எம் மண்ணை வளமாக்குவோம்"
சத்தியகுமாரன் போல் தர்சாந்
(Dip.in Civil Engineering)
X 14
யாழ் மக்கள் இளைஞர் அணி

வட மாகாண சபைத் தேர்தல்-2013
மன்னார் மாவட்டம்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
முதன்மை வேட்பாளர்
வைத்திய கலாநிதி
குா.குணசீலன் (எம்.பி.பி.எஸ்)

X 6 X
இருப்பதை காப்போம்
இழந்ததை மீட்போம்

வடமாகாணசபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்


கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
வடமாகாண விவசாயிகளுக்கான
ஒரேயொரு வேட்பாளர்
பூ. தர்மகுலசிங்கத்தை
அமோக வெற்றிபெறச் செய்யுங்கள்
X 8
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013 யாழ் மாவட்டம்
இன மத குல ஜாதி வர்க்க பேதமின்றிய சேவைக்காக...

சுபியான்
மௌலவியை
மாநகர சபையிலிருந்து மாகாணசபைக்கு தெரிவுசெய்வோம்...
X 6
6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவிலும் கூட்டம் நடத்த ஆளும் தரப்புக்கு அனுமதி

## பொலிஸாரின் செயலுக்கு ஆனைமுகன் கண்டனம்

யாழ்ப்பாணம், செப்.18

கிரிமினல்களின் கூட்டணியான றெமிடியஸூம் இரும்புக் கொள்ளைக் காரரான சிராஸூம் நள்ளிரவில் கூட்டம் நடத்த அனுமதியளிக்கும் பொலிஸார் நாம் முறைப்படி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்க இழுத் தடிக்கின்றனர். இவ்வாறு குற்றம் சுமத்தினார் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் ஆனைமுகன்.

நேற்றுமுன்தினம் மாலை காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒலிபெருக்கி அனுமதி கேட்டு ஐந்து நாள்களுக்கு முன்னரே தேவை யான அனைத்து கடிதத்துட னும் விண்ணப்பத்தை நேரடியாகவே கையளித்தோம். எம்மை ஊர்காவற்றுறை பொலிஸார் ஐந்து நாள்களாக இழுத்தடித்து கடைசி நேரத்திலேயே அனுமதி தந்தனர்.

ஆனால் எந்தவிதமான அனுமதியும் இன்றி நேற்று முன் தினம் இரவு 9 மணிக்கு திடீரென மேடை போட்டு கூட்டம் ஒன்று நடத்தினர் ஆளுந்தரப்பினர். இரும்புக் கொள்ளைக்காரரான சிராஸூம் கிரிமினல்களின் கூட்டாளியான றெமிடியஸூமே இப்படி இரவிரவாக அனுமதி இன்றி கூட்டம் நடத்தினர்.

இந்த றெமிடியஸூம் சிராஸூம் யார்? சிங்களக் கட்சிக்கு தமிழ்த் தேசியத்தை அடகு வைக்கும் இராணுவ கூலிப்படையினர். இவர்களைக் கண்டு பொலிஸார் பயப்படுகின்றனர். அவர்களுக்கு காவல் இருக்கின்றனர்.

அமைச்சர் என்ன, ஜனாதி பதியே என்றாலும் சட்டம் எல்லாருக்கும் பொதுவானது. இதனைப் பொலிஸார் உணர வேண்டும்.

எதிர்வரும் 21ஆம் திகதி நமது வாக்குகள் மூலம் இவர்க ளுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிப்போம்- என்றார். (ஜ-02)

# கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை மனனம் செய்கின்றனர் சிங்களவர்கள்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், செப்.17

ஜனாதிபதியும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மனப்பாடமாக்கி விட்டனர். எங்காவது ஒரு மூலையில் தமிழீழம் அல்லது 'தனிநாடு' என்ற சொல் இருக்கின்றதா

**"பிரிவினை" அல்லது "தனிநாடு" என்று பொருள் பட ஏதாவது காணப்படு கின்றதா? என ஆராயத் தலைப்பட்டு விட்டனர். முடியாத வேளையில் சட்டமா அதிபரிடமும் போய் விட்டனர்.**

என்று துருவித்துருவி ஆராய்கின்றனர் என விமர்சிக்கின்றார் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான துரைராஜசிங்கம்.

நேற்றுமுன்தினம் மாலை ஏழாலையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டதும் சிங்களப் பேரினவாதிகளுக்கு குலைநடுக்கம் ஏற்படுகின்றது. சமஷ்டி ஆட்சி முறை என்பதன் பிதாவே முன்னாள் பிரதமர்களில் ஒருவரான காலஞ்சென்ற எஸ்.டிபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்கதான்.

1828களில், இலங்கையை ஐந்து மாநிலங்களாகப் பிரித்து தனித்தனியாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் இங்கு பன்மைத்துவ மக்கள் வாழ்கின்றனர். அனைத்து இன மக்களும் சமத்துவமாக வாழக்கூடிய வகையில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டும் எனவும் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். அப்போ திருந்த தமிழ் தலைமைகள் இதை ஏற்கவில்லை.

நாடு சுதந்திரம் அடைந்தபின் 1951 இல் அதே பண்டாரநாயக்க சமஷ்டி முறையா? அது கூடவே கூடாது என்று தனிச் சிங்களம் என்று விஷத்தைக் கக்கினார்.

இப்பொழுதும் அதேநிலைதான் நாம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுள்ள சமஷ்டி ஆட்சி முறை வேண்டும் என்று கேட்டுள்ளோம்.

சுயநிர்ணய-சமஷ்டி முறை என்று நாம் குறிப்பிட்டுள்ளதை ஜனாதிபதியும் தென்னிலங்கை இனவாத அரசியல் வாதிகளும் புரட்டிப் புரட்டிப் படிக்கின்றனர்.

சமஷ்டி என்பதற்கு அர்த்தம் தேடித் தேடிக் களைத்துப் போனவர்கள் இப்போது "சுயநிர்ணயம்" என்பதை ஆராய்கின்றனர். அதிலும் கூட இவர்களால் எதையும் காண முடியாது. காரணம் நாம் "ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுய நிர்ணயம்" என்றே குறிப்பிட்டுள்ளோம். இதனை உள்ளக சுயநிர்ணயம் என்றும் கூறலாம்.

இப்படித் தேடித் தேடி களைத்துப் போனவர்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்காவது "பிரிவினை" அல்லது "தனிநாடு" என்று பொருள்பட ஏதாவது காணப்படுகின்றதா? என ஆராயத் தலைப்பட்டு விட்டனர். முடியாத வேளையில் சட்டமா அதிபரிடமும் போய் விட்டனர். இது முட்டையில் ஏதோ பிடுங்குவது போன்றது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குற்றம் கண்டுபிடிக்க எதுவுமே இல்லை. எம் மீது இவர்களால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

முன்னர் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தில் பிரதிகளை அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்த வேளையில் நமது தலைவர்களை சிறையில் அடைத்து தனி நீதிமன்ற விசாரணை நடத்தினர்.

அன்று தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், சிவசிதம்பரம் உட்பட 93 வழக்கறிஞர்கள் நம் தலைவர்களுக்காக வாதாடினர். தமிழ் தலைவர்களை கைது செய்த சட்ட முறையே தவறு என்று சுட்டிக் காட்டினர். இதனை ஏற்றுக் கொண்ட தனி நீதிமன்ற நீதிபதிகள், தலைவர் களை விடுதலை செய்ததுடன் அரசு வழக் கையே வாபஸ் பெற்றுவிட்டது. "தனிநாடு" என்று கூறிய போதும் சட்டவாதத்தால் வெளிவந்தவர்கள் தமிழர்கள். இப்போது இந்த சமஷ்டியை வைத்து பூச்சாண்டி காட்டினால் அதற்கு அஞ்சமாட்டோம் எம்மை எதுவும் செய்ய முடியாது.

அரச தரப்பின் நாடகங்களைக் கருத்தில் கொள்ளாது மக்கள் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழனின் இருப்பை உறுதிசெய்ய வேண்டும்-என்றார்.

(ஜ-2)

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18/09/2013

# உங்கள் குறைகள் படிப்படியாக விலகும்

## மயிலிட்டி மக்களுக்கு விக்னேஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், செப். 18

எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பின்னர் உங்கள் குறைகள் படிப்படியாக அகலும். உங்களது நம்பிக்கையும், பேராதரவும் எப்போதும் இருக்கும் இடத்தில் இழந்தவற்றை நாம் விரைவாக மீட்டுவிடமுடியும். இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் நேற்று மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மீனவக் குடும்பங்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டு அறிந்தார்.

இந்த மக்கள் சந்திப்பு மயிலிட்டி மீனவர்சங்கமுகாமில்இடம்பெற்றது. நீதியரசர் விக்னேஸ்வரனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவும் கலந்து கொண்டார். மீனவர் சங்கத் தலைவர் யோகராஜா, மீனவர் குடும்பங்களின் மீள்குடியேற்ற அமைப்பின் தலைவர் குணபாலசிங்கம், சங்கத்தின் செயலாளர் இளங்குமரன் ஆகியோர் தலைமையில் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது நிலைமையை கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் விளக்கினர்.

இலங்கையிலேயே இரண்டாவது பெரிய மீன்பிடித் துறைமுகமாக விளங்கியது மயிலிட்டித் துறைமுகம்.

இங்கு மூன்று பெரிய ஐஸ்கட்டி தொழிற்சாலைகள், ஏழு உப்பு மில்கள், 20 லொறிகள், இரண்டு பெரிய பாடசாலை, இந்துக் கோயில், இரண்டு பெரிய தேவாலயங்கள், முதலாவது காசநோய் வைத்தியசாலை என எல்லாம் இருந்தன. இவை போரினால் பாதிக்கப்படவில்லை. போர் முடிந்து



இரண்டு வருடங்களின் பின் 2011 இல் இராணுவத்தினராலேயே அழிக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, போர்க் காலத்தில் கடந்த 23 வருடங்களாக சொந்த இடத்தில் இருந்து விரட்டப்பட்டு அகதிகளாக இருக்கின்றோம். நாங்கள் இடம்பெயர்ந்த போதும் எமது வீடுகள் அழிக்கப்படவில்லை. அவை அனைத்தும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டன.

மீன்பிடி முதல் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளும் மயிலிட்டி மண்ணில் பிறந்தவர்களே நடத்தினோம். ஒரு காலத்தில் பிற ஊர்க்காரர்களைக் கூட அனுமதித்ததில்லை. ஆனால் இன்று சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் அகதிகளாக முகாமில் தற்காலிக குடிசைகளில் வசித்து வருகிறோம்.

அண்மையில் எங்கள் சொந்தக் காணிகளைப் போய் பார்க்க மட்டும் அனுமதித்தனர். போய்ப் பார்த்தபோது அங்கு வீடு- வாசல் எதுவுமே இல்லை. எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

அன்று நாங்கள் பார்த்து வழிபட்டுவிட்டு வந்த அந்தோனியார் தேவாலயம் உள்ளிட்ட இரண்டு தேவாலயங்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் புல்டோசர்களைப் போட்டு தகர்த்துவிட்டனர்.

எங்களுக்கு எங்கள் நிலம் வேண்டும். மயிலிட்டி துறைமுகம் திறக்கப்பட வேண்டும். அரச உதவி எதுவும் வேண்டாம். நாங்களே எங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வோம். வாழ்வாதாரங்களைப் பெருக்கிக் கொள்வோம். நாங்கள் கூட்டமைப்பைத்தான் நம்பி உள்ளோம் என்று உருக்கமாகக் கோரினர்.

இவற்றை செவிமடுத்த நீதியரசர் உங்களுடைய குறைகள் எல்லாம் 22 ஆம் திகதிக்குப் பின் படிப்படியாக மறையும். உங்கள் மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை உச்ச தடையை ஒன்றுபட்ட சக்தியின் மூலம் இராணுவத்தை வெளியேற்றுவோம். கவலைப்பட வேண்டாம் என்றார் முதலமைச்சர் வேட்பாளரான விக்னேஸ்வரன். (ஐ-02)

# வடக்கில் ஏகோபித்த ஆதரவை கூட்டமைப்புக்கு வழங்குங்கள்

## தமிழ் சிவில் சமூகம் கோரிக்கை

வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களுக்குதமிழ் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விடுக்கும் வேண்டுகோள்.

தமிழர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் அதன் கீழான மாகாண சபை முறைமையையும் தமது அரசியல் வேணவாக்களைப் பூர்த்திசெய்யும் தன்மையற்றது என தொடாச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனா. 2009 இற்குமுன்னா எமதுதாயகத்தில் நடந்த இரண்டு (1989, 2008) மாகாண சபைத் தேர்தல்களை தமிழ்த் தேசியநிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் புறக்கணித்திருந்தன. 2012இல் இடம்பெற்ற கிழக்குமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. எதிர்வரும் செப்டம்பா 21 அன்று நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புபோட்டியிடுகின்றது.

தமிழ் சிவில் சமூகத்தைச் சோந்த நாம் 13 ஆவது திருத்தத்தை தமிழரகளின் பிரச்சினைகளுக்கான ஒரு அரசியல் தீர்வல்ல என உறுதியாக கருதுகின்றோம். அது அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளி தானும் இல்லை என்பதே எப்போதும் எமது நிலைப்பாடு. கட்சிகளை முன்னிலைப்படுத்தும் அரசியலைக் கடந்து, தமிழர் தரப்பு அரசியல் தொடரந்தும், இருப்புக்கான தேசிய அபிலாசைகள் மற்றும் கொள்கை வழிப்பட்டதாக அதனூடான விழிப்புணர்வையும் மக்கள் எழுச்சியையும் நோக்கியதாகவே இருக்கவேண்டும், அதற்காக செயற்பட வேண்டும் என்பதே எமதுநோக்கம்.

எனினும் வடமாகாணசபைத் தேர்தலில் அரசு சார்பு கட்சியொன்று ஆட்சியமைக்கின்ற சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குதமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை இத் தேர்தலில் தெரிவிப்பது அவசியம் தான் என நாம் கருதுகின்றோம்.

தமக்கெதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களிற்கு எதிராகத் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காகதமிழ் மக்கள் தோதல்களில் பங்குபற்ற வேண்டும் என்பதனால் நாம் மக்களை இத் தேர்தலில் பங்குபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

எமது நிலம், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு போன்ற தமிழரின் தனித் தேசத்திற்குரிய கூறுகள் யாவற்றையும் அழிக்கும் இலங்கை அரசின் தொடர்ச்சியான இனவழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தோடு ஒத்தியங்கும் கட்சிகளைத் தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும் என நாம் வேண்டுகிறோம். தொடரும் இனவழிப்பின் ஒரு அங்கமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைக் காவுகொண்ட இந்த இனப்படுகொலை அரசிற்கோ அதனது கொள்கைகளுக்கோ வக்காலத்து வாங்கும் கட்சிகளுக்கோ மக்கள் வாக்களிப்பது வரலாற்றுத் தவறாகிவிடும்.

அபிவிருத்தியையே தமிழ் மக்கள் கோருகிறார்கள் உரிமைகளையல்ல எனக் கூறி தமிழ் மக்களது உரிமைகளை மறுதலிக்கின்ற காட்டிக் கொடுப்பு அரசியலை நாம் தொடாச்சியாக நிராகரித்தாக வேண்டும்.

இன்று அரசால் மேற் கொள்ளப்படுவதாகச் சொல்லப்படும் அபிவிருத்திகள் எல்லாமேஎமதுதேசத்தின் சுயாதீனமான இருப்பிற்குச் சவால் விடுக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. சிங்களதேசம் தமிழ்த் தேசத்தின் பொருளாதாரத்தைக் கபளீகரம் செய்யும் வகையிலான அபிவிருத்தியே தமிழ்த் தேசத்தில் இடம்பெறுகின்றது. தமிழ் மக்களது இயலுமைகளை வளர்த்தெடுக்கும் வகையிலான, தமிழ் மக்களைபலமான சமூகமாக வளரத்தெடுக்கும் அபிவிருத்தி இங்கு இடம்பெறவில்லை என்பதனைக் கவனிக்கவேண்டும். அரசும் அதன் ஆதரவாளர்களும் எம்மிடமிருந்து பறித்தவற்றை மீளத் தருவதற்கும், அழித்தவற்றை மீளக்கட்டித் தருவதற்கும் விலையாக தமிழரின் ஆன்மாவாகவும், இருப்புக்கு மூலாதாரமுமாக உள்ள தேசிய [illegible] சைகளை எம்மை கைவி[illegible] கின்றனர். ஆகவே வாக்களிக்கும் தகுதியுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் அரசின் நிகழ்ச்சித் திட்டத்தை நிராகரிக்கும் ஆயுதமாக தமது வாக்குச் சீட்டைப் பயன்படுத்து வது அவசியமானதாகும்.

எங்கள் வாக்குகளை அறிந்தவர் ஊரார், உறவினர், நண்பர் என்ற காரணங்களுக்காகவோ அல்லது அபிவிருத்தி, அனைவரும் சமம் என்ற மாயாஜாலங்களில் மயங்கியோ அரசமற்றும் அரச ஆதரவுக் கட்சிகளுக்கு வழங்கி வீணடிக்கக்கூடாது

நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கு வழியேதும் காணாமல் எம்மீது திணிக்கப்படும் தோதல்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் முன் யோசனையுடனும் தூர நோக்குடனும் செயற்படுவது இற்றைக் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் முன்னகர்வுக்கு மிகவும் அத்தியாவசியமானது. எமது உரிமைக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களை தறுக்கணிக்கக் கூடிய மாகாண சபை முறைமைக்கான தேர்தல் தொடர்பில் நாம் அதிக அவதானத்துடன் செயற்படவேண்டும். குறிப்பாகமாகாண சபை முறைமைக்கும் அரசியல் தீர்வுச் செயன் முறைக்கும் இடையிலான உறவு நிலைதொடாபில் கூட்டமைப்பு தெளிவான நிலைப்பாட்டைதமதுதோதல் அறிக்கை மூலம் முன்வைக்காமை எமக்குக் கவலையளிக்கின்றது. குறிப்பாக சமஷ்டியை நோக்கிய நகர்வில் மாகாண சபையில் பங்குபற்றுவது முதற்படியாக இருக்கும் என்ற த.தே. கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையின் பகுதிகளைமக்களையும் சர்வதேசத்தையும் தவறாக வழிநடத்தும் ஒரு ஆபத்தான- பிழையான செய்தியாகநாம் கருதுகின்றோம். 13ஆம் திருத்தத்திற்குள் எமது தேசிய அரசியலைமுடக்கும் தமிழ்த் தேசிய நலன்களுக்கு எதிரானவர்களின் முயற்சிகளுக்கு த.தே. கூட்டமைப்பின் இத்தகைய நிலைப்பாடு வலுச் சேர்த்து விடுமோ என அஞ்சுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு [illegible] தேசிய அரசியலின்பால் உண்மையானபற்றும் உறுதியும் கொண்ட த. தே. கூ. வேட்பாளர்களைத் தெரிவு செய்து வழங்குவதும் எமது மிக முக்கிய கடமையாகும்.

அமையவிருக்கும் மாகாணசபையிடம் எவ்வித நிரந்தர அதிகாரங்களும் இல்லை என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தேர்தல் காலத்தில் மாகாண சபை மூலமாக செய்யக் கூடியவை தொடாபில் வேட்பாளர்களால் முன் வைக்கப்படும் அதிகப் பிரசங்கித்தனங்கள் தொடாபில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

ஆளுநரை மாற்றுவதாலோ அல்லது 13ம் திருத்தத்தில் உள்ளதாகக் கூறப்படும் அதிகாரங்களைமுழுமையாகப் பெற்றுக்கொள்வதாலோ தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்துகாள்ள முடியாது. தொடரும் இன அழிப்பிலிருந்து பாதுகாப்பேதும் பெற்றுக்கொள்ளவும் முடியாது என்ற உண்மையைநாம் மறக்கக் கூடாது.

வடமாகாண சபையில் போட்டியிடுவதற்கானநோக்கம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க மாகாண சபை ஓர் ஆரம்பப் புள்ளிதானும் இல்லை என்பதனை நிரூபிப்பதற்காகவாகவும் இருக்க வேண்டும். வடமாகாணசபையில் வெற்றிபெற்றவுடன் குறிப்பிட்ட கால வரையறையுடனான மாகாண சபைக்கான வேலைத் திட்டத்தினை வரைந்து, அதனைப் பகிரங்க மாக முன்வைத்து, அவ் வேலைத் திட்டத்தின் கணிசமான பங்கு நிறைவேற்றப்பட முடியாதவிடத்து தொடர்ந்து த.தே.கூ மாகாணசபை நடவடிக்கைகளில் பங்கெடுப்பது தொடர்பில் மீள்பாசீலனை செய்வதை தமது தந்திரோபாயமாக வைத்திருக்க வேண்டும் என கூட்டமைப்பிடம் நாம் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை த.தே.கூட்டமைப்பு தனக்குக் கிடைக்கும் வாக்குகளை மக்கள் ஆணையாகக் கருதிதமிழ் மக்கள் தமது உரிமைகளுக்கான வெளிப்படுத்தல்களை செய்யக் கூடிய ஒரு அரசியல், சமூகவெளியை உருவாக்கி, அவரகளுக்கு பக்கபலமான நிறுவனமாக இயங்க வேண்டுமென நாம் த. தே. கூட்டமைப்பிடம் கோரி நிற்கின்றோம்.

எமது அரசியல் தீர்வுக்கான அடுத்த கட்டப் போராட்டம் மாகாண சபை முறைமையிலிருந்து பிறப்பெடுக்க மாட்டாது. தமிழ் மக்களை ஒரு பொறுப்பான அரசியல், சமூக அணி திரட்டலுக்கு உட்படுத்துவதிலும், தமிழ்த் தேசத்தின் சமூகக் கட்டுமானங்களை மீளக் கட்டி யெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், சர்வதேச பூகோள அரசிலைச் சரியாகக் கையாளும் முறையிலுமே எமது அரசியல் தீர்வுக்கானபோராட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது. த. தே. கூட்டமைப்பு இத் தேர்தலில் தமக்கு மீண்டும் தமிழ் மக்கள் வழங்கும் ஆணை தமிழர்களுக்கான இத்தகைய ஒருஅரசியல் வெளியை மாகாண சபை முறைமைக்கு வெளியில் உருவாக்குவதற்கான ஆணையென்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்த வெளியை மக்களுக்கு வழங்கி மக்கள் திரள் அரசியலை கட்டி எழுப்புவது தான் த.தே. கூட்டமைப்பின் முதன்மைப் பணியாக இருக்க முடியும்.

தமிழகமும் புலம்பெயர்ந்த தமிழரகளும் இன்று ஈழத் தமிழரகளின் பலமாக இருப்பவர்கள். எம்மீது உண்மையான கரிசனை உள்ளவர்களும் இவர்களுள் உள்ளார்கள். இன்று எமது இருப்புக்கு சிறிய அளவிலேனும் கிடைக்கின்ற பாதுகாப்புக்குகாரணமான உலகினது பார்வையை எம்மீது திருப்பி வைத்திருப்பவரகள் இவர்கள். நாங்கள் விரும்பியும் பேசமுடியாது மௌனிகளாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் போது எமதுஅபிலாசைகளைப் பேசுபவரகள் அவர்கள். அவர்களுக்கு உரிய நன்றிகளுடனும் கௌரவத்துடனும் அவரகளையும் இணைத்துக் கொண்டு எமது அரசியலைப் பலப்படுத்தக் கூடிய வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டியது த. தே. கூட்டமைப்பின் முக்கியமான பணியாகும். மாறாக இந்த உறவை பலவீனப்படுத்தக் கூடாது. இதன் மூலமே அவரகளது உண்மையான கரிசனைக்கும் எமது உரிமைக் கோரிக்கைகளுக்கும் எம்மால் வலுச் சேர்க்க முடியும் என்றுநாம் நம்புகின்றோம்.

எமது தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசைகளுக்கு எதிரானவர்களுக்கும் உரிமைகளைக் கேட்டதற்காகஎமக்கு அவலங்களைத் தந்தவரகளுக்கும் அவரகளுக்கு துணைபோனவர்களுக்கும் எதிரானஉங்கள் எதிர்ப்புவாக்குகளைப் பதிவுசெய்யும் வகையில் 2013 செப்டம்பா 21 சனிக்கிழமை அன்று நாம் அனைவரும் வாக்களிப்பில் பங்குபற்றிதமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்போம் எனஉறுதிகொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனிப்பாரின்றி கொடிகாமத்தில் 52 குடும்பங்கள்

தென்மராட்சி, செப். 18
கொடிகாமம் நகர்ப்பகுதியை அண்மித்த பகுதியில் கவனிப் பாரற்ற நிலையில் 52 குடும் பங்கள் உள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.
கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் நகர்ப் பகுதியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் மந்துவில்-மருதடிக்குச் செல் லும் இரண்டு கிலோமீற்றர் தூரமான விதானையார் ஒழுங்கையில் உள்ள குடும் பங்களே தம்மை எவரும் கவனிக்காமல் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.
இந்த ஒழுங்கையில் 52 குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் மின்சார வசதி செய்து கொடுக்கவில்லை யெ னவும் இது தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரி களுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.
அவர்களில் 15 குடும்பங்கள் அடிப்படை வசதிகளற்ற நிலை யில் ஓலைக் கொட்டிலில் வசித்து வருவதாகவும் தெரி வித்தனர்.
தாவளை-இயற்றாலை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குறித்த ஒழுங்கையில் வசிப் போருக்கு எப்போது விமோ சனம் கிடைக்குமென காத்தி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட் டது.
வீதியும் இன்னமும் புனர மைக்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர். (வ-9)

## போருக்கு ஒத்துழைத்தீர்கள்; ஆனால் தீர்வுக்கு இல்லையே

### பாகிஸ்தான் தூதுவரிடம் வணிக சங்கத்தின் தலைவர் ஜெயசேகரன் எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், செப்.18
இலங்கை நடத்திய போருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய பாகிஸ்தான், தமிழருக்கு நிரந் தர தீர்வு கிடைப்பதற்கும் முழு மையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று பாகிஸ்தானியத் தூதரிடம் தெரிவித்துள்ளார் வணிகர் சங் கத் தலைவர் இ.ஜெயசேகரன்.
யாழ்.மாவட்டத்துக்கு நேற் றைய தினம் வருகை தந்த பாகிஸ் தானியத் தூதுவர் ஹபின் குரோஸி பல்வேறு தரப் பினரையும் சந்தித்துக் கலந்து ரையாடினார். இதன் போது வணிகர் சங்கத்துக்கும் சென்று கலந்துரை யாடினார்.
இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக இ.ஜெயசேகரன் கூறிய தாவது:
இங்குள்ள களநிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற் காகவே வந்ததாக பாகிஸ்தானியத் தூது வர் தெரிவித்தார்.
போருக்குப் பின்னரான சூழலில் யாழ். மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் முதலிட விரும்புவதாக வும் குறிப்பிட்ட அவர் குறிப் பாக சிமெந்து கலவையைப் பொதி செய்யும் நடவடிக்கை களை ஆரம் பிக்கவே விரும்பு வதாகத் தெரிவித்தார்.
இதன்பின்பு நான் தெரிவிக் கை யில், இங்கு நடந்த போருக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிய பாகிஸ்தான், போர் முடிவுற்ற 4 வருடங்கள் கடந்த நிலையிலும் நிரந்தர தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப் படாமை குறித்து கவனம் செலுத்தவில்லை.
இலங்கை அரசுக்கு அழுத் தத்தை வழங்கி தமிழருக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க நட வடிக்கை எடுக்க வேண் டும்-என்றார். (ஓ-5-ரி)

## சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி, செப்.18
துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் மகநெகும கிராம வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட இரு வீதிகள் புனரமைக்க 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.
நகரசபை உறுப்பினர் நடராசா திருக்குமர னால் முன்மொழியப்பட்ட நுணாவில் மேற் கில் உள்ள தாளையடி அம்மன் வீதி முத லாம் ஒழுங்கை, அடைப்பு வயல் வீதி இரண் டாம் ஒழுங்கை ஆகியவை தலா 5 லட்சம் ரூபா செலவில் புனர மைக்க நிதி ஒதுக்கீடு செய் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வாக்காளர் அட்டை வரவில்லையா? பரவாயில்லை வாக்களிக்கலாம்

### அடையாள அட்டையுடன் செல்லுங்கள்

யாழ்ப்பாணம், செப்.18
வடமாகாண சபைத் தேர்த லுக்குரிய உங்களுக்குரிய வாக் காளர் அட்டை இது வரையில் கிடைக்கவில் லையா? அப்படிக் கிடைக்கா விட்டாலும் கூட வாக்களிக் கலாம். உங்கள் தேசிய அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்க முடியும்.
தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டால் தற்காலிக அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு, முதியோர் அ. அட்டை, ஓய்வூதிய அ.அட் டையுடனும் சென்று வாக்க ளிக்கலாம்.

> தேசிய அடையாள அட்டை இல்லா விட்டால் தற்காலிக அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச் சீட்டு, முதியோர் அ.அட்டை, ஓய்வூதிய அ.அட்டையுடனும் சென்று வாக்க ளிக்கலாம்.

இவ்வாறு அறிவித்துள்ளார் வடமாகாண பிரதித் தேர்தல் கள் ஆணையாளர் சிவன் சுதன் அச்சுதன்.
எதிர்வரும் சனிக்கிழமை வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறும் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரமே இந் தத் தேர்தல் இடம்பெற வுள்ளது.
நேர காலத்துடன் ஒதுக்கப் பட்ட வாக்களிப்பு நிலையங் களுக்குச் சென்று வாக்கைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்றும் அவர் தெரிவித்துள் ளார். (ஒ-5)

## அளவெட்டியில் இளைஞருக்கு மலேரியா பிரதேசத்தவருக்கு இரத்தப் பரிசோதனை

வலி.தென்.மேற்கு, செப்.18
வலி.வடக்கு பிரதேசத்தில் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வாலிபர் ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப்பகுதியில் வசிக்கும் மக்கள் மீது இரத்தப் பரிசோதனையை மேற்கொண்ட சுகாதாரப் பகுதியினர் அவர்களுக்கு மருந்து கலந்த நுளம்பு வலைகளையும் வழங்கியுள்ளனர்.
வலி.வடக்கு பிரதேசத்தில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்தியாவிலிருந்து வருகை தந்த அளவெட்டி கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் மலேரியா நோயின் தாக்கத்துக்குள்ளானது பற்றி வைத்திய பரிசோதனை மூலம் தெரிய வந்தது.
அதையடுத்து, அளவெட்டி கிராமத்துக்கு விரைந்து சென்ற சுகாதாரப் பகுதியினர், இனங்காணப்பட்ட நோயாளியின் வசிப் பிடத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்துக்குள் வசிக்கும் மக்கள் மீது இரத் தப் பரிசோதனை மேற்கொண்டதுடன் அவர்களுக்கு மருந்து கலந்த நுளம்பு வலைகளையும் வழங்கியுள்ளனர். (ஓ-115)

## வல்லிபுர மாயவன் இன்று தேரேறி அடியார்களுக்கு அருட்காட்சி

### விசேட போக்குவரத்து ஏற்பாடு



வடமராட்சி, செப்.18
சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ் வார் கோயில் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமையும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நாளை 19 ஆம் திகதி வியாழக் கிழமையும், கேணித் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் 20 ஆம் திகதி வெள் ளிக்கிழமையும் நடை பெறவுள்ளன.
இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி எழுந்தருளி காலை 9.15 மணிக்கு தேரில் ஆரோகணிப்பார். நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சுவாமி வல்லிபுரம் வங்காள விரிகுடாக் கடலோரம் எழுந்தருளி அங்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கேணித் தீர்த்தத்திருவிழா நடைபெறுவதுடன் மாலை கொடி இறக்கத் துடன் வருடாந்தப் பெருந்திருவிழா நிறைவடையும்.
தேர், சமுத்திர, கேணித்திருவிழாக்களை ஒட்டி குடாநாடு முழுவ தும் இ.போ.ச. தனியார் சிற்றூர்திகளின் விசேட பஸ்சேவைகள் இடம்பெறும். கோயில் சுற்றாடல்களில் அன்னதானம், தண் ணீர்ப் பந்தல் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. பருத்தித் துறை பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள் வார்கள்.
இந்தத் திருவிழாக்களுக்கு திரளும் பக்தர்கள் சமயக் கோட் பாடுகள், கலாசார பண்பாட்டுக்கு அமைவாக உடைகள் அணிந்து வருவதுடன் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை அணிவதைத் தவிர்த்து வல்லிபுர மாயவனின் அருளைப் பெற்றேகுமாறு வல்லிபுர ஆழ்வார் கோயில் அறங்காவலர் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-8)

## தமிழினத்தின் அபிலாசைகளையே பிரதிபலிக்கிறது கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம்

### அதனை அரசு ஏற்க மறுப்பது கவலை தருகிறது என்கிறார் மன்னார் ஆயர்

யாழ்ப்பாணம், செப். 18
எங்கள் தமிழினத்தின் கனவுகள், அபிலாசைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனை அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பது கவலை யளிப்பதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தெற்கில் எதிர்ப்பலை வீசுவது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தமிழ் மக்களின் நீண்ட காலக் கனவுகள், அபிலாசைகள், எதிர் பார்ப்புக்களை உள்ளடக்கியதாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் தெளி வாக உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதனைத் தேவையற்ற விதத்தில் பயங்கரவாதமாக மாற்றிய மைத்துள்ளனர். மக்களின் உரிமையை ஏற்றுக் கொள்ளாத வர்களின் கருத்துக்களாகவே இருக்கின்றன. அரசே இந்தக் கருத்தை கூறியபோது கவலையளிக்கின்றது.
எங்கள் வரலாற்று உண்மையை நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சரியான நேரத்தில் அது வெளியிடப்பட்டுள்ளது. சட்டத்தை மீறாத வகையில் இலங்கை அரசியலமைப்புக்கு உட்பட்டே தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக் கப்பட்டுள்ளது.
உரிமையை மதித்து நடக்கும்போதுதான் இலங்கை முன் னேறும். அதனை விடுத்து தென்னிலங்கை மக்களை உணர்ச்சி யூட்டுவதற்காக பிழையான தகவலை வழங்கக்கூடாது- என்றார். (ஒ-5)

## பட்டதாரி பயிலுநர், சமுர்த்தி உத்தியோகத்தர் 3 வேளை கையொப்பம் இடவேண்டும்

### ஆளும் கட்சிக்கு பரப்புரை செய்வதை தடுக்க அதிரடி

யாழ்ப்பாணம், செப்.18
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் பட்டதாரிப் பயிலுநர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆளும் தரப் பினரால் பலவந்தமாக ஈடுபடுத் தப்பட்டுள்ளமை தொடர்பான முறைப் பாடுகளையடுத்து தேர்தல்கள் ஆணை யாளரால் அதிரடி நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது.
பட்டதாரிப் பயிலுநர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூன்று வேளை பிரதேச செயலகத்தில் கையொப்பம் இட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய அறிவித்துள்ளார்.
[illegible] சமுத்திர [illegible] யின் அமைச்சர்கள், வேட்பாளர் களினால் சமுர்த்தி உத்தியோகத் தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தேர்தல் பரப்புரையில் ஈடுபட வைக்கப் பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக குற் றஞ்சாட்டி வந்ததுடன் இது தொடர் பில் தேர்தல்கள் ஆணையாள ருக்கும் முறைப்பாடு செய்திருந்தது.
இந்த நிலையில் பிரதேச செய லகங்களுக்கு வெளியே கடமையி லுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்துக்கு வந்து மூன்று வேளையும் கையொப்பம் இட வேண்டும் என்றும் அதே போன்று பட்டதாரிப் பயிலுநர்களும் மூன்றுவேளையும் கையொப்பமிட வேண்டும் என்று அறிவித்துள்ள தேர்தல் ஆணையாளர், அவர்கள் கடமையில் இருப்பதைப் பிரதேச செயலர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## ரூ.180 திருடியவர் 25 ஆயிரம் ரூ. பிணையில்

தென்மராட்சி, செப்.18
180 ரூபா திருடிய நபர் 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் அனுமதிக்கப்பட்டது.
வர்த்தக நிலையங்களில் இஷ்ட தெய்வங்களின் விக்கி ரகங்களை வைத்து வர்த்தர்கள் நாளாந்த காணிக்கை செலுத்துவது வழமை.
இதே போன்று கொடிகாமம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் அண்மையில் வைக்கப்பட்டிருந்த குபேரன் சிலைக்கு தினமும் பணம் போடப்பட்டு வந்தது.
நேற்று முன்தினம் கடைக்கு வந்த நபர் சிலைக்குப் போடப்பட்டிருந்த பணத்தை அபகரித்துக் கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் கடை உரிமையாளரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
குறித்த நபரை பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை 25 ஆயிரம் ரூபா பெறுமதயான ஆள் பிணையில் செல்ல உத்தர விட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எதிர்காலத்துக்கு ஒளியூட்ட உங்கள் வாக்குகள் உதவட்டும்

வாக்காளப் பெருமக்களே! இன்னும் இரண்டு நாள்கள் கழிந்து விட்டால், அதாவது எதிர்வரும் சனிக்கிழமை நீங்கள்தான் எங்கள் வடக்கு மாகாணத்தின், நாயகர்கள்.

மாகாண சபைக்குரிய முப்பத்தெட்டு ஆசனங்களில் யார் யாரை இருத்தப் போகிறீர்கள் என்பதனைத் தீர்மானிக்கப் போகும் பெரும் பேறு உங்கள் கைக்கு வரப்போகிறது. அந்த வகையில், வாக்குரிமை உள்ள நீங்கள் எல்லோரும் அன்றைய தினம் அதிர்ஷ்ட சாலிகளே.

கடந்த பலப்பல ஆண்டுகளாக, உங்களை ஏறெடுத்தும் பார்க்காமல் சென்றவர்கள், ஒரு பொருட்டாகத்தானும் கருதாதவர்கள், இப்போது உங்களைத் தேடி நாடி வந்திருப்பது தெரிகிறது; புலப்படுகிறது. எல்லாமே "விசயத்தோடு" தான்!

உங்களில் பலர், நாடாளுமன்றத் தேர்தலிலும், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களிலும் வாக்களித்து இருப்பீர்கள். ஆனால் இப்போது நடைபெறப்போவது வடக்கு மாகாண சபைத் தேர்தல். இதுவரை நடைபெற்ற பலவகைத் தேர்தல்களைவிட, இருபத்தியோராம் திகதி நடைபெறும் தேர்தலை, அனைத்துலக நாடுகளும் அக்கறையோடும் ஆர்வத்தோடும் அவதானிக்கின்றன.

புலம்பெயர்ந்து பூமிப்பந்தின் பல திசைகளிலும் வாழும் உங்கள் உறவுகளும் மிகுந்த அக்கறையுடன், எமது மாகாணத் தேர்தலின் முடிவுகளை.உரிமையுடன் எதிர்பார்க்கின்றனர். ஆகப்பிந்தி, 2010ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை விடவும் மிகப் பல மடங்கு

எதிர்பார்ப்புகளுடன் உள்ளனர் அவர்கள்.

தமிழ் மக்கள் - தமது உறவுகள் - தங்களைத் தாமே ஆள வேண்டும். அதற்கான காலம் விடிய வேண்டும் என்பதே எமது புலம்பெயர்ந்து வாழும் தொண்ணூறு சதவீதமான உறவுகளின் உள்ளார்ந்த உணர்வு. தங்களுடையது என்று தனித்துவமான அரசியல் ஆட்சிக் கட்டமைப்பு கிடைத்து விட்டால், வேண்டிய வகை உதவிகளைச் செய்வதற்கு அவர்கள் எப்போதும் தயாராகவே உள்ளார்கள்.

வடக்கு மாகாண சபை உருவாகினால், இத்தனை காலமாக பல இழப்புகளையும், மிகப்பெரும் பரிமாணங்களில் சொல்லொணாக் கஷ்டங்களையும் அனுபவித்த வடக்கு மக்களுக்கு, அவர்களின் அன்றாட வாழ்விலும் பல்துறைசார் அபிவிருத்தி நிலைகளிலும் ஓரளவிலேனும் முன்னேற்றத்தைக் காண இயலும் என புலம்பெயர் உறவுகள் நம்புகிறார்கள்.

அந்த வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில், வெறும் போலித்தனமும், உள்ளாந்தரமான கெடுதிகளை பொதித்தும் வைத்திருக்கும் மற்றும் ஒவ்வாத அட்டவணைகளைக் கொண்ட தரப்புகளையும் இலகுவாக இனங்காணும் வல்லமை வடக்கு வாக்காளர்களுக்குத் தேவை.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலை, நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சமமான ஒன்றெனக் கருதி வாக்களிக்க வேண்டிய தேவை உண்டு.

ஆகையால், அற்ப சொற்ப சலுகைகளையும், தெரிந்தவர் தெரியாதவர் என்ற உதிரியான உப சமன்பாடுகளையும் கருத்தில் கொள்ளாமல், எதிர்காலத்தில் எங்கள் மண்ணின் விடிவுக்கான தூரநோக்குடன் வாக்களிக்க வேண்டியது உங்களின் தலையாய பொறுப்பும் ஆத்மார்த்தமான தட்டிக்கழிக்க முடியாத கடமையுமாகும்.

ஆகையால், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெறுமானத்தை உணர்ந்து தவறாது வாக்களிக்க வேண்டும்.

பாரதூரமான தேர்தல் வன்செயல்களுக்கு இடம் தராது, தண்டிக்க வேண்டியவர்களை பாரபட்சம் மற்றும் பாகுபாடு காட்டாமல் தண்டித்து நியாயமான வகையில், நீதியான முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதனைச் சம்பந்தப்பட்ட அரச இயந்திரங்களும்- அதிகாரிகளும், அலுவலர்களும்- மனதிருத்தி கடமையாற்ற வேண்டும்.

மக்களுக்கும் மாகாணத்துக்கும் வசதி வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகப் போலித்தனம் காட்டும் போட்டியாளர்களைத் தலைகுனியச் செய்யும் வகையில் அவர்களை இனங்காண்பது மிகவும் பிரதானமான தேவை.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும், அவர்களின் தராதரங்கள் மற்றும் மக்களுக்கான சேவை மனப்பான்மை, மக்களுக்கு உதவுவதான வாய்ச் சவாடல்களை ஒரு புறத்திலும்-

மக்கள் நலன் கருதிப் பற்றுறுதியுடனும், பதவிக் காலம் முழுவதிலும் எமது மக்களின் உறவுகளாக உள்ளும் புறமுமாக உழைக்க வல்லவர்களை மறுபுறத்திலும்- வைத்து-

வாக்காளர் பெருமக்களாகிய நீங்கள், தராசு போன்று சமன் தூக்கும் நிலை நின்று, சீர்பார்த்து தங்களின் பொன்னான வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

உங்களின் தீர்க்கமான, பெறுமதி வாய்ந்த வாக்குகள் எங்களதும் எதிர்காலச் சந்ததியினரதும் எதிர்காலத்துக்கு ஒளியூட்ட உதவட்டும்.

# முடிவெடுக்க வேண்டிய நேரமிது




மகேந்திரன்.என்.ஆர்.


தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கொடுக்க முடியாது. அதாவது "பிரபாகரனால் இயலாததை வேறு எவராலும் அடைய முடியாது" என்பதில் இருந்து ஜனாதிபதி தன் உள்ளத்தில் உள்ளதை வெளியே அவிழ்த்து விட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டைப் பிரிக்கச் சொல்லிக் கேட்கவில்லை. ஆனால் ஆட்சியில் இருக்கும் ஆளும் சிங்களத் தலைமைகள் தவறாகப் புரிந்து சிங்கள பௌத்த மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டி வருகின்றனர்.

தமிழ் மக்கள் செறிவாக வாழும் வட மாகாணத்தில் கூட, அந்த மக்களுக்கு உரிமைகள் வழங்கக் கூடாது என்பதே ஆளும் தரப்பினரது உள்நோக்கம். இதைப் புரிந்தும் புரியாதவர்கள் போல எம்மவர்களில் சிலர் அரச சார்பு சுயேச்சைக் குழுக்களாகவும், ஆளும்கட்சி வேட்பாளர்களாகவும் தேர்தல்களில் போட்டியிடுவதன் உள்நோக்கம் அவர்களின் சுயநல நோக்கமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பின்னால் நின்றால் உழைக்க முடியாது. ஜே.பி. பட்டம் கிடைக்காது. சொகுசாக வாழ முடியாது. எனவே தமிழினம் எக்கேடு கெட்டாலும், நிலம் பறிபோனாலும், மொழி சிதைந்தாலும் பட்ட கஷ்டம் போதும். அரசுக்கு வால் பிடித்தால் நல்லாயிருக்கலாம். இதனைத்தான் ஆளும் தரப்பினர் எதிர்பார்க்கின்றனர். 65 வருட கால இனப் பிரச்சினையை தீர்க்காமல் அபிவிருத்தியைக் காட்டி பல சலுகைகளைச் செய்து தமிழ் மக்களை பொய்ப் பிரசாரங்களின் மூலம் திசை திருப்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீதும், அதன் தலைவர் மீதும் வீண் பழிகளைச் சுமத்தினால் தமிழ் பேசும் மக்கள் அவர்களில் வெறுப்படைவர் எனத் தப்புக் கணக்குப் போடுகின்றனர்.

அதன்மூலம் தாங்கள் வாக்குகளை அபகரித்துக் கொள்ளலாம். அடிப்படை உரிமைகளைக் கொடுக்காது இழுத்தடித்து வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவரும் என்ன செய்கின்றனர். அவர்களால் என்ன பிரயோசனம் என்று அவர்கள் மீது அவதூறு கூற வைக்கலாம் என்பதும் இவர்களது திட்டம்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் சரியான நீண்டதூர பார்வையுள்ள அனுபவம்மிக்க தலைமையும் தான் தமிழ் பேசும் மக்களின் துன்ப துயரங்களை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.





கிழக்கு மாகாணத்தை எடுத்துப் பார்த்தால் உண்மையிலேயே முழுக்க முழுக்க தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்த மாகாணம். இதற்கு சரித்திர, ஆன்மிக, புவியியல் ரீதியிலான ஆதாரங்கள் இன்றும் உண்டு. அதனால்தான் அரச கூலிப்படைகள் அந்த ஆதாரங்களை நிர்மூலமாக்கி புத்த விகாரைகளும் சிலைகளும் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் நிறுவி வருகின்றார்கள். இதே நிலை இன்று வடமாகாணத்தில் ஏற்பட்டு வரும்போது எப்படி தமிழ் மக்கள் அரசுக்கு வாக்களிக்க முடியும்?

தென்னிலங்கையைப் போல வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பெரிய அபிவிருத்திகள் எதுவும் நடைபெறவில்லை. வெறும் வீதி அபிவிருத்திகள் தான் செய்துள்ளனர்.

"பிரபாகரனால் இயலாததை வேறு எவராலும் செய்ய முடியாது" என்று சொல்லும் ஜனாதிபதி ஏன் வடக்கையும் [illegible] யிருந்து சுகபோகம் அனுபவிப்பதற்காக சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் இன, மத , மொழி, பிரதேச வாதத்தை வளர்த்து வருகின்றார்கள்.

அரசும் , அரச கூலிப்படைகளும், ஒட்டுக் குழுக்களும் தமிழ் பேசும் மக்களைப் பயமுறுத்தி பலவித நெருக்கடிகளைக் கொடுத்து வாக்குப் பெற முயல்கின்றனர். தமிழ் மக்கள் இதைப் போல பலவித கஷ்டங்களை அனுபவித்தவர்கள். ஆகவே அவர்கள் தங்களின் தன்மானத்தை இழந்து சிங்கள பேரினவாத கட்சிகளுக்கோ அவர்களின் அடிவருடிகளான சுயேச்சைக் குழுக்களுக்கோ வாக்களிக்கத் தயாரில்லை என்பதை எதிர்வரும் 21 ஆம் திகதி நிரூபிக்கத்தான் போகின்றார்கள்.




புத்த விகாரைகளும்
சிலைகளும்
தொல்பொருள்
திணைக்களத்தின்
உதவியுடன் நிறுவி
வருகின்றார்கள்.
இதே நிலை இன்று
வடமாகாணத்தில்
ஏற்பட்டு வரும்போது
எப்படி தமிழ் மக்கள்
அரசுக்கு வாக்களிக்க
முடியும்?

தமிழ் பேசும் மக்கள் இன்று இவ்வளவு துயரங்களையும் அனுபவிக்க முழுக் காரணம் பேரினவாத அரசின் ஏகாதிபத்திய சிந்தையுள்ள ஆளும் சிங்களத் தலைமைகளே. இத்தகைய தலைமைகள்தான் இன்று வடபகுதி வந்து தமிழ் பேசும் மக்களின் நண்பர்கள் போல நடித்து வாக்குக் கேட்கின்றார்கள்.

அபிவிருத்தி என்ற மாய்மாலத்தைக் காட்டினால் தமிழ் மக்களின் உரிமை கள் கிடைத்திருக்குமா? எதிர்கால சந்ததி சொந்த மண்ணில் வாழ முடியுமா? சுயமரியாதையுள்ள தமிழன் அரச கட்சி சார்பில் போட்டியிட்டு இனத்தை நலிவு படுத்துவோருக்கு வாக்களிப்பானா?

உலகில் வாழும் சகல தமிழ் பேசும் மக்களுக்கும் விடுதலைக்கான ஒரு திறவுகோலாக விளங்குபவர்கள் வட பகுதி தமிழ் பேசும் மக்கள். அத்தகைய மக்கள் பேரினவாத அரசினதும் அவர் களின் கைக் கூலிகளினதும் பசப்பு வார்த்தைகளுக்கு மதிமயங்கி தங்கள் வாக்கை விற்கக்கூடாது.


இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களையும் அவர்களின் உடைமைகளையும் அவர்களின் கலாசார பாரம்பரியங்களையும் அழித்து அவர்களின் சொந்த மண்ணில் தென்னிலங்கையில் உள்ள சிங்கள காடையர்களையும் , அரச கூலிப்படைகளையும் குடியேற்றி வருங் காலத் தமிழ் பேசும் மக்களின் சந்ததியை வாழ முடியாமல் செய்துவரும் மஹிந்த அரசின் கட்சிக்கு எப்படி தமிழ் பேசும் மக்கள் வாக்களிக்க முடியும்?

புலிகள் இயக்கத்தை சிலர் குறை கூறலாம். ஆனால் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடக் காரணம் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய ஐ.தே.கட்சியும், சுதந்திரக் கட்சியும் விட்ட பிழைகள் தான்.

ஜி.ஜி.பொன்னம்பலம் , தந்தை செல்வா காலத்திலேயே பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு இலகுவாக தீர்வு கண்டிருக்கலாம். இன்று கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசி ஒரு நியாயமான தீர்வைக் காண முடியும். ஆனால் அரசு அதனைச் செய்யாது தங்களுக்கு விலை போனவர்களை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் குறை கூறி தமிழ் பேசும் மக்களின் வாக்கை பல வகை களிலும் அபகரிக்கப் பார்க்கின்றது. இவ்வளவு காலமும் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறியவர்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரைப் பார்த்து பயங்கரவாதிகள் என்கின்றனர். யார் உண்மையான தமிழ் விரோதிகள் என்பதை நிரூபிக்க எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் சரியான பதிலடியைத் தந்து வாக்குகளினால் கொடுப்பார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்னாலையம்பதி வல்லிபுரம் ஸ்ரீசக்கராழ்வார் தேவஸ்தானம்



# பு மலர் - 18.09.2013

உயிரைக்கொன்ற ஈசன் எங்கும் வியாபித்து இப்பவனின் வாசனை வீசும் பெரும் சோலையையும் உயர்ந்த மதிலையுடைய தஞ்சை மாமணிக் கோயிலை வணங்கி, பரிபூரண நிலையில் இருப்பவர்களே, அடியேனும், உலக மக்கள் அனைவரும் உய்யும்படி "ஹரி ஓம் நமோ ராயணா" என்ற நாமத்தை அறிய எம்பெருமான் ஆபத்தாண்டவன் அனாதை ரட்சகன் அச்சுதானந்த கோவிந்தன் உணர வைத்தான்.

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தருஞ் செய்யும் நீள் வீசும்(பு) அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கெண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

ஹரி ஓம் நமோ நாராயணா என்ற திருநாமமானது (இறைவனை மெய்யன்புடன் உச்சரிப்பவர்களுக்கு) உயர்ந்த குலத்தைக் கொடுக்கும் ஐஸ்வர்யத்தைத் தரும் அடியார்கள் கழிக்க வேண்டிய துக்கங்களை எல்லாம் தரைமட்டம் செய்து விடும் (வேரோடு அழித்து விடும்). பரமபதத்தைக் கொடுக்கும் கிருபையோடு கூட (அதாவது தொண்டு செய்யும்) பெரிய பதவியையும் தரும். வெற்றியையும் பிற நன்மைகளையும் தரும். பெற்ற தாயைக் காட்டிலும் மிக்க நன்மையானவற்றைச் செய்யும் கருணை உளம் கொண்ட பெருமாள் எல்லா நன்மைகளையும் தந்து அருளும் திருநாமத்தை நான் காணப்பெற்றேன்.

*கோவிந்த நாம சங்கீர்த்தனம்*
*கோவிந்தா கோவிந்தா*

க.கு.க.சிவபாலன்
நாராயண பக்தர்.



கார் மேகக் கண்ணனே காத்திடுவாய்
பார் எல்லாம் பரவுதையா உன்பெயர்
வல்லிபுர மாயவனே தந்திடுவாய் நின்னருள்
பல்லுயிரும் பாங்காய் வாழ்ந்திடவே!

வெண்ணை திருடியவனே கண்ணா!
மண்ணை உண்டவனே மாயவனே
மண்டலத்தைக் காத்தவனே சக்கர ஆழ்வாரே
கண் கலங்கி நிற்கின்றோம் காத்தருள்வாயே!

நாராயண மூர்த்தியாய் நாகேஸ்வரத்திலும்
வரதராஜப் பெருமானாய்ப் பொன்னாலையிலும்
வேங்கடேஸ்வரராய் வண்ணையம்பதியிலும்
சக்கராழ்வாராய் வல்லிபுரத்திலும் வாழ்பவனே வாழி!

தெல்லியூர் தேவி

## வல்லிபுர ஆழ்வாரே தேரேறி வருக! வருக!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற புலோலியூர் வல்லிபுர ஆழ்வார் திருக்கோயிலில் இன்று தேர்த்திருவிழா. அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து வரும் ஸ்ரீ சக்கர ஸ்வாமியின் பேரழகு சொல்லுந் தரமன்று.
உலகின் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிப்பதற்காக ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ சக்கர வடிவில் இன்று தேரேறிப் புறப்படுகின்றான். ஈரடியாலே மூவுலகளந்த பெருமான் இன்ற வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களைக் களைந்து இன்பவாழ்வருளி எல்லலோரும் சகலநலன்களும் பெற்று சுகமே வாழ வேண்டுமென்று இறையருளை பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.
மண்ணையுண்ட வாயாலே வெண்ணெய் திருடி உண்ணும் வேங்கட மாமலையான் சகல சௌபாக்கியங்களும் நிறைந்த சந்தோஷ நல்வாழ்வருள'வல்லிபுர ஆழ்வாரே தேரேறி வருக வருக'என்று வரவேற்று வணங்கி வாழ்த்துவதில் உளம் பூரிப்புற்று இறும் பூதெய்துகின்றோம்.
"வல்லிபுரத்தானே வளமான வாழ்வு நல்க வரவேண்டும்"

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

பர அனுசரணை ★★★★★★★★★★★

ரேறி வரும் வல்லிபுரத்தாழ்வாரின் ...ளாசி அனைவருக்கும் கிடைத்திட வாழ்த்துகின்றோம்.
...ஷல் வங்கி, ...ல்லியடி.

ஊர்கூடித் தேரிழுக்கும் இந் நன்நாளில் நாட்டில் சாந்தி சமாதானம் மலர வல்லிபுர ஆழ்வாரை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.
NSB
National Savings Bank
தேசிய சேமிப்பு வங்கி
நெல்லியடிக்கிளை

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank
காத்தற் கடவுளே அருள் தாருமையா வங்கக் கடல்தனில் அவதரித்து வல்லிபுரப் பதிதனில் வீற்றிருக்கும் வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறப்புற பிரார்த்திக்கின்றோம்.
சம்பத் வங்கி
நெல்லியடிக் கிளை
T.P:021 226 2474

SEYLAN
BANK PLC
தேரேறி வரும் வல்லிபுர ஆழ்வாரின் அருள் பாலித்து நாட்டில் சாந்தி சமாதானம் நிலவப் பிரார்த்திக்கின்றோம்.
அன்புடன் அரவணைக்கும் வங்கி
செலான் வங்கி, நெல்லியடி.

...ணா வெதுப்பகம்

மாயவன் தேரேறி வர வாழ்த்துகிறோம்.
உங்கள் இல்லங்கள் அலுவலகங்களுக்கு தேவையான கேற், கிறில், இரும்பு வேலைகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
வல்லை உலோக வேலை பொறியியலாளர்கள்
தெணியம்பை – வல்வெட்டித்துறை
தொ.பே : 077 978 9579

சகல விதமான பாடசாலை உபகரணங்களும் சகல பத்திரிகைகள் சஞ்சிகைகளை விற்பனை செய்யப்படும்.
077 967 2709
பத்திரிகை முகவர் நிலையம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

வைபவங்களுக்குத் தேவையான சோடா வகைகள், ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகள் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.
நியூ கிருஷ்ணா கிறீம் கவுஸ்
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 4829

தமிழ்ப்பூங்கா பதிப்பகம்
Tamil Poonga
OFFSET PRINTERS

ரோக்கியோ சிமெந்து, பெயின்ற் வகைகள் கட்டடப் பொருள்கள் சீற்வகைகள் அனைத்தும் உத்தரவாதத்துடன் நாடவேண்டிய இடம்.
எமரல்ட் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ். வீதி- உடுப்பிட்டி.
தொ.பே. 021 226 3468

...ி நகைமாடம்
Bavani Nagai Madam

மிளகாய், வர அரிசி, வர உழுந்து மற்றும் தானியவகைகள் உடன் சுத்தமாக அரைத்துக் கொடுக்கப்படும்.
கணபதி அரிசி அரைக்கும் ஆலை, ஸ்ரோர்ஸ்
கொற்றாவத்தை சந்தி-கொற்றாவத்தை வல்வெட்டித்துறை.
தொ.பே. 021 226 3882, 077 617 9076.

அம்பிகா கிறீம் ஹவுஸ்
சகல வகையான ஐஸ்கிறீம் வகைகள் ஓடர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
மலைவேம்பு ... அளவெட்டி ... அளவெட்டி.


BOMBAY SWEETS & CREAM HOUSE
No: 605-A, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 3529

வேல்முருகன் வணிக நிலையம்
ROBBIALAC
இல.56 A(528), இல.295 (21), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0774489933

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
Aasaipilai & Son Nagai Maadam
Tel: 021 321 2399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதன புராண வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வடமராட்சி, துன்



# தேர்த்திருவிழா சிறப்பு

### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



சரித்திரப் பிரசித்தி பெற்ற புலோலி வல்லிபுராழ்வார் திருக்கோயிலில் இன்று தேர்த்திருவிழா. குறை தீர்க்கும் கோபாலன் இன்று நிறைவாகத் தேரேறி வரும் அற்புத ஆனந்தக் காட்சியை வல்லிபுரத்திலே காணலாம். காத்தற் கடவுளான ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியானவர் ஸ்ரீ சக்கரத்தாழ்வாராகத் திருவீதி வலம் வந்து இங்கே அருட்காட்சி வழங்குகிறார்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் பரந்தாமன் பக்த ரட்சகனாக அருள்பாலிக்கும் ஆலயமான இந்த வல்லிபுரத் தேவஸ்தானத்திலே சக்கர வடிவில் அருளாட்சி புரிகின்றார். ''தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் நான் யுகந்தோறும் அவதாரஞ்செய்து நீதியை நிலைநாட்டுவேன்''. என்று மகாபாரதத்தில் கூறியபடி பக்தர்களை இரட்சித்து அருளை அள்ளி வழங்குகின்றார்.

சங்கு சக்கரமேந்தி அழகே உருவாகக் காட்சி தரும் இவர் இன்று தேரேறி வந்து அடியார்க்கருளும் ஆனந்த அற்புதக் காட்சியை இங்கன்றி வேறு எங்குமே காணமுடியாது.

அந்த வல்லிபுராழ்வார் அனைவர்க்கும் அருள்புரிய வேண்டும் என்று பத்ம மலர்ப்பாதம் பணிந்து ஆசி நல்கி வாழ்த்துகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன குருமுதல்வர்.

### மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்.



வருடா வருடம் மகோற்சவம் நடைபெறுகின்றது. அதனால் மக்களும் மாயவனின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். தேர்த்திருவிழா என்றதுமே பக்தர்கள் நாலாதிசையிலும் இருந்து முந்தியடித்துக் கொண்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி ஓடி வருகின்றனர். மாயவனும் தேரேறி வீதியுலா வந்து பக்தர்கள் கேட்டவரம் அருள்கின்றான்.

வல்லிபுரமாயவன் தேரிலே வீதியுலா வரும் கண்கொள்ளாக் காட்சியை நேரில் கண்டுகளிக்க இயலாதவர்கள் இச் சிறப்பு மலரினை வாசித்து எம்பெருமானை நினைவு கூர்ந்து அவனருளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை. எனவே இச் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.மாயவன்வேண்டிய நேரத்தில் வேண்டிய அவதாரங்களை எடுத்து அடியவர்களை அண்மித்துச் சென்று அவர்களைக் காப்பாற்றி அருள் பாலிப்பவர். மஹோற்சவம் இனிதே நிறைவுறவும் பக்தர்கள் பயன் பெறவும் எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

இ.அன்னலிங்கம்.J.P
முகாமை அறங்காவலர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

### மாயவனின் வரம் பெற நல்வாழ்த்துக்கள்



ஸ்ரீமத் பகவத்கீதை அத்தியாயம் 18 சுலோ - 67 கூறுவதாவது உனக்குக் கூறப்பட்ட இந்த இரகசியமான கீதோபதேசத்தை ஒரு போதும் தவம் இல்லாதவனுக்குச் சொல்லக் கூடாது. பக்தி இல்லாதவனுக்கும், கேட்க விரும்பாதவனுக்கும், எவன் என்னிடத்தில் குறை காண்கிறானோ அவனுக்கும் ஒரு போதும் சொல்லக்கூடாது.

வல்லிபுர மாயவனின் மெய்யன்பர்களே! சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் தேர்த்திருவிழாவான இன்றைய தினம் பக்தி பூர்வமான மாயவனின் நற் கருணையைப் பெற்றிட நாமெல்லோரும் அவனருளாலே அவன் தாள் வணங்கிடுவோம்.

நித்திய பூசைகளில் ஏற்படுகின்ற குறைகளைப் போக்கவே நைமித்தியம் எனப்படுகின்ற மகோற்சவம் ஆலயங்களிலே நடத்தப்படுகின்றது. இறைவனது ஐந்தொழிலைக் குறிப்பதாகவும் மகோற்சவம் விளங்குகின்றது. அழித்தல் தொழிலைக் குறிப்பது இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழாவாகும். ஆன்மாக்களிடமுள்ள அதர்மச் செயலைத் தூண்டுகின்ற ஆணவ மலத்தை அழிப்பதைக் குறிக்கும்.

தேரில் எம்பெருமான் வல்லிபுரமாயவன் வீதி வலம் வரும் போது ஆன்மாக்களின் ஆணவமலம் அழிக்கப்படுகின்றது.

இத்தகைய புனிதம் நிறைந்த நன்நாளில் வல்லிபுர மாயவனைத் தரிசித்துப் பெரும் பேற்றை அடைவீர்களாக!

எல்லாம் வல்ல வல்லிபுர மாயவனின் திருவருளினாலே எமது மக்களின் துன்ப துயரங்கள் எல்லாம் மறைந்து ஒளிமயமான எதிர்காலமும், சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வும் அமையும் என்பது உறுதி.

சகல மக்களினதும் நலன் வேண்டி நாமும் பிரார்த்தித்து வல்லிபுர மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் கூறிக் கொள்கின்றோம்.

பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ ச.க.சுதர்சன குரு.J.P

★★★★★★★★★★★★ விளம்பர அ

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
ஹொண்டு நிறைவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விலைக்கழிவுடனும், விசேட சலுகைகளுடனும் ஹொண்டா உற்பத்திகளை கோயிலில் அமைந்துள்ள விசேட உற்சவ கால காட்சியறையில் வழங்குகின்றோம்.
Honda World
Point Pedro Road,Nelliady
T.P: 021 226 4416 Hot Line 077 038 7444

தேரேறி வரும் வல்லிபுர ஆழ்வார் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
(916 KDM) தங்க நகைகள் மொத்தமாக கிடைக்கும்.
இல.239, பிரதான வீதி, பருத்தித் துறை.
Ph: 021 320 7437 Cell: 077 721 0206

வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
SINGER Plus
Point-Pedro Road, Nelliady
T.P:021-226 4937

சாரங்கா
நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
(Permit No: Eod/Ia/Aut/Mc/164)
157/1. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972.
Fax.No: 222 8869

சாரங்கன் நகையகம்
இல.1, புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறி நதி
நகை மாளி

தேரேறி வரும் மாயன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.
சரவணா ரெக்ஸ்
இல.171 பிரதானவீதி (சம்பத்வங்கி அருகில்) நெல்லியடி.
தொ.பே. 021 226 2992.

அனைத்து மருந்து வகைகளுக்கும் பால்மா வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
நெல்லியடி மெடிக்கல்ஸ்
N.M.M.V.Road,Nelliady.
021 226 2975

V. Manoharan
Bicycle, Petrolmax, Building Materials, PVC Pipes, Paints, Ceramics, Electric goods Merchant
Chavakachcheri Rd, Manthikai Puloly. T.P :021 2264192

சகல விதமான பத்திரிகைகளையும் மற்றும் சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
'கனகா'
பத்திரிகை விற்பனையகம்
இல.08. நவீன சந்தை, திருநெல்வேலி.

பாடசாலை புத்தகங்கள்
அலுவலக உபகரணங்
அனைத்திற்கும் நாடவேண்டி
ஜோதி புத்தக நிலை
பெரியகடை, மன்

மங்கை அழகு மாடம்
பிரதான வீதி, நெல்லியடி.
T.P-077 858 8577

ஈஸ்வரி நகை அகம்
பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 077 119 3983.
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் அனைத்திற்கும்.
Chithamparapillai Book Depot
Nelliady, Karaveddy
021 226 3223.


மாயவன் அருளால் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
ரத்தினம் ரெக்ஸ்
74, பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீரங்கம் ரெக்ஸ்ரைல்
பெற்றோல் செற் அருகில் ஆண்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள 077 474 4498.
வதிரி வீதி உடுப்பிட்டி
நெல்லியடி.

சகல விதமான சிற்றுண்
நாடவேண்டி
Green Leaf Che
N.M.M.V Road, Nell
T.P: 077 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துன்னாலையம்பதி வல்லிபுரம் ஸ்ரீசக்கராழ்வார் தேவஸ்தானம்



## ...பு மலர் - 18.09.2013

...ந்துக்கள்
...லோ - 67 கூறுவ
இரகசியமான
...ல்லாதவனுக்குச்
..., கேட்க விரும்பா
... காண்கிறானோ

...சரித்திரப் பிரசித்தி
...மி கோயிலின்
... மாயவனின் நற்
...லே அவன் தாள்

...வே நைமித்தியம்
...றது. இறைவனது
...ன்றது. அழித்தல்
திருவிழாவாகும்.
... ஆணவ மலத்தை

...ம் வரும் போது

...வனைத் தரிசித்துப்

...ல எமது மக்களின்
...காலமும், சுபீட்சம்

...ந்தித்து வல்லிபுர
...யும் உலகிலுள்ள

க.சுதர்சன குரு.J.P

### அருள் ஒளி பரப்ப வருகிறான்



ஈழ வளநாட்டின் வடபால் வடமராட்சிப் பகுதியில் அமர்ந்து ஆழி சூழ் உலகமெல்லாம் அரவணைத்துக் காக்கும் ஆபத்பாந்தவன், வல்லிபுரம் பதியுறையும் சக்கரத்தாழ்வான் இன்று அழகு இரதமேறுகிறுகிறான். அண்டி வரும் அடியார்களின் அகப்புறப் பிணிகளையும் இடர்களையும் தன் சக்கரத்தால் சங்கரித்து அழித்தற் தொழிலை அரங்கேற்ற இன்று அருமை இரதம் ஏறுகிறான். பாற்கடலில் பள்ளிகொள்ளும் கருணைக் கடலாம் அனந்தசயனன் அன்பர்களின் அக இருளைப் போக்க அருளொளி பரப்பிவருகிறான். இந்த வருடம் ஆலயம் கும்பாபிஷேகம் கண்டு புதுப்பொலிவுடன் இந்திரலோகம் போல் நிமிர்ந்து நிற்கிறது. இந்த அழகுக்கும் புதுமைக்கும் மெருகூட்டும் அருள் விழாவாக இன்றைய இரதோற்சவம் சிறப்பு பெறுகிறது. சக்கரம் பார்த்துக் கொள்ளும் என்பது வல்லிபுரத்தானை நம்பியோரின் கூற்று. எங்கும் அமைதியும் சுபீட்சமும் சுக வாழ்வும் மலர அவன் தாள் பணிவோமாக.

இ.த.ஜெயசிலன், பிரதேச செயலர்,வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

### நல்லமுகூர்த்தத்தை நாராயணனே நமக்குக் காட்ட தேரேறு



ஈழமணித் திருநாட்டில் வடபுலத்திலுள்ள வைஷ்ணவ ஆலயங்களில் மிகவும் தொன்மையான வரலாற்றுச் சிறப்பினையுடையது வல்லிபுரக் கோயில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றால் பெருஞ்சிறப்புப் பெற்றது. இந்த ஆலயம் கண்ணபிரானின் தச அவதாரங்களுள் ஒன்றாகிய மச்ச அவதாரம் நிகழ்ந்த வரலாற்றை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அழகாக விரித்துரைக்கின்றது. உலகத்தில் எங்கேயும் காணமுடியாத வகையில் மூலாலயத்தில் மூல மூர்த்தியாக திவ்விய சக்கரம் அமைந்து அருள் பொழிகின்றது. ஆலய பிரதான வாயிலில் 71 அடி உயரமானதும் 07 தளங்களையும் 350 வரையிலான அழகிய சிலை களையும், பெருமானின் 24 மூர்த்தங்களையும், தசாவதார லீலைகளையும் கொண்டு அழகான கலைத் திருக்கோயிலாக விளங்குகின்றது.

இத்தகு வரலாற்று பெருமைகளைக் கொண்ட வல்லிபுர ஆழ்வார் இன்று தேரேறி பல்லாயிரக்கணக்கான அன்பர்களை அரவணைத்து காத்து அருள்கின்றார்.

*நமக்கொரு நல்ல முகூர்த்தத்தை இனிவரும் நாள்களில் பெருக்க நாராயணனை நாமனைவரும் பணிவோமாக*

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்
(பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்)

### போற்றியே உனை ஏற்க

பத்து அவதாரம் பாரத இதிகாசம்
மெத்தப் படித்தவர்கள் மெருகூட்டி அதைச் சொல்லி சொத்துக்கள்
சேர்க்கிறார்கள் சோக்கான பகிடியிவை
என்று இளஞ்சந்ததியார் ஏளனஞ் செய்யும் நிலை
இன்று ஏற்படுதல் ஏனென்று விளங்கலையோ?
இருப்பதற்கு இடமின்றி எங்கு அலைந்தாலும்
விருப்புடனே உனக்கு அடியார்கள் கிள்ளித்தர
பெருந்தொகையாய் அவை மாறிப் பேரழகுக் கோபுரமும்
அருங்கலைப் பொக்கிஷமாம் பெருந்தேரில் இன்றிங்கே
அரங்கனே வருகின்றாய் அங்கும் நீ சிலையே என்று
எண்ணாது இவரெல்லாம் ஏந்தித் தொழ வைத்து
பொன்னான ஓர் அற்புதஞ் செய் போற்றி உனை ஏற்க...

கவி மணி அன்னைதாஸன்
ஊரெழு.

### வங்கக் கடலருகே வரமருளும் மாயவனே தேரேறி வருக!

அஞ்சனத் திருவண்ணா அரவிந்த மலர்க்கண்ணா தேரேறி வருக
ஆழ்வாராக வல்லிபுரத்திலே அமர்ந்த தேவே தேரேறி வருக
நால் வேதமும் மகிழ மச்சவுருவான திருமாலே தேரேறி வருக
வங்கக் கடலருகே வரமருளும் மாயவனே தேரேறி வருக
சங்கு சக்கர நாயகனே எம் சங்கடங்கள் தீர்த்திட தேரேறி வருக
தமிழனுக்கோர் நல்ல தீர்வு கிடைத்திட நந்தகுமாரா தேரேறி வருக

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்.

...விளம்பர அனுசரணை ★★★★★★★★★★★

அழகிய அழகு சேர்க்கும் 22 கரட் தங்க வைர நகைகள்
சிறி நதியா நகை மாளிகை & டிஜிற்றல் கலர் லாப்
Shree Nathiya
N.S.R கட்டடத் தொகுதி
108, நாவலர் வீதி, யாழ்.
தொ.பே: 021 2222709
தொ.பே: 021 2228412

ASR Enterprises (PVT) LTD
Hotel and Cultural Hall
திருமண வைபவங்கள்
பதிவுத் திருமணங்கள்
பூப்புனித நீராட்டுவிழாக்கள்
பிறந்தநாள் வைபவங்கள்
Wedding, Reception, Puberty Ceremony, Birthday, Conference, Get together
542,K.K.S Road, Jaffna, T.P.:0212221355/0213734116
Email: asrhall@sltnet.lk

அரிஷா கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையம்
RAMCO
Dulux

S. Agilathas J.P
Proprietor
நெல்லை சில்க்
Nellai Silk
LATEST DESIGNS OF TEXTILES
Main Street, Nelliady.
Tel : 021-2263207

மது பேபி நீட்ஸ் & மொறுவல் சொப்
பிரதான வீதி,நெல்லியடி.
தொ.பே.: 077 655 5210

...லை புத்தகங்கள் மற்றும்
...வலக உபகரணங்கள்
...ற்கும் நாடவேண்டிய இடம்
... புத்தக நிலையம்.
...கடை, மன்னார்.

அருண் புடவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி.
021 226 2857.

கோகில்ஸ் பேபி நீட்ஸ்
குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான அனைத்துப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
இல.65 பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 3545,
077 666 1805.

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்
021 226 3770
THE PHONE SHOP
MAIN STREET
NELLIADY

செல்லமுத்தூஸ் புடவை மாளிகை
நெல்லியடி,
கரவெட்டி.

...கல விதமான சிற்றுண்டி வகைகளுக்கு நாடவேண்டிய இடம்.
Green Leaf Cheam House
N.M.M.V Road,Nelliady,Karaveday.
T.P: 077 377 3197

பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருகள்,அன்பளிப்புப் பொருள்கள் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்.
கீரன் பான்சி
இல.1-5-6, நவீன சந்தை,
வல்வெட்டித்துறை.
தொ.பே. 077 344 1590


வல்லை ஆழ்வாரின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்.
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களுக்கு நாடவேண்டிய இடம்.
மிதுர்ஷன்
தொ.பே. 021 321 9592, 021 226 5161.

ஆர்.வி.ஜி
R.V.G
தொ.பே: 021 222 6808

வல்லிபுர ஆழ்வாரின் அருள் ஆசி அனைவருக்கும் கிட்டட்டும்
கலைவாணி ரெக்ஸ் & அழகுமாடம்
077 711 1001

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புராதன புராண வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வடமராட்சி, துன்



# தேர்த்திருவிழா சிறப்பு ம

ஹரி ஓம் நமோ நாராயண

**ஹரி ஓம் நமோ நாராயண என மெய் உருகிச்செப்பி வடம் பிடிக்க வாருங்கள் வைகுந்தத்தில் இடம் பிடிக்க**



ஆத்மாக்கள் பிறவியிலேயே இறைவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனால் அணியப்பட்ட மங்கல நாணாகிய திருமந்திர (அஷ்டாசர மந்திரம் ஓம் நமோ நாராயண) சம்பந்தத்தைப் பெற்றுப் பேரானந்தம் அடைகிறார்கள். இதையறியாது திரியும் குழந்தைகள் போன்ற மக்கள்; திருமந்திரத்தின் பொருளை உணரும் ஞானியளாகத் தம்மை இறை பக்தி பெற்ற நாயகிகளாக உணர்ந்து நாயகனாகிய இறைவன் மீது காதல் (அன்பு) வளரப் பெறுகின்றனர். மாயோனின் மையலில் திருக்காட்சி அருள் நோக்கில் இறைவன் தனது மாறுவேடத்தோடு வந்து தோன்றியும், கூடியும், பிரிந்தும், ஊடலில் அவர்களது காதலைப் பெரிதும் வளரவும், அவாவவும் செய்கின்றான். அவர்களது வாழ்க்கை ஒழுக்கமாக அமைந்து, நாளடைவில் இறைவனுடைய சிந்தையில் ஆழ்ந்து இரவும் பகலும் அவன் நாம சிந்தை யராகின்றனர். அப்போது இறைவன் அவர்களை இவ்வுலக துன்பங்களில் இருந்து விடுதலை பெற்று, பேரானந்தமான பெருவாழ்வு பெற்று உய்யும் பொருட்டு அருள் புரிகிறான்.

மலமாதிகன்ம மாயாவினாற் பிணைப்புண்ட ஆன்மா, உலக வாழ்க்கையில் திருமங்கையாழ்வாராக உழல்கின்ற காலை ; வழிப்பறி செய்யத் திருவுளம் பேதலித்தார். அவரை ஆட்கொண்டு ஞானம்பெற உரிய வழியாகத் தானே வழிப்போக்கனாக, பொன்னும், மணியும், அணிகலன்களாகத் தனித்து களிபேருவகை உளங்கொண்டு நடைபயின்றார்.

ஆழ்வார் கண்கள் அவரில் மொய்த்தன. பெருமானின் திருவிளையாடல் உணராத உளத்தராகிய ஆழ்வார்; வழிப்போக்கரை இடைமறித்து வன்செயலாற்றி எம் பெருமானின் அணிகலன்களை வழிப்பறிசெய்தார். பகவானின் திருவடியில் ''மிஞ்சி'' மட்டும் மிஞ்சியிருந்தது. ஆழ்வார் பகவனிடத்திற் கட்டளையிட்டார். வழிப்போக்கனாக வந்த பகவான் அதைக் கழற்றித்தர முடியாது என மறுத்தார்.

ஆழ்வார் பிடிவாதமாகத் தானே அதைக் கழற்றமுயன்றார். பெருமானின் திருவடி தீண்டப்பெற்றதும் திருமங்கையாழ்வார் மெய்யொன்றி ஞானம் பற்றியது, பதறினார் 'பகவானே' நாக்குழறினார் பகவானின் திருத்தோற்றம் காணப்பெற்றார்.

கலியுகத்தில் இருந்து அடியவர் மீட்சிபெற ''ஹரி ஓம் நமோ நாராயணாய'' மந்திரம் அவர் சித்தத்தில் இசைக்கத் திருமங்கையாழ்வார் விழிகளில் நீர் உருளப்பாடினார் உளம் கசிந்து.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர் வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

வாடினேன், வாடி மனத்தில் வருந்தினேன் மிக்க துன்பத்திற்கு இருப்பிடமான உடலில் பிறந்து உடலோடு ஒன்றாயினேன். அவ்வாறு உடல் வழியே நின்று இளம் பெண்களோடு பெறக்கூடிய சிற்றின்பத்தையே கருதி அவர்களைப் பின் தொடர்ந்து ஓடினேன். இவ்வாறு ஓடிக் கடைததேறுவதற்குக் காரணமாகும் பொருளான பகவானது கிருயையாலே, ஞானம் என்கிற பெரிய பதவியை அறிந்து, ஆராய்ந்து நான் நாராயண என்கிற திருநாமத்தை கண்டு கொண்டேன்.

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கு அரசு என்னுடை வாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவர் உயிர்செகுத்த எம் அண்ணல்
வம்புலாம் சோலை மாமதின் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

எனக்கு நன்மை செய்பவனாய், தகப்பனாய் எனக்கு உறவினனுமாய், என்னை ஆண்டவராய் என்னுடைய வாழ்நாளுமாய், அரக்கர்கள் பயப்படும்படி பாணங்களினாலே ஒன்றாகத் தள்ளி அவர்களுடைய உயிரைக்கொன்[...]
பெரும் சோலை[...]
கோயிலை வண[...]
உலக மக்கள் அ[...]
நாமத்தை அறிய[...]
அச்சுதானந்த கே[...]

குலந்தரும் செ[...]
அடியார் ப[...]
நிலந்தருஞ் செ[...]
அருளொடு [...]
வலந்தரும் மற்[...]
பெற்ற தாயி[...]
நலந்தருஞ் செ[...]
நாராயணா[...]

ஹரி ஓம் நமோ [...]
மெய்யன்புடன் உ[...]
ஐஸ்வர்யத்தைத்[...]
எல்லாம் தரைம[...]
பரமபதத்தைக் [...]
செய்யும்) பெ[...]
நன்மைகளையு[...]
நன்மையானவற்[...]
எல்லா நன்மை[...]
காணப்பெற்றேன்[...]

★★★★★★★★★★★★ விளம்பர அனுசர

இன்று தேரேறி வரும் வல்லிபுர ஆழ்வார் பக்தர்களின் துயர் களைந்து நல்லருள் புரிய பிரார்த்திக்கின்றோம்.
மக்கள் தங்கள் வங்கித் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்
BANK OF CEYLON BOC Bankers to the Nation இலங்கை வங்கி
நெல்லியடிக் கிளை
முகாமையாளரும் ஊழியர்களும் இலங்கை வங்கி, நெல்லியடி.

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE
தேரேறி வந்து திருவருள் பாலிக்கும் கார் மேக வண்ணனின் கருணை வெள்ளத்தில் ஊரெல்லாம் திளைக்க வாழ்த்துகின்றோம்.
பருத்தித்துறைக் கிளை
நெல்லியடிக் கிளை
வல்வெட்டித்துறைக் கிளை.

வல்லிபுர ஆழ்வாரின் அருள் ஆசிகள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்
HNB
ஹற்றன் நஷனல் வங்கி
நெல்லியடி.

COMMERCIAL BANK
தேரேறி வரும் வல்லிபுரத்[...]
அருளாசி அனைவருக்கும்
வாழ்த்து[...]
கொமர்ஷல் வங்[...]
நெல்லியடி.

தரன் நகைமாளிகை
கலாசா 916 நகைகள்
T.P: 0602219254
Mobile:0773276356

T. Suthan
காஞ்சனா நகைமாளிகை
Kanchana Jewel House
Merchants of Gold & Jewels
244, Main Street, Point Pedro.

யசோ ரெக்ஸ்
YASO TEX
Main Street, Nelliyadi, Karaveddy. Tel: 021 226 4997

கேசவன் சில்க்
Kesavan Silk
மந்திகை, புலோலி,
பழைய மார்க்கெட், நெல்லியடி.
T.P. 021 226 4442

சகல விதமான மருந்துப் பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்
மந்திகை பாமசி
மந்திகை.

கிருஸ்ணா வெதுப்பகம்
சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.

New Nelson Learners
நியூ நெல்சன் லேணர்ஸ்
No.Ramalingam Veethy
Chavakachcheri.
T.P:0773581916
T.P No- 021 492 3114

துஷானி கிளாஸ் ஹவுஸ்
சகல விதமான ஹவுஸ் பேனிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
தொ.பே. 021 226 3076.

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் விசேடமான நிகழ்வுகளுக்கான கேக்வகைகள்
Mayoora Food Corner
மயூரா உணவுக் களஞ்சியம்
21, Near Bus Stand Nelliady,
Karaveddy. Tel: 021 226 2691.

பவானி நகைமாடம்
Bavani Nagai Madam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் தலைவிரித்தாடும் வடமாகாண சபைத் தேர்தல்

க.கந்தசாமி

ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசின் மூலதனம் 'இனவாதம்' என்பது எல்லோரும் அறிந்த விடயம். அதைப் பேசியே அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் பெரும்பான்மைப் பலம் பெற்று ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

அந்த இனவாதம் இன்று வடமாகாண சபைத் தேர்தல் காலத்தில் மிக உச்ச நிலைக்குப் போய்விட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழத்துக்காக தமிழ் இளைஞர்களுக்கு சயனைட் குப்பிகள் கொடுக்கிறார்கள் என்றும், சிங்கள இளைஞர்களும், பாதுகாப்புப் படையினரும் அதை முறியடிக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இனக்கலவரத்துக்கு அடிகோலிக் கர்ச்சித்திருக்கிறார்.

கூட்டமைப்பினர் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவர்களை இயங்கவிட மாட்டோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு முழங்கியிருக்கிறார்.

இவற்றுக்கு மேலாக இராவண பல சேனா என்னும் சிங்கள கடும்போக்கு அமைப்பு முதன்மை வேட்பாளர் விக்னேஸ்வரன் தேர்தலின் பின் கொழும்புக்கு வருவதற்குக் கனவு காண வேண்டாம். வந்தால் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று எச்சரித்திருக்கிறது.

இனக் குரோதத்தையும், இனக் கலவரத்தையும் தூண்டும் இத்தகைய பேச்சுக்கள் சட்டப்படி பெரிய குற்றம் என்றோ, இன ஒருமைப்பாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரானதென்றோ ஆளும் தரப்பினர் எவரும் கண்டிக்கவில்லை.

சட்டத்தைப் பாதுகாப்பவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் அனைவருமே அந்தப் பேச்சுக்களை ரசிப்பவர்களாகி கைதட்டி ஆரவாரிக்கின்றார்கள்.

ஒரு தமிழன் இப்படி பேசிவிட்டு இருக்க முடியுமா? சிறு சம்பவத்தை அல்லது பேச்சை எடுத்து மாதக் கணக்கில் அவனை அடைத்து வைத்து தொல்லை கொடுப்பார்கள்.

ஜனாதிபதி ராஜபக்ஷவே தேர்தல் பரப்புரைகளில் தன்னை ஒரு ஜனநாயக வாதியாகவும், தமிழர்களுக்குத் தான் நன்மை செய்யப் போவதாகவும் காட்டிக்கொண்டு இனவாதி எவருக்கும் சளைக்காதவராக இனவாதக் கருத்துக்களை காட்டமாகக் கக்கி வருகிறார்.

போரால் துவண்டு ஏதிலிகளாய் அவல வாழ்வு வாழும் தமிழ் மக்களின் துயர் தீர வேண்டும். அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். தமிழ் மக்களும் சிங்கள மக்களைப் போல் எல்லா உரிமைகளுடன் சமமாக வாழ வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கேட்டால் உடனே அவர்களைப் புலிகளாக பட்டம் சூட்டி பல்லை நெருடும் கலாசாரம் சில சிங்களக் கட்சிகளிடமும், தலைவர்களிடமும், புத்த துறவிகளிடமும் இருந்து வருகிறது. அது இந்தத் தேர்தல் காலத்தில் வெளிப்படையான இனவாதமாகத் தலை விரித்தாடுகிறது.

வடமாகாண சபைத் தேர்தலில் தாம் வெற்றி பெற்று ஆட்சி அதி காரத்தைக் கைப்பற்றினால் தமது இனவாதச் செயற்பாடுகளை எவரும் கேட்கவும் முடியாது; தடுக்கவும் முடியாது என்று



அரசு நினைக்கிறது. அந்த அரசால் வடபகுதி மக்களிடம் உங்கள் இனபந்துக்களைக் குண்டு போட்டு அழித்தோம். பலரை அகதிகளாக்கி இன்றும் அல்லல்பட வைத்தோம். உங்கள் காணிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றி வருகிறோம். புத்தரின் சிலைகளை புத்த சமயத்தவர் இல்லாத தமிழ்ப் பிரதேசங்களில் கூட அதிகம் அதிகமாக நிறுவி வருகிறோம். படைகளும் எமக்கு துணைபோகும் தமிழ் ஒட்டுக் குழுக்களும் வடமாகாணத்தில் செய்த கொலைகள், கொள்ளைகள் என்பன ஆதாரங்களுடன் பிடிபட்டாலும் அவற்றை நழுவவிட்டோம்.

எமது சொல்லைத் தட்டாது அமைச்சர் டக்ளஸ் எம்முடன் சேர்ந்து எங்கள் வெற்றிலைச் சின்னத்தில் தனது ஆள்களை தேர்தலில் நிறுத்தியிருக்கிறார். அவர்களுக்கு வாக்குப் போடுங்கள் என்று மனச்சாட்சியின்படி உண்மை பேசுவதானால் இப்படித்தான் இந்தத் தேர்தலில் அரச தரப்பு வாக்குக் கேட்க வேண்டும். அவர்களால் அப்படிக் கேட்க முடியுமா?

வாக்குக் கேட்பதற்கு தக்க காரணம் எதுவும் இல்லாதபடியால் புலி, புலி என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் இரத்த ஆறு ஓட வைக்கத் திட்டம் தீட்டுகிறது என்று தம்மிடம் இல்லாத இரக்கத்தைக் காட்டும் அதேவேளை இன்னொரு முள்ளிவாய்க்காலைச் சந்திக்கத் தாம் ஆயத்தம் என்றும் பேசுகிறார்கள். முள்ளிவாய்க்காலில் இடர்கள் பெரிதாக நடக்கவில்லை என்று முன்பு சொன்னதை மறந்துவிட்டார்கள் அவசரத்தில் !

வடமாகாண மக்கள் முன்பு அவர்களின் அவல வாழ்வின் விடுதலை, சுதந்திரம், உரிமைகள் பற்றிப் பேச அவர்களுக்கு மனம் இல்லை. விடுதலைப்புலிகள் என்றும், முள்ளிவாய்க்கால் போருக்கு ஆயத்தம் என்றும் பேசி பயமுறுத்துகிறார்கள்.

அதேவேளை காப்பெற் வீதி போடுகிறோம், பாலம் கட்டுகிறோம் , உத்தியோகம் கொடுக்கிறோம், பொருளாதார அபிவிருத்தியில் வளம் பெருக்குவோம் என்று கூறும் அரச தரப்பினரின் பகட்டான வார்த்தைகளில் துயரில் தோய்ந்த வடக்கு மக்கள் மயங்க மாட்டார்கள். அரசு இந்தத் தேர்தலில் அனைத்துலகின் முன் தலை கவிழ்ந்து நிற்க இந்தத் தேர்தல் மூலம் வடபகுதி மக்கள் தமது தீரத்தைக் காட்டுவார்கள்.


அரசு கபடத்தனமாகப் போலி வேஷம் போட்டு வாக்குக் கேட்டு வெற்றி பெற்றால் தனது பலத்தால் தமிழருக்கு எதுவுமே வழங்காது மேலும் அடக்கியொடுக்கி ஒரேயடியாக வாய்ப்பூட்டு போட்டுவிடலாம் என்றே கனவு காண்கிறது.

எனவே வடக்கு மக்கள் அனைத்துலகத்தின் முன்னே இனவாத அரசின் உண்மைத் தோற்றத்தைக் காட்ட இந்தத் தேர்தலை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

> பலரை அகதிகளாக்கி இன்றும் அல்லல்பட வைத்தோம். உங்கள் காணிகளில் சிங்கள மக்க ளைக் குடியேற்றி வருகிறோம். புத்தரின் சிலைகளை புத்த சமயத்தவர் இல்லாத தமிழ்ப் பிரதேசங்களில் கூட அதிகம் அதிகமாக நிறுவி வருகிறோம்.

# யாரை வெற்றி பெறச் செய்வது?

சித்தன்




மக்களாட்சியில் 'ஆளும் உரிமை' ஒவ்வொரு வருக்கும்உண்டென்றாலும், அந்த ஒவ் வொருவரும் ஆட்சி செலுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றபடியால்- மக்கள் ஆட்சி என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியாகவே இருந்து வருகின்றது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் சிங்களப் பெரும்பான்மையினர் நடந்து கொள்ளும் முறை தமிழ் மக்களின் நம்பிக்கையைப் படிப்படியாகச் சிதறடித்து வருகின்றது என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை.

தாம் மிகப் பெரிய பெரும்பான்மையினர் என்ற உணர்வு அவர்களிடம் மிக ஆழமாகப் பதிந்துவிட்டபடியால்- தமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் ஆட்சிப் பீடத்தில் ஏறும் வாய்ப்பு, எந்நாளும் தம் 'ஆளுக்கே' இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றபடியால்-

தாம் சொல்பவை எல்லாம் உண்மையானவை என்றும்-

தாம் விரும்புபவை எல்லாம் நியாயமானவை என்றும்-

தாம் தீர்மானிப்பவை எல்லாம் நீதியானவை என்றும்-

அவர்கள் சொல்ல முனைந்திருப்பது- அவர்களிடமுள்ள பொது ஊடகங்கள் மூலம் நாளிலும் பொழுதிலும் பிரசாரப் படுத்தி வருவதும்-

இந்த நாட்டின் சாபக்கேடு என்றே சொல்ல வேண்டும்.

சிங்கள மக்கள் இலங்கையில் மட்டுமே வாழ்வதாலும் பெரும் எண்ணிக்கையில் வாழ்வதாலும்-

இலங்கையின் ஒவ்வோர் அங்குலமும் சிங்கள மக்களுக்கு மட்டும் உரிமையானதென்றும்-

தமிழ் மக்கள் அருகிலுள்ள தென்னிந்தியாவில் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருவதால் அவர்கள் அந்த நாட்டுக்கே உரியவர்கள் என்றும்-

இங்கு இருக்கும் தமிழர்கள் இடையில் வந்து குடியேறியபடியால், இந்த நாட்டின் எந்தப் பகுதியையும் தமது என உரிமை கொண்டாட முடியாது என்றும்-

சிங்களப் பெரும்பான்மையினர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உரத்துக் கூறி வருகின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே-சிங்களவரின் முன்னோடிகளான விஜயன் குடும்பத்தினர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே தமிழர்கள் இங்கு வாழ்ந்தனர் என்பதை- புராண-இதிகாச-கர்ணபரம்பரைக் கதைகளும், வெளிநாட்டு யாத்திரிகர்கள் பயணிகளின் குறிப்புக்களும் அகழ்வாராய்ச்சியின் பயனாகப் பெறப்பட்ட தடயங்களும் எந்தவித சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபிக்கின்ற போதிலும்-

இலங்கையின் ஆதி குடிகள் என 'மஹா வம்சம்'' குறிப்பிடும் வேடர் என்ற சொல், சுத்தமான தமிழ்ச்சொல்லாக இருக்கின்ற போதிலும்-

இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு- தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்கு-''நாம் பெரும்பான்மையினர்-எம்மை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது'' -என்ற மிடுக்கே தடையாக இருந்து வருகின்றது.

பெரும்பான்மையினரான நாம் "பெரிய மனது வைத்து" வழங்கும் சலுகைகளை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டியவர்கள் தமிழர்கள். உரிமை என்று கோருவதற்கு இந்த நாட்டில் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை என்ற அவர்களின் பேரினவாதச் சிந்தனைக்கு-

காலத்துக்குக் காலம் ''ஒத்துழைப்புப்'' பல்லவி பாடும் தமிழர்கள், செழிப்பாக வளர்த்து வருகிறார்கள்-

இத்தகையவர்களைப் 'பெருந் தலைவர்களாகக் காட்டுவதன் மூலம்- தமிழர்களுள் பெரும்பான்மையினர் தனது கொள்கையை ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக்கொள்ளவும்-

சாத்வீக முறையினாற் சாதிக்க முடியாததைச் சண்டை மூலம் சாதிக்க முயன்ற விடுதலை வீரர்களைப் பயங்கரவாதிகளாகப் 'பச்சை குத்திக்' காட்டவும், பேரினவாதப் பெரும்பான்மை அரசுக்குச் சாத்தியமாகியது-

பயங்கரவாதத்தை அழித்தவுடன் இந்த நாட்டுத் தமிழ் மக்களுடைய உரிமைகளை 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பாற் சென்று கூடுதலாக வழங்கப் போவதாக அடிக்கடி உச்சரித்ததன் மூலம் இந்தியா உள்ளிட்ட பல வெளி நாடுகளின் ஆதரவையும் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்று பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழித்த பின்னர்- அந்த மக்களின் உரிமைகள் சம்பந்தமாக முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் நான்கு ஆண்டுகளைக் 'கடத்திய' பின்னர்-

சர்வதேச நிர்ப்பந்தம் காரணமாக வடமாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வந்த அரசு-

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே அரசு என்று சொல்லிக்கொண்டு-

தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே நன்கு திட்டமிட்டுச் சிங்கள மக்களைக் குடியேற்றிக்கொண்டு போரிலே காணாமற் போனவர்களைப் பற்றியும் ஆயுதப் படையினரிடம் சரணடைந்தவர்களைப் பற்றியும் அடிக்கடி கேட்டுத் தம்மைத் தர்மசங்கடத்துக்குள் ஆழ்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு-

ஒன்றுபட்ட இலங்கையில், சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற சகல உரிமைகளுடன் சமாதானமாக- சமத்துவமாக-சந்தோஷமாக வாழ்வதை உறுதிப்படுத்தக் கூடிய சமஷ்டி அமைப்பை வலியுறுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பிரிவினைக்கு வழிவகுக்கும் ஆபத்தான கோரிக்கை எனத் திரித்துப் பிரசாரம் செய்து கொண்டு-

தன்னுடைய அடிவருடிகளையும் களத்தில் இறக்கிவிட்டு-

அவர்கள் மூலம் கவர்ச்சிகரமான திட்டங்களையும் உறுதிமொழி களையும் வாக்காளர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது-

இந்த நிலையில் நாம் எதிர்கொள்ளும் வடமாகாண சபைத் தேர்தலின் போது , நாம் எந்தத் தரப்பினருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால் உரிமைகளைப் பெற்று தலை நிமிர்ந்து வாழலாம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோம். எதிர்வரும் சனிக்கிழமை எமது பொன்னான வாக்கைச் செலுத்தி எமது சுதந்திரத்தையும் உரிமைகளையும் உறுதிப்படுத்திக் கொள்வோம்.

> வடமாகாண சபைத் தேர்தலின் போது , நாம் எந்தத் தரப்பினருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால் உரிமைகளைப் பெற்று தலை நிமிர்ந்து வாழலாம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதுக்குப் பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள் நண்பர்களின் வருகையுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சுக்கும் ஆளாவீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களின் தனித்ததன்மையையே பின்பற்றுவது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பற்றிக் குறைக் கூற வேண்டாம்.

**சிங்கம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூல மான நிலைக் காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கன்னி:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**நாளை**

புரட்டாதி-03 வியாழக்கிழமை 19.09.2013
திதி: பூரணை மா. 05.44 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.07.40 வரை
சுபநேரம்: 07.33 - 09.03 வரை
இராகுகாலம்: 01.33 - 03.03 வரை

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள்.

**விருச்சிகம்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வாகனச் செலவுகள் நீங்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**தனுசு:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**மகரம்:** மன உளைச்சல் ஏற்படும். கடனாகக் கொடுத்த பணத்தை பெறுவீர்கள். உத்தி யோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**மீனம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதத்தைத் தவிர்க்கவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 1 | 5 | | 7 | 2 | 8 |
| 1 | | | | | | | 4 | |
| 7 | 3 | | | | | 5 | | |
| | | | | 3 | 2 | 1 | 8 | |
| | | 4 | 6 | | 1 | 3 | | |
| | 1 | 3 | 5 | 8 | | | | |
| | | 5 | | | | | 3 | 2 |
| | 8 | | | | | | | 7 |
| 2 | 4 | 1 | | 6 | 7 | | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 6 | 3 | 8 | 7 | 4 | 1 | 2 |
| 8 | 4 | 2 | 6 | 5 | 1 | 7 | 9 | 3 |
| 3 | 1 | 7 | 9 | 2 | 4 | 5 | 6 | 8 |
| 4 | 8 | 3 | 1 | 6 | 5 | 2 | 7 | 9 |
| 7 | 6 | 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 |
| 1 | 2 | 9 | 7 | 4 | 8 | 3 | 5 | 6 |
| 2 | 9 | 1 | 5 | 3 | 3 | 8 | 4 | 7 |
| 6 | 7 | 8 | 4 | 1 | 2 | 9 | 3 | 5 |
| 5 | 3 | 4 | 8 | 7 | 9 | 6 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கால்களை பராமரியுங்கள்
லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
Lava Hospitals
LH Your Health Our Priority
No 75,temple road.Jaffna (C/11431) (3.11.8)

வாகனம் விற்பனைக்குண்டு
அலுவலக பாவனையிலுள்ள TOYOTA
(4 Wheel, 5L Engine) WPPA-XXXX
இலக்கமுடைய Crew Cab
வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (31790) (3.11.6)
077 329 6408, 021 567 0350

## சுயதொழில் பயனாளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வு


யாழ்ப்பாணம்.செப்.18

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் சுயதொழில் உதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற குடும்பங்களின் பயனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வை இந்த மாத இறுதிக்குள் நடத்தி முடிக்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக் கப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட வறிய குடும்பங்களின் வாழ்வாதரத்தை அதிகரிக்கும் நோக்குடன் கால் நடை வளர்ப்பு. கோழி வளர்ப்பு. சிறு வியாபாரம் தவிர்ந்த ஏனைய சுய தொழில் களில் ஈடுபடுவோருக்கு யுனிசெப் நிறுவனத்தால் உதவிகள் வழங்க பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக பயனாளிகள் தெரிவு செய்யப் படுகின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வலு வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் பணிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப் படுவது குறிப் பிடத் தக்கது. (வ-9)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




மலர்வு
23.12.1933
உதிர்வு
25.09.2007
அமரர்
கனகசிங்கம் சதானந்தம்
(ஆனந்தம்)
(ஓய்வு பெற்ற வெலியாத்து உத்தியோகத்தரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாவும்)
திதி:வளர்பிறை சதுர்த்தசி
அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து
ஆறாண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத
நினைவுகள என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய்
ஒளிர்ந்து கொண்டிருக்கும்என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.
சிவன் கோயிலடி,
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (31761)(4.3.6)
நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவலைகள்
அமரர்
நாகன் எட்வேட்
(கிளி)



தோற்றம்
02.06.1942
மறைவு
19.08.2013
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே எங்களைத் தவிக்க
விட்டு எங்கு சென்றீர்கள் மனைவி. பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள் என்று பாசத்துடன் உறவாடினீர்களே!
மருமக்களைப் பிள்ளைகள் போல் நேசித்தீர்களே!
உறவுகளை இன்முகம் காட்டி அரவணைத்தீர்களே!
நல்ல நட்புடன் அனைவருடனும் பழகி வந்தீர்களே.
சொந்தம் என்று எமக்கு ஆயிரம் பேர் உறவாடினாலும்
பந்தம் என்பது உங்களுக்கு நிகராகுமா!
நாம் திரும்பும் திசையெல்லாம் உங்கள் முகம் தெரிகிறதே!
இந்த ஜென்மத்தில் எங்களுடன் வாழ்ந்த நீங்கள் தொடரும்
ஏழேழு ஜென்மத்திலும் எங்களுடைய குடும்பத்தில் வாழ
வந்திடுங்கள் எங்கள் தெய்வமே!
(31846)(4.5.6.3)
18/1, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
உங்களைப் பிரிந்து வாடும்
குடும்பத்தினர்.

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.12.1948
மறைவு
18.09.2007
அமரர்
முருகன்
செல்லையா
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் உள்ளங்களில்
உங்கள் நினைவுகள் ஓடிக் கொண்டே இருக்கும்.
வல்லை வீதி,
தொண்டமானாறு. (C31749)(4.6.3)
மு.இந்திரசித்தன்
குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பு



கடந்த 01.08.2013 சிவபதமடைந்த எமது சுகாதார ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் பொருளா லர் செ. சர்வானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார் ஆனந்தன் செல்வநாதன் அவர் களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று 18.09.2013 புதன்கிழமை மு.ப. 11.00மணியளவில் யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக் கொடை நிறுவன (T.C.T) சொர்ணாம்பிகை மண் டபத்தில் நடைபெறவுள்ளது இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,

கிளி /சுகாதார ஊழியர் நலன்புரிச் சங்கம்.

குடும்பத்தினரும், கிளி /சுகாதார ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரும்.

# கான்ஸ்டபிளுக்குத் தூக்குத் தண்டனை

அநுராதபுரம் புதிய பஸ் தரிப்பிடத்தில் ஓட்டோச் சாரதியைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிவான் சுனந்த குமார ரத்னாயக்க தூக்குத் தண்டனை விதித்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

அநுராதபுரம் விலச்சியைச் சேர்ந்த நிர்மல பியதிஸ்ஸ (வயது 49) என்ற கான்ஸ்ட பிளுக்கே இவ்வாறு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி இந்தத் துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

(த)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசலட்சுமி சோதிலிங்கம்



கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், மாத்தளை, களுதாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் இராசலெட்சுமி நேற்று (17.09.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் அருணாச்சலம் (லண்டன்), கார்த்திகேசு (கொழும்பு) தலைட்சுமி(மலேசியா), விஜயலட்சுமி, (குவைத்) கணேஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2013) புதன்கிழமை பி.ப.1.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக இரறத்தோட்டை வேரகம மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: யோகேஸ்வரன் (குவைத்- மைத்துனர்)

தொ.பே: 06622 33937

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா

## (முகாமையாளர், ராஜா புகையிலை கடை)



பிடாரிகோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பைக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று(16.09.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், விஜயகுமாரின் அன்புச் சகோதரனும், நாகம்மாவின் அன்பு மைத்துனரும், மகேஸ்குமார், உசா மகேஸ், மகேஸ்கண்ணா, சிவராஜினி, ரமணன், சர்மிளா, ரஜனிகாந், சசிகாந், வைலஜா, கிந்துஜா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2013) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

447/5, கொறவப்பொத்தானை வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.


## மாபெரும் மலிவு விற்பனை

கழிவு 40% - 50%, 15.09.2013 - 31.10.2013 வரை க.குணராசாவின் பாட நூல்கள் 6-11, A/L வரலாறு புவியியல், பொது உளச்சார்பு, ஏனையவை, செங்கை ஆழியானின் நாவல்கள்

கிடைக்கும் இடம்:-
75/10A, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்
T.P:- 0777 561148

## விற்பனைக்கு

LI XXXX TATA ரக டிப்பர் வாகனம் (3 கியூப்) உடனடியாக விற்பனைக்குண்டு. A- 32 வீதி, பொர்மிற்றுடன் விற்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:- 077 3422716

## தவறிவிட்டது

164/1, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலையைச் சேர்ந்த சாகித்யா இராதாகிருஷ்ணன் (90632 2820V) என்பவருடையை தேசியஅடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், என்பன தவறிவிட்டது.
தொடர்பு:- 077 3653822

## வீடு விற்பனைக்கு

கொக்குவிலில் நல்ல சுற்றாடலில் ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு:- 077 4212747

## EESWARY MEDICAL CENTRE MANIPAY

பாமசியில் அனுபவ முள்ள A/L படித்த ஆங்கில அறிவுள்ள பெண்கள் தேவை.
Con. No:- 077 0789531

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வியாபார நிறுவனத்துக்கு உகந்த வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 0090425


## காணி விற்பனைக்கு

168/8, 2ஆம் ஒழுங்கை அரசடி வீதி, நல்லூர் எனும் முகவரியில் உள்ள ¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
தொடர்பு:- 077 6721132, 021 7200970

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் உள்ள டொயோட்டா டொல்பின் வான் விற்பனைக்குள்ளது GR XXXX நீல நிறம்
தொடர்பு:- 077 3653822


# ஓராண்டு நினைவில்



ஆண்டொன்று ஓடிச் சென்றதுவே – எம்
அன்னையும் தந்தையும் எமைவிட்டகன்று...
இணையிலா நல்வாழ்வை எமக்களித்து – நீங்கள்
இணைந்தே இறையடி சேர்ந்தீர்கள்
துணையாக இங்கு நீங்கள் இல்லையே – என்றே
துயருறும் எங்கள் குரல் கேட்கிறதா?

மண்ணிலே எமை வாட விட்டு – நீங்கள்
விண்ணகம் விரைந்து சென்றதேனோ?
கண்களில் கண்ணீர் வழிந்தோட – சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்குகின்றோம்
வண்ணமாய் நீங்கள் மீண்டும் – எம்மிடம்
ஆராரோ பாடிட வாரீரோ!

**பொன்னம்பலம் இராஜதுரை**
மலர்வு: 1931.04.20
உதிர்வு: 2012.08.30
திதி: வளர்பிறை சதுர்த்தசி

**இராஜதுரை சின்னத்தங்கம்**
மலர்வு: 1934.02.15
உதிர்வு: 2012.08.18
திதி: வளர்பிறை பிரதமை

பன்னையம்பதி, பருத்தித்துறை.

அன்புப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

யூஸ் கொம்பனியில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அம்மா ஸ்ருடியோ
28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 711 1530, 077 758 7079, 021 222 1155


## யாழ்.பல்கலைக்கழக கண்காட்சி இன்றும்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஆங்கில இலக்கியத் துறை மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த "லிற்றெக்ஸ் 2013" என்ற கண்காட்சி நிகழ்வானது அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று புதன்கிழமையும் நடைபெறும் என கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரபல்யமான ஆங்கில இலக்கிய கவிதைகள், நாவல்கள் போன்றவற்றில் வரும் சிறப் பம்சங்களை காட்சிகள் மூலம் உருவாக்கி பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.18

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் நவதாராள வாதத்தின் "இரண்டாவது அலையும் மக்கள் மீதான பாதிப்புகளும்" எனும் தலைப் பிலான கருத்துரை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தொடக்கவுரையினை வே.சேந்தனும், கருத்துரையை அகிலன் கதிர்காமரும் நிகழ்த்தவுள்ளனர். (ந)

## கையும் களவுமாய் மாட்டினான் திருடன்

நவாலியில் கடந்த ஞாயிறு இரவு ஒட்டு வேலை செய்யும் றான்ஸ்போமர் இயந்திரத்தை திருடிச் சென்றவர் நவாலி முருகமூர்த்தி கோயிலில் வைத்து சில இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நவாலி கலை யரசு வீதியிலுள்ள சிவபாதம் என்பவரது வெல்டிங் கராச்சில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் கராச்சில் யாருமில்லாத நேரம் உள்ளே புகுந்த இருவர் பெறுமதி மிக்க இந்த இயந்திரத்தை திருடிக் கொண்டு முருகமூர்த்தி வீதி வழியாக சென்ற சமயம் அந்த இடத்தில் நின்ற சில இளைஞர்கள் சந்தேகம் கொண்டு இவர்களை விசாரித்தபோது ஒருவர் இயந்திரத்தை கீழே எறிந்து விட்டு ஓட முயன்ற வேளை மடக்கிப் பிடிக்கப்பட்டார். மற்றையவர் ஓடித் தப்பியுள்ளார்.

இது பற்றி மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக் கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து குறித்த நபரைக் கைது செய்து கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-100)

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

தென்மராட்சி, செப்.18

சுகதேகியான குடும்பஸ்தருக்கு வலிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

இரவு உணவருந்தி விட்டு படுக்கைக்குச் சென்றதாகவும் அதிகாலையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாகக் கூறிய வேளையில் வலிப்பு ஏற்பட்டதாகவும் உடனடியாக வைத் தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் சாவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை மேற்கு பங்களாவீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது-60) என்பவரே சாவடைந்தவராவார்.

இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-9)

## மோ.சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

தென்மராட்சி,செப்.18

மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியை வேறொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் சாவகச்சேரி பெருங்குளம் சந்தியை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பெண்கள் மட்டுவிலில் உள்ள தமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

சனநடமாட்டமில்லாத பகுதியில் பின்புறமிருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவர்களைக் கடந்து செல்ல முற்பட்ட வேளையில் அதனை ஓட்டி வந்த நபர் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடி தலைமறைவானார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (வ-9)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா
குலசேகரம்பிள்ளை J.P

அன்னை மடியில்
30.08.1926

அரன் அடியில்
14.10.1997
(திதி: சதுர்த்தசி)

ஆலமரத்துக் கிளிகளை
அணைத்து வளர்த்த மொழிகளை
சோலைக் குயிலாய்க் கூவிய
ஆலைக் கரும்பாய் ஆடிய
நேசம் கொண்ட காதல் மனைவியை
பாசம் வளர்த்த காதல் வாழ்வின் வழிகளை
பார்த்திருந்த பாசம் கொண்ட விழிகளை
நீர் நிறைந்து நெருடுதே!
நீண்ட பதினாறு ஆண்டுகள் நிமிடமானதே!

குடும்பத்தினர்.

நி.முகவரி: பழமுதிர் சோலை
எழுது மட்டுவாழ்.

த.முகவரி: மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

(31797) (.45.4.6.3)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



திருமதி
இரத்தினபூபதி
உருத்திரன்

மண்ணில்
14.06.1952

விண்ணில்
02.10.2009
திதி: சதுர்த்தசி

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாத துயர் மட்டும் இன்றும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்கதாத நினைவுகளும்
எமை விட்டுப் போகவில்லை அம்மையே எங்களோடுதான்
என்றும் வாழ்ந்திடுவீர்
வருடங்கள் எத்தனையானாலும்.

"பூபதி அகம்"
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(38923)(45.3.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நிறைவில் நினைவஞ்சலி



தோற்றம்
21.09.1921

மறைவு
18.09.2012

திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம்

ஆண்டுத் திவச திதி - புரட்டாதி பூர்வபக்க திருதியை (07.10.2013)

என்றும் உங்கள் இனிய நினைவுகள்
எமது நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் உங்கள்
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

அன்பு மகள், மருமக்கள், பெறாமகன்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

19, கடவைப்புலம்,
சுன்னாகம்.

(31772)(45.3.6)

## நீங்கா நினைவுகளுடன்...

### அமரர் ஆனந்தன் செல்வநாதன்



மண்ணில்
21.05.1948

விண்ணில்
01.08.2013

அப்பா!
நெஞ்சம் கனக்கிறது விழிகள் சொரிகிறது
சொல்ல வார்த்தைகளோ இல்லை அப்பா
தாங்க முடியாத சோகத்தை எமக்களித்து
எமைவிட்டு எங்கு சென்றுவிட்டீர்கள்?

ஆலமரமாய் நீங்கள் அரவணைத்தீர்கள்
விழுதுகளாய் நாம் இருந்தோம் அப்பா
காலமது செய்த கொடுமையிது
தனித்துவிட்டோம் நாம் இங்கே.

காவல் தெய்வமாக எங்களை எப்போதும்
கண்போல பாதுகாத்தீர்களே அப்பா
நொந்து தவிக்கின்றோம் நாங்கள் இங்கே
நடந்தது எல்லாம் கனவாகத் தோன்றுகின்றதே.

நினைவுகளை மட்டும் எமக்கு நிழல்களாக்கி
நெடுதூரம் ஏனப்பா விரைந்தீர்கள்?
கனவுகள் நாங்கள் காண்பதற்கா அப்பா
அயராது எமக்காக பாடுபட்டீர்கள்.

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன இங்கே
உங்கள் அன்பிற்கு யாரப்பா ஈடாகுவர்
நிரப்ப முடியாத வெற்றிடத்தை உருவாக்கி
எம்மை நிலைதடுமாற வைத்தீர்களே அப்பா.

பருவங்கள் கடந்தபோதும் என்றும்
பாலகர்களாய் எமைநினைக்கும்
அருமை அப்பாவே நீங்கள்
எமைப்பிரிய எப்படி நினைத்தீர்கள்?

கூடிக்களித்திருந்த எம் கூட்டைவிட்டு
நீங்கள் மட்டும் பறந்து விட்டீர்கள்
தேடிக்களைத்து விட்டோம் அப்பா
எங்குமே நீங்கள் இல்லை.

உங்கள் நலம் நேசிக்காது
எங்களை மட்டுமே நேசித்தீர்கள் அப்பா
கடவுளும் உங்களை அதிகம் நேசித்ததாலோ
விரைந்து உங்களை அழைத்துவிட்டார்.

எங்களை உலகிற்கு அளித்தவரே
இன்று உங்கள் பிரிவால் நாங்கள்
சிந்தும் கண்ணீருடன் உங்களிடம்
வரம் ஒன்று கேட்கிறோம் அப்பா

அடுத்த பிறவியிலும் உங்களுக்கே
நாங்கள் பிள்ளைகளாகப் பிறக்கவேண்டும்
தெய்வமாகிவிட்ட நீங்கள் எங்களுக்கு
என்றென்றும் வழிகாட்டவேண்டும் அப்பா.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் ... 18.09.2013 புதன்கிழமை ... 11.00 மணியளவில் ... (TCT) ...

22, ... வீதி,
... 
தொ.பே: 0775386471

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



கோப்பாய் பிராமணோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சண்முகநாதன் (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் (துணாவில்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, செல்லையா, தங்கம்மா, Dr.இராசரத்தினம் மற்றும் தவேந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் வெற்றிவேல் (உசன்), காலஞ்சென்ற அரியரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தேவகி (கனடா), ராகினி (பிரான்ஸ்), ரஜனி (ஜேர்மனி), Dr.சுமதி (பதில் வைத்திய அத்தியட்சகர் D.A.H வவுனியா), தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் ஸ்ரீதரன், மாரிக்குமார், காலஞ்சென்ற Dr. சிவசுதன் மற்றும் ஸ்ரீரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிகா, ரஜிக்கா, கிரிசாந்தன், சந்தியா, சோபிஜா, திவ்யா, பிரியதர்ஷினி,சவீஸ், வேணுகா, தேனுகா, கோபிகா, தர்ஜன், சும்சன், சத்ஜன், பத்மஸ்ரீ, கோகுலஸ்ரீ, மதுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்சயின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.09.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் ஆ.சு.த. கோப்பாய்.077 662 1002.

(31780)(4.6.3)

தகவல்: த.ஸ்ரீரூபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரப்புரையின் இறுதிநாள் இன்று முழு மூச்சுடன் கட்சிகள் களத்தில்

## நான்கு முனைகளைத் திறந்து யாழில் கூட்டமைப்பு அடித்தாடுகிறது

தேர்தல் பரப்புரைகள் இன்று நள்ளிரவுடன் முடிவுக்குவரும் நிலையில், பிரதான கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் தமது இறுதி பரப்புரை களை பெருமெடுப்புடன் முன்னெடுக்கவுள்ளன.

வடக்கில் பிரதான கட்சியாகத் திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதிக்கட்டப் பரப்புரையை யாழில் நான்கு முனைகளில் முன்னெடுக்க வுள்ளது.

நல்லூர், குருநகர், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள பரப்புரைக் கூட்டங்களில் கட்சித் தலைவர் சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் என கட்சி பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதி பரப்புரைக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று பிற்பகல் கண்டியில் நடைபெறவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வென்னப்புவில் தனது இறுதிப் பரப் புரையை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடத்தவுள்ளது.

அதேவேளை, ஜே.வி.பியின் இறுதிப் பரப்புரைக் கூட்டங்கள் கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் கண்டியிலும் குருநாகலை யிலும் நடைபெறவுள்ளன.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் இன்று தீவிர பரப்புரை களை முன்னெடுக்கவுள்ளன.

# மனித உரிமை ஆணைக்குழுவும் வடக்கில் தேர்தல் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம்,செப். 18

வடமாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஈடுபடவுள்ளது.

இதற்காகக் கொழும்பிலிருந்து விசேட குழுவினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என்று ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

"மாகாண சபைத் தேர்தல் நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கேற்ப அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றதா என்பதைக் கண்காணித்துத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ள நாம் தீர்மானித்துளோம்.

அரசஉத்தியோகத்தர்கள்மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் மூலம் அரச சொத்துக்கள், வளங்கள், தான்தோன்றித்தனமாக - பக்கச் சார்பாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் இதன் கீழ் இடம்பெறும்" என்று இணைப்பாளர் கனகராஜ் மேலும் கூறினார்.

"தேர்தல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் சகல தேர்தல் விதி முறை மீறல்கள் தொடர்பாக மக்கள் முறைப்பாடு செய்ய முடியும். முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு, அவசர அழைப்பு 1996 அல்லது 0112689064, 021 222 2021, 024 222 2029 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்க முடியும் - என்றார். (த-5)

# உரிமைக் குரலை நிலைநாட்ட வாக்களிப்போம் வீட்டுக்கு

## வடமாகாண அரச ஊழியர்களில் ஒரு சாரார் அழைப்பு

எப்போதும் தமிழ் மக்களுக்காக துணிந்து குரல் கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் வடமாகாண அரச ஊழியர்களில் ஒரு சாரார். இது குறித்து அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழர்களின் பிரதிநிதிகளாக சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது.

எனவே வலிமையான தமிழ் அரசை மாகாண சபையில் அமர்த்துவதற்கும் சர்வதேசத்தின் ஆதரவை தமிழினத்தின் பக்கம் இன்னமும் அதிகரிக்கச் செய்வதற்கும் எமக்குள்ள ஒரே வழி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பது தான்.

அதன் மூலம் தான் எங்களுடைய உரிமைப் போராட்டத்தின் அவசியத்தை சர்வதேச ரீதியில் உணர்த்த முடியும்.

கடந்த காலங்களில் போர் மூண்டிருந்த வேளை, வடபகுதி பொருளாதாரத் தடையால் அவதிப்பட்ட போது அரச ஊழியர்களும் தாங்க முடியாத வாழ்க்கைச் சுமையால் தள்ளாடினர். அப்போது அரச ஊழியர்களுக்கும் மக்களுக்கும் சலுகை காட்ட வேண்டும் என்று பல முறை அரசிடம் உத்தியோக பூர்வமாக கேட்டிருந்தோம்.

ஆனால் அப்போதெல்லாம் எம்மை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் எங்களது கோரிக்கையை கேளாதது போலவே இருந்தது இலங்கை அரசு. இந்த நிலையில் தான் இப்போது அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று பல்வேறு சலுகைகளை வழங்க முன் வருகிறார்கள். நாங்கள் கேட்ட போது தக்க தருணத்தில் தராத சலுகைகளை இப்போது தந்து என்ன பயன். இந்தச் சலுகைகள் ஒன்றும் எங்களுக்காக அல்ல. எங்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கே சலுகைகளைத் தந்து ஆளும் தரப்பு ஏமாற்றப் பார்க்கிறது.

எப்போதும் சலுகை அரசியல் என்பது நிலைத்து நிற்கும் ஒன்றல்ல. இதையே கடந்த கால அனுபவங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

காப்பெற் வீதி போடுவது, மின்சாரம் வழங்குவது, ரயில் ஓடுவது எல்லாமே வடபகுதிக்கு மட்டும் செய்யும் தனிப்பட்ட சலுகை அல்ல. இது தேசியக் கொள்கை சம்பந்தப்பட்ட விடயம். நாட்டின் எல்லா இடங்களிலும் இந்தச் சேவைகளை வழங்க வேண்டியது அரசின் கடமை. கடமையை சலுகையாகக் காட்டி வாக்குப் பெற முயல்வது கபடத்தனம்.

தமிழ் பேசும் மக்கள் கடந்த கால கசப்பான அனுபவங்களை ஒருபோதும் மறந்துவிடவில்லை. மறந்துவிடவும் கூடாது. தொடர்ந்தும் சலுகைகளை நம்பி ஏமாறாமல் எமது சொந்தக் காலில் நிற்கவேண்டிய காலம் வந்து விட்டது. இதற்குரிய சந்தர்ப்பம் நமக்கு மாகாண சபைத் தேர்தலில் வாய்த்திருக்கிறது. கடந்தவாரம் நடைபெற்று முடிந்த தபால் மூல வாக்களிப்பில் பெரும்பான்மையான அரச உத்தியோகத்தர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்துள்ளோம். இதன் மூலம் எங்களது உரிமையை நாங்கள் காப்பாற்றி விட்டதாக நம்புகிறோம்.

அதேபோன்று ஏனைய மக்களும் தங்களுடைய உரிமைகளை செப்ரெம்பர் 21 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்க வாக்களிப்பதன் மூலம் நிலை நாட்டவேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தல் முடிவை தமிழ் மக்களும் இலங்கை அரசும் மட்டு மல்லாது சர்வதேசமும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் தமிழர்களின் தலைமைத்துவத்தை எங்கள் வாக்குகள் மூலம் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டியது எங்கள் வரலாற்றுக் கடமை. ஜனநாயக ரீதியில் குரல் கொடுக்கும் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரிப்பதை உலகுக்கு எடுத்துரைப்போம்.- என்றுள்ளது. (ங)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கூட்டமைப்பு

துள்ளது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் நேற்று நண்பகல் யாழ். - பருத்தித்துறை வீதியில் உள்ள யாழ். சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் குருமார்களைச் சந்தித்து ஆசிபெற்றுக்கொள்ளஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கமைய கூட்டமைப்பு வேட்பாளர் சிலர் இந்துக் குருமார் ஒன்றிய அலுவலகத்துக்கு நேற்று நண்பகல் சென்றிருந்தனர். இந்த நேரத்தில் யாழ். பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரன் அங்கு வந்துள்ளார்.

"இந்துக் குருமார் ஒன்றியம் அமைந்துள்ள கட்டடம் அரசுக்குச் சொந்தமானது. எனவே தேர்தல் விதிகளின் படி அரச சொத்துக்களை பயன்படுத்த முடியாது. ஆகவே இங்கு வேட்பாளர்களுக்கு ஆசி வழங்க முடியாது. வேண்டும் என்றால் கோயிலுக்கு அழைத்துச் சென்று ஆசி வழங்குங்கள்" என்று இந்துக் குருக்களிடம் கூறிய பிரதேச செயலர், அங்கிருந்த வேட்பாளர்களையும் வெளியேறுமாறும் கூறினார்.

ஆயினும் இது ஒரு அரசியல் நிகழ்வு அல்ல. இது ஆசி வழங்கும் நிகழ்வு. ஆசி பெறுவதை எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என்று இந்து குருமார் பிரதேச செயலருக்கு எடுத்து விளக்கினர்.

ஒருவருக்கு ஆசி வழங்குவது குருக்களின் கடமை. அது எந்தக் கட்சியாக இருந்தாலும் நாங்கள் ஆசி வழங்குவோம் என்று குருமார்கள் மேலும் கூறினர். ஆயினும் சுகுணரதி தனது முடிவில் விடாப்பிடியாக இருந்தார். கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு அங்கு வைத்து ஆசி வழங்க முடியாது என்று அடித்துக் கூறிவிட்டார்.

இதனையடுத்து தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கும் வகையில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

சுகுணரதியின் இந்தச் செயல் வடக்கில் உள்ள இந்துக்களை அவமதிக்கும் நடவடிக்கை என்று சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது. (த-4)

### இராமநாதன்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் அங்கஜனின் தந்தையான இராமநாதன் சாவகச்சேரியில் பிரசாரத்தில் ஈடுபட்டிந்த போது இந்தக் குற்றத்தைச் செய்ய முற்பட்டதாக அதே கட்சியில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளர் முறைப்பாடு செய்திருந்தார். அதன் அடிப்படையில் இராமநாதன் கடந்த 28 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை விளக் கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தர விட்டது.

இந்த நிலையிலேயே பிணை விண்ணப்பம் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

இதன்படி அவர் 5 லட்சம் ரூபா சரப் பிணையிலும், தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

இதுதவிர மாதாந்தம் இறுதி வெள்ளிக்கிழமைகளில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும், கட்சிகளுக்கு இடையூறு செய்யக்கூடாது என்றும், விசாரணைகளுக்குக் குறுக்கீடு செய்யக்கூடாது என்றும் வெளிநாடு செல்ல முடியாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டது. இந்த நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் பிணை ரத்துச் செய்யப்பட்டு இராமநாதன் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவர் என்றும், நீதிமன்று உத்தரவிட்டது. சந்தேக நபர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாணக்க ரணசிங்க முன்னிலையானார். (4)

### கூட்டமைப்பினர்

குழுவினர் கொட்டன்கள் மற்றும் கோடரி என்பவற்றினால் அவர்களைத் தாக்கினர் என்றும், இதனால் பிரசாரப் பணியில் ஈடுபட்ட அனைவரும் சிதறி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது இருவர் தலையிலும் கையிலும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். கந்தசாமி சசிதரன் (வயது 37), முருகையா பாரதிதாசன் (வயது 27) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

கடந்த வாரமும் தென்மராட்சி தெற்கு பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எட்டுப் பேர் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டதுடன் அவர்களின் வாகனமும் சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9-288)

### வடக்கில்

என்பதனால் நாம் மக்களை இந்தத் தேர்தலில் பங்குபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்." என்று அந்த அமைப்பு அந்த அறிக்கையில் கோரி உள்ளது.

"எமது நிலம், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு போன்ற தமிழரின் தனித் தேசத்துக்குரிய கூறுகள் யாவற்றையும் அழிக்கும் இலங்கை [illegible] ஒத்தியாங்கும் கட்சிகளைத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என நாம் வேண்டுகிறோம். தொடரும் இனவழிப்பின் ஓர் அங்கமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைக் காவுகொண்ட இந்த இனப்படுகொலை அரசுக்கோ அதனது கொள்கைகளுக்கோ வக்காலத்து வாங்கும் கட்சிகளுக்கோ மக்கள் வாக்களிப்பது வரலாற்றுத் தவறாகிவிடும்.

அபிவிருத்தியையே தமிழ் மக்கள் கோருகிறார்கள் உரிமைகளையல்ல எனக் கூறி தமிழ் மக்களது உரிமைகளை மறுதலிக்கின்ற காட்டிக்கொடுப்பு அரசியலை நாம் தொடாச்சியாக நிராகரித்தாகவேண்டும்." என்று அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

### வடக்கை 2

பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இலங்கைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வெள்ளையர்களுடன் அன்று போராடிய எமது தலைவர் அநாகரிக தர்மபாலவின் 149 ஆவது ஜனன தினமான இன்று (நேற்று) பௌத்தத்தைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தை நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

சர்வமதக் கொள்கையையும், சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் இலங்கை சொந்தம் என்ற வாதங்களையும் எதிர்த்த அநாகரிக தர்மபால, விகாரைக்கு அருகில் கோவில், பள்ளிகள் உருவாகும் நிலை ஏற்படும் என்றார். அவர் அன்று கூறியது இன்று அப்படியே நடந்துள்ளது.

எனவே, எமது இனம் முகங்கொடுத்துள்ள இந்த அபாயத் [illegible] மீட்க பல [illegible] எமக்குத் தேவை. நாட்டிலுள்ள சிங்கள பௌத்தர்கள் அனைவரும் அநாகரிக தர்மபால ஆக வேண்டும். அவருடைய கொள்கைகளினூடாக மட்டுமே பௌத்தத்தைக் காக்க முடியும். அத்துடன், பாணந்துறை வாதத்தையும் மீள உருவாக்க வேண்டும்.

#### பௌத்த கொள்கை நாடு

பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க அநாகரிக தர்மபாலவின் கொள்கைகளை வடக்கில் தற்போது சிங்களவர்கள் இல்லாததால், கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதும் சமூகமயப்படுத்த வேண்டும். இதனூடாக சிங்கள பௌத்தர்களை தேசிய மட்டத்தில் ஒன்றிணைந்து பௌத்த கொள்கையின் கீழான சமூகத்தை உருவாக்குவோம். அத்துடன், ஒரு இலட்சம் தர்மபாலர்களையும் உருவாக்குவோம்.

இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்தவிருக்கும் இந்தத் திட்டத்தில் நாடு முழுவதும் இரண்டாயிரம் பொதுக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். தர்மபாலவின் கொள்கைகளை சமூகமயப்படுத்தி இரண்டாயிரம் பிக்குகளை உருவாக்கி, நாடு முழுவதுமுள்ள 10 ஆயிரம் விகாரைகளில் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் அநாகரிக தர்மபாலவின் கொள்கைகள் அடங்கிய 10 இலட்சம் கையேடுகளை விநியோகிக்க உள்ளதுடன், நாடளாவிய ரீதியில் 5 யாத்திரைகளையும் ஒழுங்கு செய்யவுள்ளோம்" - என்றார்.

இதன்போது, ஏனைய சிங்கள, பௌத்த அமைப்புகளையும் இந்த வேலைத்திட்டத்தில் பொது பலசேனா இணைத்துக் கொள்ளுமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

"ஆம். இதுவரையில் பல சிங்கள, பௌத்த அமைப்புகளுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். எமது நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அவை இணக்கம் தெரிவித்துள்ளன. இன்னும் பல அமைப்புகளுடனும் நாம் தற்போது பேசி வருகிறோம்.

நாட்டிலுள்ள அனைத்து சிங்கள பௌத்தர்களும் அரசியல் பேதங்களைக் கடந்து எமக்கு ஆதரவளிக்கவேண்டும்" என்றார்.

வடக்கிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,

"யுத்த காலத்தில் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்கள் அங்கு மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். சிங்களவர்கள் அங்கு குடியமர்த்தப்பட்டவுடன், அங்கும் எமது நடவடிக்கையை மேற்கொள்வோம்" என்றார்.

### கோபாலசுவாமி

தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகச் சர்வதேச கண்காணிப்பாளர்கள் வடக்குக்கு வருகை தந்துள்ளனர். பொதுநலவர்யக் கண்காணிப்புக் குழு, ஆசியான் மற்றும் தெற்காசியக் கண்காணிப்புக்குழு என்பன இதில் அடங்கியுள்ளன.

இவற்றில் தெற்காசியக் கண்காணிப்புக் குழுவே யாழ். மாவட்டத்தில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளது. இந்தக் குழுவுக்கு இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் கோபாலசுவாமி தலைமை தாங்குகின்றார். இந்தக் குழுவில் உள்ள 7 பேரில் பங்களாதேஷ், பாகிஸ்தான் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர், உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசத்திற்கு ஒளியூட்டிய மைந்தன்

பல வருடங்களாக மின்சார வசதி காணப்படாத எம் தென்மராட்சி பிரதேசங்களான கச்சாய், பாலாவி, தவசிகுளம், கொடிகாமம், எழுதுமட்டுவாழ், மந்துவில் ஆகிய பகுதிகளுக்கு கடந்த ஆறுமாத கால அயராத முயற்சியால் மின்சார வசதியை ஏற்படுத்தித் தந்த எம் மைந்தன்



## அங்கஜன் இராமநாதன்

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். இது வரை காலமும் தென்மராட்சி மண்ணிலிருந்து பலரால் செய்ய முடியாததை நீங்கள் செய்து காட்டினீர்கள். உங்களது பணிகளை நாங்கள் அறிவோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இருந்து தங்களது சேவைகளை வழங்கினீர்கள். இனி வரும் காலங்களில் உங்கள் உள்ளம் போல் உயர்ந்து, உமக்குரிய பதவியை அடைந்திட எமது மக்களது ஆதரவையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

BEST WISHES

பாராட்டி வாழ்த்துவோர்:
பிரதேச வாழ் மக்கள்

(31853)(11.6.3)

## பாம்பால் கடியுண்டவர் ஆஸ்பத்திரியில்

வளவு துப்புரவாக்கும் பணி யில் ஈடுபட்ட நபர் புடையன் பாம் பால் கடியுண்டார். இந்தச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. மறவன்புலோவில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜயாத்துரை இரத்தினம் (வயது 58) என்பவர் பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## விபத்தில் காயம்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் வயோதிபர் ஒருவர் தலையில் பலத்த காயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள பெரிய மதவடியில் இந்த விபத்து இடம்பெற்றது. கோப்பாயைச் சேர்ந்த எஸ். சின்னையா (வயது-79) என்பவரே காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ந-86)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்- 08
ஆதன இலக்கம்-124, (புதிய பதிவு)
நாச்சிமார் கோயில் வீதி, நவாலி

வட்டாரம் 08, நாச்சிமார் கோயில் வீதி, நவாலி ஆதன இலக்கம் 124 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயில் பற்று நவாலி இறை ''சற்குறாவைக் கணக்கன் தோட்டமும் மறு பிரிவுகளும்'' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று (1) குளி 07.91 இந்த ஆதனமானது வவுனியா நெளுக்குளத்தில் வசிக்கும் செல்வராஜா பெண் இந்திராதேவி அவர்களால் நன்கொடை உறுதி மூலம் வவுனியா நெளுக்குளத்தில் வசிக்கும் விஜயரஞ்சன் பெண் ஸ்ரீதேவி ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேறிய 343 ஆம் இலக்க 05.08.2013 ஆம் திகதி நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். ''சற்குறாவைக் கணக்கன் தோட்டமும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு ஒன்று (1) குளி 07.91 உள்ள இந்த ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களு டன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாத விடத்து இந்த ஆதனம் விஜயரஞ்சன் பெண் ஸ்ரீதேவி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்

(32516)(3.6.11)

# இதய பூர்வமான நன்றிகள்



கடந்த 15.09.2013 அன்று சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்ந்த எமது திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்து ஆசி கூறி அன்பளிப்பு நல்கியோருக்கும் வாழ்த்துமடல், தொலைபேசி, தந்தி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலம் வாழ்த்துக்கள் வழங்கியோருக்கும் பத்திரிகைகள் வாயிலாக வாழ்த்துக்கள் நல்கிய யாழ்/போதனா வைத்தியசாலை நண்பர்களுக்கும் அஸ்வினி மல்றி பிளாசா முகாமையாளர், ஊழியர்களுக்கும் மேலும் மணமகன், மணமகள் இல்லங்களில் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொண்டு ஆசி கூறி அன்பளிப்புகள் நல்கிய அன்பர்களுக்கும் இந் நிகழ்விற்கு சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.74, ராஜா பிளாசா
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(31791)(4.6.3)

[illegible] பிரவீனா
தம்பதிகள்.

## காணிகள்விற்பனைக்கு

* ஊரெழு சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக கரந்தன் செல்லும் றோட்டில் ஈறோவில் தொழிற்சாலைக்குக் கிழக்குப் பக்கமாக இருக்கும் றோட்டுக்கு 2ஆவது தோட்டக் காணி 20 பரப்பு விற்பனைக்குண்டு.
* உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு வடக்குப் பக்க மதில் கரையாக செல்லும் 3½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

தொ.பே: 077 177 6499, 077 269 0482

(31788)(7.8.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1963.10.27 இல் பிறந்த, தாரம் இழந்த, பெற்றோர் இல்லை, சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. (கணவரை இழந்தவர்களும் விரும்பத்தக்கது.)

தொடர்பு: 077 234 0167 [illegible]

## உடனடி விற்பனைக்கு

* LG XXXX இலக்கம் கொண்ட ஐஸ்கிறீம் வான் (TATA BODY)
* ஐஸ்கிறீம் பாத்கொம்ரேசர்-சிங்கிள் பேஸ் மோட்டர்
* டீசல் ஜெனரேட்டர் 10,000 KV(இந்தியன்)
* டிபிரீசர் * லான்சர் கார் II SRI 1729
* ஜெனரேட்டர் மண்ணெண்ணெய் 2000KV (சைனா)

தொடர்பு: 077 157 3997 [illegible]

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது. 1kg 400/= மட்டும் கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு.

விஜயகுமார் குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.
077 315 1723.

(31805)(4.6.3)

## மாலை நேர தையல் பயிற்சி வகுப்புக்கள்

மகளிருக்கான குழந்தைகள் சட்டை, பிளவுஸ், சுடிதார் பாவாடை சட்டை உட்பட சகல விதமான ஆடைகளும் வெட்டித் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்.

[illegible] மானிப்பாய் வீதி
([illegible]த்துக்கு இடையில்)
தொடர்பு:077 815 6288

(31796)(4.6.3)

## வேலை ஆள்கள் தேவை

தையல் வேலை தெரிந்த (சேட்,ரவுசர்) எண்ணிக்கை அடிப்படையிலும் துண்டுக் கணக்கிலும் ஊதியம் வழங்கப்படும்

தொ.பே: 077 670 1795 [illegible]

## தவறிவிட்டது

சி.மகேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (810685017 V), மோட்டார் வாகன காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன 04.09.2013 அன்று நல்லூர் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.11/2, விவசாயக்குந்தோர் லேன், புத்தூர் சந்தி, நல்லூர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே:071 310 2979 [illegible]

## தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் சஞ்சித் என்பவருடைய தே.அ.அட்டை (921892675V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்ஸுடன் 13.09.2013 வெள்ளி அன்று மீசாலைக்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே:077 930 6259 [illegible]

## விற்பனைக்கு

160, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நல்லின பசு மாடுகள் கன்றுடன் விற்பனைக்குண்டு. இதனை மாலை 4.30 மணி தொடக்கம் 6.00 மணி வரை நேரில் பார்வையிடலாம்.

தொ.பே: 077 548 0755

(31792)(3.11.6)

## Mega

புலமைப்பரிசில் திட்டத்தில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது நடைபெறுகின்றன. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் குறிப்பிட்ட இட ஒதுக்கீடுகளே உள்ளதால் விரைவாக பதிவுகளை மேற்கொண்டு புதிய பிரிவுகளில் இணையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## CSC-ASIAN

COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 021 2225677 | 021 2262399 | 021 2270267 |

| கிளிநொச்சி | வவுனியா |
|---|---|
| 021 2283925 | 024 2226050 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் மூழ்கியவர் சடலமாக மீட்பு

பலப்பிட்டிய, வெள்ளவத்தை கடற் பகுதியில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கி காணாமற்போனவரது சடலம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது. அவரது சடலம் பலப்பிட்டிய, மொஹொட் டிவத்த கடற்பரப்பில் கரையொதுங்கி யுள்ளது.

கரந்தெணிய, ஊரகஹ பிரதேசத்திலிருந்து வெள்ளவத்தை கடற்பரப் புக்கு குளிப்பதற்காக நால்வர் சென் றுள்ளனர்.

அவர்களை அலை அடித்துச் சென்றவேளை மூவர் காப்பாற்றப்பட்ட நிலையில் ஒருவர் காணாமற்போயிருந்தார்.

இந்த நிலையிலேயே காணமல் போனவரின் சடலம் திங்கட்கிழமை கரையொதுங்கியுள்ளது.

(ச)


## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் கமலதாசன்

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.180 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கமலதாசன் நேற்று (17.09.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றபாலசிங்கம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகராசா - கண்ணம்மா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சியாமளாதேவியின் பாசமிகு கணவரும், கிரிதர், விதுஷா, நிருஷன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அரியபுத்திரன், தில்லைநாதன் மற்றும் குணசேகரம், பற்குணராசா, கைலாயநாதன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சகுந்தலாதேவி, அருந்தவராணி, மங்கை (பிரான்ஸ்), அல்லிராணி, காலஞ்சென்றவர்களான சாந்தினிதேவி, பாக்கியராசா, செல்வராசா, கமலாதேவி மற்றும் ரஞ்சினிதேவி, வரதராசா (சின்னாம்பி), தவமணிதேவி (பிள்ளை), நந்தினிதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2013) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 180 ,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

தகவல்; குடும்பத்தினர்


# தேர்தல் கடமைகளுக்காக 24 ஆயிரம் பொலிஸார்

## வன்முறைகளைத் தடுக்க கடும் பாதுகாப்பு

கொழும்பு,செப்.18

மாகாண சபைத் தேர்தல் கடமைகளுக்காக 24 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத் தப்படவுள்ளனர்.

இந்த பொலிஸ் உத்தியோ கத்தர்கள் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகா ணங்களில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக்க சிறிவர்தன கூறினார்.



எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான அனைத்துப் பாதுகாப்பு நட வடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக் கெண்ணும் நிலையங்களில் கடமைகளுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அமைதியான தேர்தலொன்றை நடத்துவதற்கான ஒத்துழைப்பை அரசுக்கும், பொலிஸாருக்கும் வழங்குமாறு பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப் படுத் தப்படவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் தேர்தல் சட்டங் களை மீறுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கும், வன் முறைகளைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறும் பகுதிகளில் நடமாடும் ரோந்துச் சேவைகளும் முன்னெடுக் கப்படவுள்ளன. தற்காலிக வீதித் தடைகளை அமைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

(ச)


# வடமாகாண சபைத் தேர்தல் 2013

## யாழ்மாவட்டம்









நீதியரசர்
சி.வி.விக்கினேஸ்வரன்

**அன்பான வாக்காளப் பெருமக்களே !**

எங்கு அநீதி நடக்கிறதோ அங்கு அவதாரம் எடுக்கும் கிருஷ்ண பரமாத்மா போல துன்பப் பட்டு துவண்டு நிர்க்கதியாக நிற்கும் நம் தமிழினத்திற்கு அந்தக் கிருஷ்ணரே நேரில் வந்தது போல இன்று எமக்கு நீதியரசர் விக்கினேஸ்வரன் கிடைத்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒருமித்த குரலாய் காலத்தின் தேவையறிந்து எமது வருங்கால முதலமைச்சர் நீதியரசர் விக்கினேஸ்வரனை அமோக வெற்றி பெறச் செய்து அவரது குரல் தமிழ் மக்கள் எல்லோரினதும் ஒருமித்த குரலாய் சர்வதேசமெங்கும் ஒலிக்கும் எங்கள் தேசத்தின் குரலாய் ஒலிக்கச் செய்வதற்கு அவரது கரங்களை பலப்படுத்துவோம்.

அத்துடன் நீண்டகாலமாக எனது தொண்டனாக இருந்து எனது அரசியல் பணிகளுக்கு உறுதுணையாக இருந்த சட்டத்தரணி தம்பி சயந்தனை மக்கள் பணிக்கென இலங்கை தமிழரசுக்கட்சிக்கு அர்ப்பணித்துள்ளேன் அவரது மக்கள் பணி தொடர உங்களது அமோக ஆதரவை மிகவும் உரிமையுடன் வேண்டுகிறேன்






சட்டத்தரணி
கேசவன் சயந்தன்

இவ்வண்ணம்
அப்பாத்துரை விநாயகமூர்த்தி
(பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்)


## வாதுவ பொலிஸ் பொறுப்பதிகாரி பணிநீக்கம்

வாதுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

மதுபோதையில் பொலிஸ் நிலையத்தில் கடமைகளில் ஈடுபட்ட குற்றத் துக்காக அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று அப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

பாணந்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய, குறித்த பொலிஸ் நிலையத் துக்கு அவர் சென்ற வேளையில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மது போதையில் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய, வாதுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி செவ்வாய்க்கிழமை முதல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

(ச)


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் தவராசா



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வவுனிக்குளத்தையும், மட்டுவில் தெற்கையும் வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற தபால்தரம் பிரிப்பாளருமான தர்மலிங்கம் தவராசா கடந்த (16.09.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் திருமதி வீ.மதிவேணி, திருமதிஜீ.சுபாலினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.09. 2013) புதன்கிழமை மு.ப. 10.00மணிக்கு தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

31865

## மரண அறிவித்தல்



### திருமதி. செல்வரட்ணம்மா சிவகுருநாதபிள்ளை

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வரட்ணம்மா சிவகுருநாதபிள்ளை நேற்று (17.09.2103) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் சிவகுருநாதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வைரவநாதனின் அன்பு மாமியும், கௌரியாம்பிகை, சிவகுமார், கேதீஸ்வரன், ரட்னேஸ்வரன், சத்தியகுமாரி, விஜயலட்சுமி ஆகியோரின் அம்மம்மாவும் அன்பழகன், கமலதர்சினி, அபிராமி, சிவகாமி, யோகவி, கேசிகன், ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2013)புதன் கிழமை பி.ப. 12 மணிக்க அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C112479)

பிரதான வீதி, மாவடி வட்டுக்கோட்டை

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

**2014 A/L DAY CLASS**

✸ சடப் பொருளின் இயல்புகள் ✸

**MR.N. கபிலன்**

TUE, WED, THU, FRI 3.00 -5.00

ஆரம்பம்- 18.09.2013

TUE 3.00 p.m

## விசேட கருத்தரங்குகள்

SLEAS இற்கு
19ஆம், 28ஆம்,
29ஆம், 5ஆம், 6ஆம்
திகதிகளில் காலை 9.30
தொடக்கம் 3.30 மணிவரை

Charterd
CAB-01 இற்கான கணிதப்
புள்ளி விபரவியலும் மீட்டல்
19ஆம், 20ஆம் திகதி காலை
8.00 மணி

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

T.p 0754164564

## வீடு வாடகைக்கு உண்டு

ஆலடிச் சந்தி ஐயனார் கோவில் வீதி யாழ்ப்பாணம் (மாநகர சபை எல்லைக்குள்) அமைந்துள்ள இரு கடையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(களஞ்சியப்படுத்துவதற்கோ, வாகனங்கள் தரிப்பதற்கோ வசதி உள்ளது)

மேலதிக விவரங்களுக்கு: 0778332748, 0777110523

## குத்தகை/வாடகைக்கு தேவை

கொக்குவிலுக்கும்- யாழ்ப்பாணத்திற்கும் இடையில் k.k.s வீதியில் 3 பரப்புக்கும் 5 பரப்புக்கும் இடைப்பட்ட காணியுடன் கூடிய கட்டடம் உடன் வாடகைக்கு, அல்லது நீண்டநாள் குத்தகைக்கு தேவை.

தொடர்பு:- 0772607614
0777481696

# IELTS

LMC is an effective & efficient learning centre in Sri Lanka

**IELTS: Academic & General**

புதியபிரிவுகள் ஆரம்பம் Week days: 18.09.2013, 23.09.2013 Weekends: 21.09.2013

- Full time & part time class
- Week/ Weekend Days: 9.30am - 1.00pm
- UK student visa செய்யும் மாணவர்களுக்கு இலவச IELTS classes
- British Council test registered centre
- British Council trained lectures

LMC
LONDON METROPOLITAN COLLEGE

**LONDON MERTOPOLITAN COLLEGE**
197, Arasady Road, Jaffna, Sri Lanka
Contact No: 0212227230 | 0217538395
Web: www.lmcjaffna.edu.lk


# தயவு செய்து சிரமம் பாராமல் வாக்களியுங்கள்

- வாக்குரிமை- ஜனநாய உரிமை- சிரமம் பாராமல் வாக்களியுங்கள்
- உங்கள் வாக்கு எமது சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும்
- நீங்கள் வாக்களிக்கத் தவறினால் ஒரு சிறந்த பிரதிநிதி தோற்கடிக்கப்படலாம்
- கடந்த காலங்களுக்காக நிகழ்காலத்தில் வாக்களியுங்கள்
- இம்முறை தவறினால் இன்னொரு வாய்ப்புக்காக 05 வருடங்கள் நீங்கள் காத்திருக்க நேரிடும்
- வாக்களியுங்கள்- ஜனநாயக செயற்பாட்டில் பங்களிப்பு செய்யுங்கள்
- வாக்களியுங்கள்-கடமையை செய்து உரிமை கேளுங்கள்
- வாக்களியுங்கள்-

நேர்மையான, திறமையான, பொதுநலமுள்ள, தலைமைத்துவப் பண்பில் சிறந்த ஒருவரை தெரிவு செய்யுங்கள்
வாக்களிக்காவிட்டால் உங்கள் உரிமையை நீங்களே அழித்துக் கொள்கின்றவர்களாக மாறுகின்றீர்கள்

## எனவே "சிரமம் பாராது" எதிர்வரும் 21 ஆம் திகதியன்று வாக்களியுங்கள்

Home for Human Rights
மனித உரிமைகள் இல்லம்
මානව හිමිකම් නිවහන


## Jaffna College Institute of Technology JCIT

Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

**Apply Immediately**

**Diploma Courses-One Year Full time (two semesters)**

**Civil Draughtsmanship**
Building Construction, Construction Materials, Sanitary Engineering, Engineering Science Engineering Drawing, Draughtsmanship, Quantity Surveying, AutoCAD,, English, Maths

**Computer Certificate Courses 2/3/4 months Part time**

**Microsoft Office**
- Ms Word
- Ms Excel
- Ms Access
- Ms Power point

Internet & E-Mail
Introduction (Optional),
WAN – Network Portals and search Engines,
(Including Boolean algebra)
HTML – Introduction

**Computer Graphic Designer**
- Page Maker
- Corel Draw
- Photoshop

More Information
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 321 3139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk Web: www.jcit.lk

Why we are Special
- Unlimited computer practical hours are offered.
- Payments could be made in 2 installments.
- Individual attention by qualified Lecturers .
- The computer laboratory is opened for flexible practical hours.
- Facilities: Hostel , library & Sports etc.

## IDM Nations Campus
Since 1981

**Nations Campus**
**Jaffna Branch**
Managed by Aharam Solution (Pvt) Ltd.
#216, Navalar Road, Jaffna.

**Double Diploma**
**Diploma in Computing +**
**(Bus. Management, Law, QS, Constru.Mgt)**

UNIVERSITY UGC RECOGNIZED AWARDED DEGREE

*After the Completion of Any Diploma Course - Convocation at BMICH, Colombo.*

FREE **"One Day Workshop" with Certificate**
Programming with Android, Hardware & Networking, Multimedia
On 25th September 2013 (Wednesday)


**SELECTION EXAM**
on 19th of September (Thursday) 9:00AM
Call and reserve your seat

தொடர்புகளுக்கு : 021 222 9901 | 077 563 2056


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ...னதை ஒருநிலைப்படுத்தினால் ...றிவுத் திறனை மேம்படுத்தலாம்





நாம் வாழ்க்கையில் சாதிக்க வேண் டும் என்றால், எந்தவொரு செயலை யும் முழு கவனத்துடன் ஒருங் கிணைந்த மனதுடன் ஈடுபட வேண் டும். மனதை ஒருமுகப்படுத்தும் போது நாம் எடுத்த காரியத்தை சிறப்புடன் முடித்து வெற்றி வாகை சூடலாம்.

ஒருநிலைப்படுத்தப்பட்ட மூளையில் தான் எந்த ஒரு தகவலையும் ஒருங் கிணைத்து சேகரிக்க முடியும். மூளை எப்போதும் ஆரோக்கியமாகவும் துடிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் செயற் படுத்துவதற்கான பயிற்சிகளை நாம் தினமும் மேற்கொள்ள வேண்டும். மூளை சரியாக இயங்கும்போது நாம் செய்ய நினைத்த காரியத்தை சுலப மாக குறித்த நேரத்தில் செய்ய முடி கிறது. மூளையானது குறிப்பிட்ட தகவல் களை ஆழமாகவும் வேகமாகவும் தொடர்புடைய தகவல்களை நினைவு கூர்ந்து எம்மை செயற்பட வைக்கிறது. மூளை பலத்துடன் இயங்குவதற்கு தொடர்ந்து நாம் சில விடயங்களை பின்பற்ற வேண்டும்.

தினமும் 2 லீற்றர் தண் ணீரை பருக வேண் டும். 6-8 மணி நேர உறக்கம் கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண்டும். காய்கறி கள், பழங்கள் தின மும் உணவில் சேர்த் துக் கொள்ளலாம். விற்றமின் சத்து அதிகமுள்ள தாணியங்களை எடுத் துக் கொள்ளலாம்.

மூளையின் பலத்தை அதிகரிக்க கூடுதல் திறனை வளர்த்துக் கொள்வது அவசியம். எந்த ஒரு செயலில் ஈடுபடும்போதும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அழுத்தம் கொடுக்காமல் அறிவுத் திறனை வளர்க்கும் செயலில் எம்மை ஈடுபடுத்த வேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு விடயமும் மூளைக்குத் தொடர்புடையது. எனவே மனஅழுத்தத்துடன் எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் தெளிந்த சிந்தனையுடன் மனதை ஒருமுகப்படுத்தி செயற்பட்டால் நாம் அடைய விரும்பும் இலக்கை சுலபமாகக் கைபற்ற முடியும்.

WESTPOINT® FRANCE TROPICAL

உணர்வலைகளை உருவாக்கும்

உத்தரவாதம்*

சிறந்த தரம்

30 வருடங்களுக்கு அதிகமாக இலங்கையில் மிக நம்பிக்கைக்குரிய சின்னம்

ஏக முகவர் :
வெஸ்ட் பொயின்ட் இண்டர்நெஷனல் டிரேடிங் (பிரை) லிமிட்டெட்
# 48, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு 05.
தொ.பேசி : 94-11-2553990
தொ.பேசி/தொ.நகல் : 94-11-2504407
இ-மெயில் : westpoint@sltnet.lk

- குறைந்த மின்சாரப் பாவனை
- பொருத்துதல் மற்றும் சேவைகளை எமது தொழில்நுட்பவியலாளர்கள் மேற்கொள்வர்
- 4m செப்பு குழாய் இணைப்பு (9,000 - 24,000 BTU)

டிஜிட்டல் டிஸ்பிளே (9,000 - 24,000 BTU)
தாமதித்து ஆரம்பித்தல் *
மிகக் கவர்ச்சியான உறுதியான உள்ளக அலகு

- போதியளவு உதிரிப்பாகங்கள் கையிருப்பில்
- வெளி அலகுகளுக்காக துருப்பிடிக்காத பாதுகாப்பு பெயின்ட்
- விற்பனைக்கு பின்னரான தாராளமான சேவை நாடுமுழுவதும்

கையிருப்பிலுள்ளது
9,000 BTU - 24,000 BTU சுவர் இணைப்பு
36,000 BTU - 60,000 BTU சீலிங் இணைப்பு

ரூ. 46,500/= இலிருந்து*



* நிபந்தனைகளுக்குட்பட்டது


## உங்கள் நாணயத் தாளினை தெரிந்துக் கொள்ளுங்கள்.

முன்பு வழங்கப்பட்டவை



① ③ ②

ஞாபகார்த்த தாள்



① ② ③

தற்போது வழங்கப்படுகின்றவை



① ② ③ ③

### ① நீர்வரி அடையாளத்தை பாருங்கள்



தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினைப் பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.



தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினை பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.



தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக நாணயத் தாளின் வலப் புறத்திலுள்ள பறவையே காணப்படுவதைப் பார்க்கலாம். நாணயத் தாளின் பெறுமதி இலக்கங்களில் நிலைக்குத்தாக தெளிவான நீர்வரி அடையாளமாகக் காணப்படுகிறது.

### ② பாதுகாப்பு நூலினைப் பாருங்கள்



சாய்த்துப் பிடிக்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய நூல் அல்லது உருவமைப்புடன்கூடிய அடர்த்தியான வெள்ளி நூல் அல்லது உடைந்தக் கோடு போல் தென்படும் மெல்லிய வெள்ளி நூல். தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.



உடைந்தக் கோடு போல் தென்படும் வெள்ளி நூல். தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "CBSL 1000" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.



தாளினை சாய்த்துப் பார்க்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய அடர்த்தியான யன்னல் வடிவிலான நூல். வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "RS 1000" மற்றும் "CBSL" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய தொடர்ந்துச் செல்லும் நூலினைக் காணக்கூடியதாயிருக்கும்.

### ③ மேற்கிளம்பிய அச்சிடலை உணருங்கள்



தாளின் மீது உங்கள் விரல் நுனியினை ஓடவிடுவதன் மூலம் தடிப்பான மை படர்ந்த இடங்கள் அல்லது மேற்கிளம்பிய அச்சிடல் தாக்கத்தினை உணருங்கள். (உதாரணம், மத்திய வங்கி என்ற தலைப்பு, புதிய தொடரில் இரு ஓரங்களிலும் காணப்படும் தொட்டறியக்கூடிய நாடா, மத்தியிலுள்ள படங்கள் முதலியன)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

100% பருத்திக் கம்பளியினால் தயாரிக்கப்பட்ட நாணயத் தாள் சாதாரண கடதாசியிலுள்ள எழுத்துக்களிலிருந்து வேறுபடுவதனை உணருங்கள்.

இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 ☎ 0112477355, 011477587 0112477726, 0112477701 @ currency@cbsl.lk www.cbsl.gov.lk

குற்றக் கோவையின் கீழ் ... தண்டனைக்குரிய குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org